பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஐப்பசி 17 செவ்வாய்க்கிழமை (03.11.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 342

# பொன்சேகாவை விசாரிக்கக் கூடாது; அமெரிக்காவிடம் இலங்கை எதிர்ப்பு!

## கொழும்பில் உள்ள தூதுவரை அழைத்து ரோஹித தெரிவிப்பு





கொழும்பு, நவம்பர் 03

முன்னாள் இராணுவத் தளபதியும் கூட்டுப்படைத் தலைமை அதிகாரியுமான சரத் பொன்சேகாவை அமெரிக்க அரசாங்கம் அங்குவைத்து விசாரிப்பதற்கு இலங்கை அரசு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. அவரை விசாரிக்கும் நடவடிக்கையைக் கைவிட வேண்டும் என்று காட்டமாக வலியுறுத்தி உள்ளது.

இலங்கையின் உத்தியோகபூர்வ எதிர்ப்பை வெளியுறவுத்துறை அமைச்சர் ரோஹித போகொல்லாகம கொழும்பில் உள்ள அமெரிக்க தூதுவர் பற்றீசியா புட்டினஸை நேற்று தமது அமைச்சுக்கு அழைத்து கடுமையாகத் தெரிவித்தார். (20ஆம் பக்கம் பார்க்க)

### கல்விச் சுடர்

**உள்ளே**

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான விஞ்ஞானம்-I,II பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்கள்.

**நாளை**

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான விஞ்ஞானம்- II தமிழ் மொழியும் இலக்கியமும் III பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள்.

## முப்படைகளின் தளபதி என்ற வகையில் "என்னிடம் விசாரியுங்கள்" என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு நவ.03

இலங்கையின் யுத்தக்குற்றம் தொடர்பாக அமெரிக்கா எதனையும் தெரிந்து கொள்ள வேண்டுமானால், அதனை தம்மிடம் கேட்கவேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கூட்டுப்படை தலைமையதிகாரி சரத் பொன்சேகாவை அமெரிக்கா விசாரணை செய்யப்போவதாக வெளியான தகவல், இலங்கையின் அரசியல் தரப்பில், முக்கிய பிரச்சினையாக எழுந்துள்ளது.

இந்த நிலையில் இது தொடர்பில் ஜனாதிபதி முக்கிய அமைச்சர் (20ஆம் பக்கம் பார்க்க)



## எதற்காகவும் யாரையும் காட்டிக்கொடுக்க மாட்டேன் சரத் பொன்சேகா தெரிவிப்பு

வாஷிங்ரன், நவ.03

"எனது தனிப்பட்ட நன்மைகளுக்காக நான் எவரையும் காட்டிக் கொடுக்கமாட்டேன்" - என்று ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிலுள்ள ஹெல உறுமயவின் பிரமுகர்களைச் சந்தித்துக் கலந்துரையாடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நான் எனது தேவைகளுக்காக யாரையும் ஏமாற்றமாட்டேன். அதேவேளை 'நாட்டையும் விட்டுக் கொடுக்கமாட்டேன். எனது தனிப்பட்ட (20ஆம் பக்கம் பார்க்க)



## கே.பி.யின் விசாரணை தொடர்பாக இலங்கை – இந்தியா உறவில் விரிசல்

கொழும்பு, நவ. 03

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான இராஜதந்திர உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளதென்று கொழும்பில் உள்ள இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு பாகிஸ்தான் லாகூர் நகரில் வைத்து இலங்கை கிரிக்கெட் அணியினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் குறித்து புலிகளின் முக்கிய பிரமுகரும் மலேஷிய அரசால் கைது செய்யப்பட்டு தற்போது இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டவருமான கே.பியிடம் விசாரணை செய்வதற்காக பாகிஸ்தான் புலனாய்வுக்குழு ஒன்று இலங்கை வந்துள்ளது.

இந்த விசாரணைக்கு இலங்கை அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்நடைமுறை காரணமாக இந்திய அரசுக்கு அதிருப்தி ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவின் முன்னாள் பிரதமரான ராஜீவ் காந்தியின் படுகொலை தொடர்பாக கே.பியிடம் (20ஆம் பக்கம் பார்க்க)

## அவுஸ்திரேலிய தீவு ஒன்றில் அகதிகள் படகு கவிழ்ந்ததில் 11 இலங்கையர் உட்பட 20 பேர் பலி

மெல்போர்ண், நவ.03

அவுஸ்திரேலியாவின் கொசேர்ஸ் தீவுகளுக்கு அருகில் சட்டவிரோத குடியேற்றவாசிகளின் படகு ஒன்று கவிழ்ந்ததில் அதில் பயணம்செய்த சுமார் 20 பேர் பலியாகினர். அவர்களில் 11 பேர் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்றும் நேற்றிரவு கிடைத்த பிந்திய தகவல்கள் தெரிவித்தன.

ஞாயிற்றுக்கிழமை இரவு ஆஸ்திரேலியாவின் கொசேர்ஸ் தீவுகளுக்கு அருகிலுள்ள படகொன்றிலிருந்து ஆபத்து அழைப்பு தமக்கு கிடைத்ததாக அவுஸ்திரேலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உடனடியாக மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் - மூழ்கிய படகிலிருந்து 19 பேர் மீட்கப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (20ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சிகளின் ஐக்கிய முன்னணி இன்று உதயமாகின்றது; ஒப்பந்தம் கைச்சாத்தாகும்

கொழும்பு, நவ.03

எதிர்க் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்கள் கொண்ட ஐக்கிய தேசிய முன்னணி இன்று உதயமாகவுள்ளது. இந்த முன்னணியில் இடம்பெறும் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்கள் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடும் நிகழ்வு நாடாளுமன்றத்தில் இன்று நடைபெறும்.

ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி (20ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் மீள் குடியமர்வோர் எண்ணிக்கை இன்றுடன் 50,000 பேரை எட்டுகின்றது

யாழ்ப்பாணம், நவ.03

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்து மீள்குடியமர்த்தப்பட்டோர் எண்ணிக்கை இன்றுடன் 50 ஆயிரத்தை எட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட மீள்குடியமர்வு நடவடிக்கையில், வவுனியாவில் இருந்து நேற்றுவரை 13,437 குடும்பங்களைச் சேர்ந்த 47,042 பேர் யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவரப்பட்டு உறவினர்கள், நண்பர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்.அரச அதிபர் கே. கணேஷ் (20ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



ஈ.பி.டி.பியின் அரசியல் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ''தினமுரசு'' பத்திரிகை பிரதம ஆசிரியருமான நடராஜா அற்புதராஜாவின் 10 ஆவது நினைவு தினத்தையொட்டி சமூக சேவைகள் அமைச்சின் யாழ். அலுவலகத்தில் நடைபெற்ற நினைவஞ்சலிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட படங்கள். அற்புதராஜாவின் உருவப்படத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மலர்மாலை அணிவிப்பதையும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சந்திரகுமார் (அசோக்) தலைமையுரை நிகழ்த்துவதையும், ஈ.பி.டி.பி. கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் சில்வெஸ்ரர் அலன்ரின் (உதயன்) உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். *(படங்கள் - லக்ஸ்மன்)*

# பல்வேறு தளங்களில் திறமையும் சிறப்பும் கொண்டு விளங்கியவர் பத்திரிகையாளர் அற்புதன்

## அஞ்சலி நிகழ்வில் டக்ளஸ் உரை

யாழ்ப்பாணம், நவ. 03

பத்திரிகைத்துறையில் மட்டுமன்றி கட்சியை வளப்படுத்தல், கலைத்துறையில் துடிப்புடன் இணைந்து கொள்ளல் எனப் பல்வேறு தளங்களில் திறமையும் சிறப்பும் கொண்டு விளங்கியவர் தோழர் அற்புதன்.

''தினமுரசு'' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் நடராஜா அற்புதராஜாவின் பத்தாவது நினைவுதின நிகழ்வில் பேசிய சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சரின் யாழ். அலுவலகத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சந்திரகுமார் (அசோக்) தலைமையில் நேற்று நடைபெற்ற இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் கூறியதாவது :-

எங்களிடையே கருத்து முரண்பாடுகள் சிலசமயங்களில் ஏற்படும் எனினும் நாங்கள் நல்ல நட்புடன் இருந்து கொண்டதால் நட்பு ரீதியாகவே அதனைப் பேசித் தீர்வு காண்போம்.

அது முன்னேற்றத்தை நோக்கிய ஒருவரை ஒருவர் வெட்டிச் சாய்க்க வேண்டும் என்ற நிலையற்றதாகவே இருக்கும்.

தினமுரசு பத்திரிகையை நான் ஆரம்பித்தாலும் அதன் அனைத்து செயற்பாடுகளும் அவருடையதாகவே இருந்தன.

அவர் ஓர் அற்புதமான மனிதர். எதையுமே அறிவு பூர்வமாக சிந்திப்பதிலும் ஆற்றலை வெளிப்படுத்துவதிலும் சிறந்து விளங்கினார். என்னில் பாதியாக விளங்கியவர். அவர் காட்டிய மேற்கோள்கள் இன்று பலரால் பயன்படுத்தப்படுகின்றன - என்றார். (1 - 111)

# அகதிகள் விடயத்தில் அரசு திடீர் அக்கறை

## ஜி.எஸ்.பி. சலுகைக்கு 'ஐஸ்' வைக்கிறதா?

கொழும்பு, நவ.03

அரசின் நலன்புரி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அகதிகளின் மீள்குடியேற்றம் தொடர்பான இலங்கை அரசின் திடீர் அக்கறையும் கரிசனையும் கொழும்பிலுள்ள இராஜதந்திர வட்டாரங்களில் மிகுந்த அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளன.

ஐரோப்பிய ஒன்றியத்தின் 'ஜி.எஸ்.பி.' வரிச்சலுகையைப் பெற்றுக் கொள்வதை நோக்கமாகக்கொண்டு, இந்த வருடத்துக்குள் அகதிகள் மீள் குடியேற்றத்தைப் பூர்த்தி செய்யும் அதிரடி நடவடிக்கையில் தான் ஈடுபட்டுள்ளதாக சர்வதேச சமூகத்துக்கு காட்ட, இலங்கை அரசு முயல்கின்றது என்று கொழும்பிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள் நம்புகின்றனர்.

நாளாந்தம் சுமார் மூவாயிரம் பேர் வரை சமீபத்திய நாள்களில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட வண்ணம் உள்ளனர் என்று மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் அறிவித்துள்ளமையைக் கொழும்பிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள் மிகவும் கவனத்தில் கொண்டுள்ளதுடன் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை மிகவும் உன்னிப்பாக அவதானித்தும் வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(அ-சி)

# மரண அறிவித்தல்

## ஆசீர்வாதம் வேதநாயகம் துரைரெட்ணம்

**(முன்னாள் உப அதிபர், மகேஸ்வரி வித்தியாலயம், இளைப்பாறிய அதிபர், திருநெல்வேலி றோ. க. த. பாடசாலை )**



யாழ்ப்பாணம், நல்லூர் தெற்கு, முதலியார் லேனைச் சேர்ந்த வேதநாயகம் துரைரெட்ணம் (28.10.2009) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம் - எலிசபெத் தம்பதியினரின் ஏகபுதல்வனும், திரேசம்மாவின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான செபமாலை- பிரான்ஸ்சிஸ்க்கா தம்பதியினரின் அன்பு மருமகனும், ஸ்ரெலா ஜெயமலர் (பிரான்ஸ்), ஸ்ரெலா ஜீவமலர் (ஜனசக்தி காப்புறுதிக் கம்பனி, யாழ். கிளை), காலஞ்சென்றவர்களான கிறிஸ்ரி கருணாகரன், கிறிஸ்ரி பாஸ்கரன் மற்றும் கிறிஸ்ரி கிருபாகரன் (பிரான்ஸ்), கிறிஸ்ரி அருணாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிறிஸ்ரி லூயிஸ் (பிரான்ஸ்), யோசெப் விக்னராசா அலெக்சாண்டர் (யாழ். தபாலகம்), றெஜினி (பிரான்ஸ்), தயாளினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பிரான்ஸில் வதியும் நிரோசன், நிக்சன், சுஜீவா, ஜோயெல், எலோடி, டானி, சலோமி, மற்றும் றெக்னோ (யாழ். -புனித பத்திரிசியார் கல்லூரி, தரம்- 7 மாணவன்), றெனால்ட் (யாழ். - ஜோன் பொஸ்கோ, தரம் - 3 மாணவன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.11.2009) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்திற்கு இறுதி இரங்கற் திருப்பலிக்காக எடுத்துச் செல்லப்பட்டு பின்பு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 32, முதலியார் லேன்,
நல்லூர் தெற்கு,
யாழ்ப்பாணம்.

தகவல் :
து. திரேசம்மா (மனைவி),
பிள்ளைகள்.

(90547)

PERSONAL CLASSES
316, Point Pedro Road, Jaffna.
(நாவலர் முன்பாக)
B.A - Part 1
Revision & Paper
ENGLISH
Mr.R.MAHESWARAN
(Dip-in-Eng)
Mon,Wed,Fri - 6.30am - 8.00am
Tue / Thu 4 - 5 pm / 5 - 6 pm
ECONOMICS
(B.A)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**கபிலா இராஜலிங்கம்**

மண்ணில்: 12★09★1989
விண்ணில்: 03★11★2006

காலங்கள் பல கரைந்தாலும்
கண்மணியே உன் நினைவுகள்
அழியா ஓவியங்களாய் எம்
நினைவுகளிலும் உணர்வுகளிலும்

தமிழ்ப் பாடசாலை அருகில்,
கந்தரோடை, சுன்னாகம்.

குடும்பத்தினர்.

(90543)

ஓம் ஸ்ரீ சாயிராம்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
01 ★ 12 ★ 1941



மறைவு
13 ★ 11 ★ 2008

**செல்வி இராசமலர் இராசையா**

(இளைப்பாறிய பொது முகாமையாளர், மாந்தை தெற்கு, ப.நோ. கூ. சங்கம்) B.A. (Cey)

அன்பாலும் பண்பாலும்
அனைவரையும் அரவணைத்த
எம் அன்புச் சகோதரியே!
ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்
ஆறாது எம் துயரம்
காலமது உள்ளவரை உங்கள்
நினைவோடு நாமிருப்போம்
ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி !!!

கருவேலடி லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

உங்கள் பிரிவால்
துயருறும் :
குடும்பத்தினர்.

(90546)

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த (04.10.2009), ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் திரு. முத்தையா சத்தியநாதன்**

அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், வீட்டுக்கிருத்திய நிகழ்வும் இன்று (03.11.2009) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி!

ஞானசம்பந்தர்வீதி,
வட்டு தென் மேற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல் :
பத்மினிதேவி (மனைவி),
பிள்ளைகள்.

(சி/562088)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## ஆனந்த சங்கரியின் கோரிக்கைக்குப் பின்னால்.....

இந்திய முறையிலான அரசமைப்புக் கட்டமைப்பை இலங்கைக்கு ஏற்படுத்துவதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வலியுறுத்துமாறு தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி கடிதம் எழுதியிருக்கின்றார்.

அறுபது ஆண்டுகாலம் உரிமைவேண்டி - கௌரவ வாழ்வை நாடி - ஈழத் தமிழர்கள் நடத்திய போராட்டத்தின் இலக்கு அதுதானா, அத்தகைய தீர்வு இலங்கைத் தமிழர்களின் நீதி,நியாயமான அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யுமா என்பவை எல்லாம் வேறு அம்சங்கள்.

ஆனால், ஆனந்தசங்கரியின் இந்தக் கோரிக்கை தொடர்பில் பின்வரும் விடயங்கள் அதில் பொதிந்திருக்கின்றமையை நாம் அவதானித்தேயாக வேண்டும்.

* விடுதலைப் புலிகள் பலமாக இருந்த சமயத்தில் தாம் எதைக் கூறினாரோ, அதனைத்தான் இன்று புலிகள் இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்பட்டனர் என அறிவிக்கப்பட்டு ஆறுமாதம் கழிந்த பின்னரும் ஆனந்தசங்கரி பகிரங்கமாகக் குறிப்பிட்டு அதில் விடாப்பிடி நிலையைக் காட்டியிருக்கின்றார். அதில் ஓர் அரசியல் நேர்மைத் தன்மை பொதிந்துள்ளது.

* இலங்கை, இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சி முறையிலான எந்தவொரு அரசியல் தீர்வு வழங்கப்பட்டாலும் அது, கடும் போக்காளர்கள் அநாவசியமாக எதிர்காலத்தில் தலையிட வாய்ப்பைக் கொடுத்துவிடும் என்று சங்கரி சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

* ஆகவே, இந்திய முறையிலான ஆட்சி முறைமை என்று கூறுவதன் மூலம் 'ஒற்றையாட்சி', 'சமஷ்டி' ஆகிய வார்த்தைகளை விரும்பாதவர்களுக்கும் அது ஏற்புடையதாக இருக்கும் என்று சங்கரி தெரிவித்துள்ளார்.

- இப்படி சங்கரி சுட்டிக்காட்டிய விடயங்களை நாம் சிலாகிக்கின்றமையால் அதுவே உகந்த தீர்வு என்று நாம் சிபார்சு செய்கின்றோம் என்று யாரும் அர்த்தப்படுத்தி விடக்கூடாது. இந்த விடயங்களை நாம் விசேடமாக இங்கு குறிப்பிட்டுக் காட்டுவதற்கு சில அர்த்தங்கள் உள்ளன.

விடுதலைப் புலிகள் பலமாக இருக்கும்வரை வட்டுக்கோட்டைத் தீர்மானம், சுயநிர்ணய உரிமை குறித்தெல்லாம் குரல் எழுப்பி வந்த சில தமிழ்த் தலைவர்கள் புலிகளின் இராணுவப் பின்னடைவை அடுத்து, மனம் பேதலித்து, அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்குப் பின்னால் ஒதுங்கிக்கொள்வதே மேல் என்ற நிலைக்கு வந்து விட்டனரோ எனும் சந்தேகம் வலுக்கத் தொடங்கியுள்ளது. இது விடயத்தில் புதுடில்லியோடு இணைந்து இரகசியக் காய் நகர்த்தல்கள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் அரசல் புரசலாகக் கதைகள் கட்டவிழத் தொடங்கியுள்ளன. அந்தப் பின்னணியில் சங்கரியின் வெளிப்படையான கருத்து முன்வைப்பை ஒப்பிட்டு சில விடயங்களை நமக்குள் உசாவிக் கொள்வதே இப்பத்தியின் இலக்காகும்.

13 ஆவது அரசமைப்புத் திருத்தம் என்பது இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் இலங்கை - இந்திய அரசுகளின் தீர்மானம். தமிழர் தரப்புகள் சில, இந்த முடிவுக்கு இணங்குமாறு பின்னர் பலவந்தப்படுத்தப்பட்டு, இசைவு தெரிவிக்கக் கட்டாயப்படுத்தப்பட்டனவே தவிர, 13 ஆவது திருத்தம் என்பது இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட பிரதான தரப்பான தமிழர்களின் இணக்கத்தோடு - விருப்போடு - தயாரிக்கப்பட்டதல்ல. மேலும் விளக்கமாகக் குறிப்பிடுவதானால் அது தமிழர்களால் ஏற்கனவே நிராகரிக்கப்பட்டு குப்பைக்கூடைக்குள் வீசப்பட்ட விவகாரம் ஆகும்.

அதன்பின்னர், இலங்கை அரசும், தமிழர் தரப்பும் இணங்கிக்கொண்ட - கடைசியாக இணங்கிக்கொண்ட - ஒரு விடயம் உள்ளது. அதுதான் 'உள்ளக சுயநிர்ணய அடிப்படையுடன் கூடிய சமஷ்டித் தீர்வு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றை எட்டுவது' என்ற ஒஸ்லோ கூட்டறிவிப்பு ஆகும்.

அதில் சம்பந்தப்பட்ட தமிழர் தரப்பு விடுதலைப் புலிகள் அமைப்பு. அந்த அமைப்பை இராணுவ ரீதியில் அழித்தொழிப்பதற்கு இலங்கை அரசுக்கு நேரடியாகத் துணை போனது இந்தியாவே என்று தமிழர்கள் குமுறிக் கொண்டிருக்க -

ஏற்கனவே காணப்பட்ட சமஷ்டித்தீர்வு இணக்கத்தை இந்தியா புறம்தள்ளிவிட்டு, மீண்டும் 'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற பாணியில் 13 ஆவது திருத்த மொந்தையைத் தூக்கிப் பிடிப்பதும், அதற்கு சில தமிழ்த் தலைமைகள் ஜால்ரா போடுவதும் நியாயமானவையல்ல.

இப்படி சுயநிர்ணய உரிமை, இடைக்கால நிர்வாக அதிகாரசபை, தனிநாடு என்று கோஷம் போட்டவர்கள், ஆறு மாதத்துக்குள் புதுடில்லி மந்திரத்துக்குக் கட்டுப்பட்டு 13 ஆவது திருத்தத்துக்குள் அடங்கிப்போக -

தான் நீண்டகாலம் வலியுறுத்தி வந்த விடயத்தையே - ஒற்றையாட்சிக்கு வெளியே வருகின்ற திட்டத்தையே - சமஷ்டி சாயல் உடைய வடிவத்தையே - வற்புறுத்தி நிற்கின்ற ஆனந்தசங்கரி எவ்வளவோ மேல் என்று சுட்டிக்காட்டுவது இன்று காலத்தின் கட்டாயமாகின்றது.

தமிழர்கள் இராணுவ ரீதியில் பலமாக இருந்தபோது சமஷ்டி அடிப்படையில் உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வை வழங்க கொழும்பு இணங்கியது. சர்வதேச மத்தியஸ்தத்தின் முன்னிலையில் அது அதனைப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டு அறிவிக்கவும் செய்தது.

அந்த ஒப்புதலின் அடிப்படையில் தீர்வுக்கு வலியுறுத்தாமல், செத்துப் புதையுண்டு போன 13 ஆவது திருத்தத்தை - தனது இருபது ஆண்டு பழைமையான தயாரிப்பை - இந்தியா தோண்டி எடுத்துத் தூக்கிப் பிடிக்க முயல்கின்றமை -

அதற்குப் பின்னான சமஷ்டித் தீர்வுக்கு வழிப்படுத்திய புலிகள் அமைப்பு பேரழிவுக்குட்படுத்தப்பட்ட பின்னணியில் அந்த அழிப்பு வேலையில் இந்தியாவின் பங்களிப்புக்கான நோக்கத்தை எமக்குத் தெளிவுபடுத்தி நிற்கின்றது.

# இலங்கை அகதிகள் தொடர்பில் அவுஸ்திரேலியப் பிரதமர் இலகுவான நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்

## அந்நாட்டு தொழிற்சங்கங்கள் கோரிக்கை

சிட்னி, நவ.03

இலங்கை சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் தொடர்பில் அவுஸ்திரேலியப் பிரதமர் கெவின் ரூட்டின் நிலைப்பாடு அதிருப்தியளிப்பதாக அந்நாட்டு தொழிற்சங்க அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

'ஓசியானிக் விக்கிங்' கப்பலில் தஞ்சமடைந்துள்ள 78 இலங்கை சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் தொடர்பில் அவுஸ்திரேலியப் பிரதமர் இலகுவான நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் பிரச்சினையை மனிதாபிமானக் கண்ணோட்டத்தில் நோக்குமாறு தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

கைது செய்யப்பட்டு இந்தோனேஷியக் கடற்பரப்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை சட்டவிரோதக் குடியேற்றவாசிகளுக்குச் சகலவிதமான அடிப்படை வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் சிறுவர்களும், பெண்களும் அடங்குவதாகத் தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (50)

## ஜனாதிபதியின் ஆலோசகர் வாசுதேவ வெள்ளி யாழ்ப்பாணம் வருகின்றார்

யாழ்ப்பாணம், நவ.03

ஜனாதிபதியின் ஆலோசகரும் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவருமான வாசுதேவ நாணயக்கார நான்கு நாள்கள் விஜயம் மேற்கொண்டு எதிர்வரும் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அவர் தங்கியிருக்கும் காலத்தில் சகல தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள், சமயத் தலைவர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், கல்வியாளர்கள், புத்திஜீவிகள், பொதுமக்கள் ஆகியோரைச் சந்தித்து தற்போதைய நிலைமைகள் தொடர்பாகக் கலந்துரையாடவிருக்கின்றார்.

தனது அரசியல் வரலாற்றில் தமிழ் மக்களின் அபிலாஷைகள், எண்ணக்கருக்கள், அரசியல் கோட்பாடுகள் ஆகியவற்றை நன்கு அறிந்தவர் என்ற வகையிலும், தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுப்பவர் என்ற வகையிலும் அவரது விஜயம் முக்கியம் பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (1)

## வலி.தென்மேற்கில் மீளக்குடியமர்ந்த 80 பேருக்குக் கண் பரிசோதனை

யாழ்ப்பாணம், நவ.03

வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் மீளக் குடியமர்ந்த 80 பேருக்குக் கண் சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை கண்வைத்திய நிபுணர் எஸ்.குகதாஸன் வன்னியில் இருந்து மீளத் திரும்பியவர்களுக்கான அவசர கண் பரிசோதனையை மேற்கொண்டார்.

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழக சேவைத்திட்டத் தலைவர் லயன் எஸ்.எஸ்.தங்கராசா தலைமையில் இந்தக் கண்சிகிச்சை முகாம் இடம் பெற்றது.

மானிப்பாய் சோதி வேம்படியில் லயன் தலைவர் அ.பாலச்சந்திரன் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார்.

இதில் முதற்கட்டமாக நலிவுற்ற 80 பேருக்கு விழிவெண்படலப் பாதிப்பு, கண்பார்வைக்குறைவு தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதில் 26 பேருக்கு 'கற்றாக்' சத்திர சிகிச்சை அளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மிகவும் வறுமை நிலையிலுள்ள 10 வயோதிபர்களுக்கு கண்பரிசோதனையின் பின்னர் கண்ணாடி வழங்க லயன்ஸ் சேவைத்திட்ட தலைவர் லயன் எஸ்.எஸ்.தங்கராசா நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி கண்பரிசோதனை முகாம் கோண்டாவில் சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தின் அனுசரணையுடன் - மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தினால் முன்னெடுக்கப்பட்டது. (50-302)

## இலகு உணவுத் திட்டத்தின் கீழ் வடிகால் புனரமைப்புப் பணி

நல்லூர், நவ.03

யாழ்.மாநகரசபை தனது பிரதேசத்திற்கு உட்பட்ட வாய்க்கால்களை புனரமைத்துத் துப்புரவுசெய்யும் பொருட்டு நல்லூர், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பகுதிகளில் இலகு உணவுத் திட்டத்தில் வேலை செய்யும் மக்களின் மனித வளத்தைப் பயன்படுத்தவுள்ளது.

மேற்படி வேலைத் திட்டத்தின் கீழ் வேலைகளில் ஈடுபட்டுள்ளவர்களைத் தந்துதவுமாறு குறிப்பிட்ட பிரதேச செயலர்களைக் கோரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (203-111)

## உள்ளூராட்சிச் செயலாளர் சேவைக்கு புதிய பிரமாணக் குறிப்பு தயாரிப்பு

யாழ்ப்பாணம், நவ. 03

வடக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி செயலாளர் நியமனத்திற்காகப் புதிய உள்ளூராட்சி செயலாளர் சேவைப் பிரமாணக் குறிப்புத் தயாரிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் சி.ரங்கராஜன் தலைமையில் புதிய செயலாளர் நியமனத்திற்கான சேவைப் பிரமாணக் குறிப்புத் தயாரிக்கப்பட்டுள்ளது.

இரண்டு மாதங்களில் மேற்படி சேவைப் பிரமாணக் குறிப்பு வெளியிடப்பட்டு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கையினை வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் மேற்கொள்வார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. உள்ளூராட்சிச் சேவையில் தொடர்ச்சியாகப் 10 வருடங்கள் சேவையைப் பூர்த்தி செய்தவர்கள் மேற்படி சேவையில் பரீட்சை மூலம் உள்வாங்கப்படுவர்.

இதன்மூலம் நீண்டகாலமாக வடக்கு மாகாணத்தில் செயலாளர் சேவை உருவாக்கப்படவேண்டும் என்ற நோக்கம் நிறைவேறும் என வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

நாடளாவிய ரீதியில் ஒவ்வொரு மாகாண ஆளுநர் பிரிவிலும் புதிய உள்ளூராட்சி செயலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பு தயாரிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (50)

## அராலி வேலணை கடற்பாதையை புனரமைப்புச் செய்ய நடவடிக்கை

யாழ்ப்பாணம்,நவ.3

அராலி - வேலணை கடற்பாதை வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மேற்படி பாதை புனரமைப்பு தொடர்பாக மதிப்பீட்டை கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் அராலி - வேலணை கடற்பாதையின் புனரமைப்புப் பணிகளை யாழ்-அரச அதிபர் க.கணேஷ் அபிவிருத்தி முன்மொழிவுகளில் சேர்த்திருந்தார்.

இதனையடுத்துத் தீவகம் - வலிகாமப் பகுதிக்கான போக்குவரத்து மற்றும் சந்தை வசதிகளைத் துரிதப்படுத்த இந்தக் கடற்பாதையைப் புனரமைப்புச் செய்வதற்கு வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி அபிவிருத்தித் திட்டத்தை 2010இல் ஆரம்பித்து நடைமுறைப்படுத்துவதற்காக முன்மொழிவை யாழ். அரச அதிபர் வீதி அபிவிருத்தி அதிகாரசபையூடாக முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது., (50- 302)

### நாளை

| | |
|---|---|
| ஐப்பசி 18 | 04.11.2009 புதன்கிழமை |
| திதி: | துதியை மு.இ. 11.26 வரை |
| நட்சத்திரம்: | கார்த்திகை மு.இ. 07.38 வரை |
| [illegible] | 04.34 - 06.04 வரை |
| ராகுகாலம்: | 12.04 - 01.34 வரை |

## உவர்நில நெற்செய்கையால் பாதிப்புற்ற விவசாயிகளுக்கு இன்று இலவச விதைநெல்

யாழ்ப்பாணம், நவ.3

வலி.தென்மேற்கில் உவர்நில நெற்செய்கையினால் பாதிக்கப்பட்ட சண்டிலிப்பாய் பகுதி விவசாயிகளுக்கு இன்று செவ்வாய்க்கிழமை இலவச விதை நெல் விநியோகம் செய்யப்படவுள்ளது.

சண்டிலிப்பாய் கமநல சேவைகள் நிலைய விவசாய போதனாசிரியர் திருமதி பி.மணிவண்ணன் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

உவர் நிலப் பயிர்செய்கையால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தமது விவசாய சம்மேளனத் தலைவர் அல்லது செயலாளரின் சிபாரிசுடன் தொடர்பு கொண்டு விதைநெல்லைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இதேவேளை உவர்ச் செய்கையால் பாதிக்கப்பட்ட நவாலி வடக்கு, கிழக்கு, தெற்கு, மற்றும் ஆனைக்கோட்டை விவசாயிகளுக்குத் தேவையான இலவச விதை நெல் அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி விதைநெல் பிரயோகம் மற்றும் பசளை முறைகள் தொடர்பாகவும் போதிய விளக்கம் விவசாய போதனாசிரியரினால் வழங்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது (50-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மனம் மகிழ
03
★
04
★
1928



நெஞ்சம் நெகிழ
04
★
10
★
2009

### அமரர் செல்லாச்சி பொன்னையா

04.10.2009 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கு செல்லாச்சி பொன்னையா அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை எமது இல்லத்தில் இன்று (03.11.2009) செவ்வாய்க்கிழமை மு.ப.11 மணியளவில் நடைபெறும். இவ் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

உசன்,
மிருசுவில்.
(சி/562084)
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### பொன்னுச்சாமி கணேசபிள்ளை

(வியாபாரி, மருதனார்மடம் சந்தை)



இணுவில், மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுச்சாமி கணேசபிள்ளை 02.11.2009 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பாபிள்ளை பொன்னுச்சாமி மற்றும் செல்லையா பரமேஸ்வரியின் அன்பு மகனும் கைலாசபிள்ளை -சிவக்கொழுந்து ஆகியோரின் மருமகனும் கமலாம்பிகையின் அன்புக் கணவரும் கலைவாணி, கலைச்செல்வன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆனந்தராஜா (கனடா), இராஜகோபால்(கனடா), மனோரஞ்சிதாதேவி (கொழும்பு), சர்வானந்தம், யோகானந்தன் (கனடா), மல்லிகாதேவி (கொழும்பு), ஞானசேகரம் (ஜேர்மனி), மகேந்திரன் (கனடா), சுரேஸ்குமார் (கனடா), காலஞ்சென்ற கீர்த்திரெத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற பஞ்சாட்சரநாதன் மற்றும் சுமதியின் மாமனாரும் கௌசிகன், காரணன், கஜசரவணன், கஸ்தூரி, கௌதமன், கயல்வண்ணன், கஜீபன், கௌசிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சைவப்பாடசாலை ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
(90552)
தகவல்:
குடும்பத்தினர்.

### இராசையா பொன்னையா



தாவளை, இயற்றாலை, வரணியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா பொன்னையா நேற்று (02.11.2009) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிராசிப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராசையா-சின்னம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும், அமரர் சிதம்பரநாதர் (வீரசிங்கம்), மற்றும் செல்லத்துரை, அமரர் முருகேசு மற்றும் இராமலிங்கம் (இராசு) ஆகியோரின் சகோதரனும் அமரர் செல்லையா அமரர் இராசையா மற்றும் தம்பையா (London), சுபத்திரா, ஸ்ரீரஞ்சினி (குஞ்சு), சிவபாலன், சந்திரகுமார் (London), சூரியகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், பசுபதி, கமலாம்பிகை (London), அமரர் கந்தசாமி மற் றும் அருளம்பலம், சுகந்தி, சறோஜினிதேவி(London), கலைச்செல்வி (யாழ்.மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயம்) ஆகி யோரின் அன்பு மாமனாரும், கிருபாநிதி, கிருபாகரன் (London), கிரிசா, ரமேஸ்கரன் (France), டினேஸ்கரன் (India), சுதாகரன் (Colombo), சுதா (London), துவாரகா (London), செல்வரெத்தினம் (சுதன்), செல்வகுமாரி (London), பிரபாகரன், கவிதா, அனித்தா, கோபிகா (மாணவி, யாழ்.சாவகச்சேரி இந்துக் கல்லூரி தரம் -11), சுஜீவன் (மாணவன் யாழ்.சாவகச்சேரி இந்துக் கல்லூரி தரம் 9), நிறோஜன் (London), தாரணி (London), வேணுஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(03.11.2009) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஞானியார்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தாவளை, இயற்றாலை,
வரணி.
(90554)
தகவல்:
குடும்பத்தினர்.

## தவணைப் பரீட்சை தொடர்பாக யாழ்.வலயத்தில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்.நவ.3

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் மூன்றாம் தவணைப்பரீட்சை தொடர்பான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ்.வலய அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

முதன்மை ஆசிரியர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோரை இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (1)

## சஞ்சிகை வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், நவ.3

யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி வர்த்தக மாணவர் சங்கத்தின் 'தேறல்' சஞ்சிகையின் ஆறாவது வெளியீட்டின் வெளியீட்டு விழா இன்று காலை 9.30 மணிக்கு கல்லூரியின் மத்தியூஸ் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் 'நிக்கொட்' நிறுவனத்தின் பிரதித் திட்டப் பணிப்பாளர் என்.எஸ்.ஆர். சிவரூபன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (1)

## சுழிபுரம் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு

மூளாய், நவ.3

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிச் சூழலில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் விழிப்புணர்வுச் செயற்பாடு கல்லூரியின் சுகாதாரக் கழகத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த விழிப்புணர்வு நடவடிக்கை மூலம் கல்லூரியின் சூழலில் உள்ள பொது மக்களின் வீடுகளுக்கு நேரடியாகச் சென்று டெங்குநோய் பற்றி அறிவுறுத்தி வருவதுடன் டெங்கு பரவக்கூடிய இடங்களையும் அடையாளம் கண்டு அழிக்கும் நடவடிக்கையிலும் மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதன் போது 'ஒருங்கிணைந்த நுளம்புக் கட்டுப்பாடு' எனும் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரமும் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இச்செயற்பாடு சுழிபுரம் பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ்.தவேதனின் வழிகாட்டலில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. (1-93)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, நவ.3

யாழ். மாவட்ட தாச்சி சங்கம் இலங்கை வங்கி, வர்த்தக வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட தாச்சிக் கழகங்களுக்கு இடையே நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு சுதுமலை யுவசக்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

* உடுவில் வைகறை வி.க. எதிர் தாவடி காளியம்பாள் வி.க. (1-86)

* * *

வலி.வடக்கு, நவ.3

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்று வரும் 16,18 வயதுப் பிரிவினர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மூன்றாம் இடம் மற்றும் இறுதியாட்டங்கள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இன்று இடம் பெறவுள்ளன.

காலை 8 மணிக்கு 3 ஆம் இடத்துக்கான போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

16 வயதுப் பிரிவு

* அராலி இந்துக் கல்லூரி எதிர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.

18 வயதுப் பிரிவு

* இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் அராலி இந்துக் கல்லூரி.

நண்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ள இறுதியாட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

16 வயதுப் பிரிவு

* இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி.

18 வயதுப் பிரிவு

* தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி. (1-86)

### தவறிவிட்டது

70/21, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யோசப் ஞானரெத்தினம் ஆகிய எனது I.C, திறப்பு, சிறுதொகைப் பணம், அடங்கிய கைப்பை குருநகர் ஆஸ்பத்திரிக்கு அருகில் தவறிவிட்டது. [illegible] படும்.

## பாராட்டி மகிழ்கின்றோம்

எமது கல்லூரி நிர்வாகி

### திரு.மாணிக்கம் சண்முகநாதன்



அவர்கள் 23.10.2009 அன்று அகில இலங்கை சமாதான நீதிவானாக மாவட்ட நீதிபதி கௌரவ வசந்த சேனன் முன்னிலை யில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டமையையிட்டும், சமாதான நீதிவான்களுக்கான சமாதான உரிமைகள் அமைப்பின் யாழ்.மாவட்ட இணைப்பாளராக (CORDINATOR, JAFFNA DISTRICT FOR THE HUMAN RIGHT ORGANI ZATION, and JUSTICE OF PEACE) நியமிக்கப்பட்டுள்ளமையையும் மகிழ்ச்சியுடன் பாராட்டுகின்றோம்.

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி, யாழ்.
(90542)

யாழ்., பேராதனை, காமராஜர் பல்கலைக் கழக (வெளிவாரி)
(G.A.Q, B.A., B.com, B.Sc.)
மாணவர்கள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு
29
★
09
★
1932



உதிர்வு
05
★
10
★
2009

### கந்தையா பத்மநாதன்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

கடந்த 05.10.2009 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் கந்தையா பத்மநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் மரணச்சடங்கில் கலந்து கொண்டோருக்கும், உதவிகள் புரிந் தோருக்கும், மலர்வளையம் சாத்தி அஞ்சலி செலுத்தியோருக்கும், தொடர்பு சாதனங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும். இரங்கலுரை ஆற்றியோருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (03.11.2009) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும்.

இந் நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

114, பிறவுண் வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.
(90549)
மனைவி,
மக்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பயப்படாதே உன்னை மீட்டுக் கொண்டேன்
உன்னை பெயர் சொல்லி அழைத்தேன் நீ என்னுடையவள்.(ஏசாயா 43:1)

### அருமைலிங்கம் சுகிர்தமலர்



புவி வாழ்வு 11-03-1942

இறைவனின் காந்தில் 03-11-2008

ஆண்டொன்று கடந்தாலும்
அன்பு முகம் காட்டிநிற்கும் - அம்மாவே
பாசமழை பொழிந்தெம்மை பாசமுடன் வளர்த்தாயே
உன்பிரிவைத் தாங்காமல் உன் பிள்ளைகள் இங்கே- அம்மம்மாவே
என்றோ ஒருநாள் முகமுகமாய்
காணும் ஆவலில் காத்திருக்கின்றோம்

(562091)

மடத்துக் கடவை,
அல்வாய் வடமேற்கு.
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
08
★
05
★
1962



உதிர்வு
04
★
10
★
2009

### அமரர் சோமசுந்தரம் நகுலேஸ்வரன்

அன்பான சகோதரனே!
நீ எம்மை விட்டுச் சென்று 31 நாள்கள் ஆனால் என்ன!
எத்தனை யுகங்கள் ஆனாலும் உன் நினைவுகள்
எம் நெஞ்சை விட்டு அகலாது.
உன் கனிவான பேச்சும் அன்பும்
பரிவும் எம் ஆயுளைக் கடந்தும் நிலைத்து நிற்கும்!
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி!

(90553)

உன் நினைவில் வாடும்
S. பத்மநாதன் (சகோதரன்)
திருமதி.S. நகுலேஸ்வரி (சகோதரி)
S.விக்னேஸ்வரன் (சகோதரன் -சுவிஸ்)

அரியாலை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருந்துவார்களா இவர்கள்!



வடமராட்சி மண்ணின் ஒழுக்கக் கட்டுப்பாடுகளும் மனிதப் பண்புகளும் கடந்த காலத்தில் உயர்ந்திருந்தது.

குறிப்பாக முன்னைய இளம் மாணவ சமுதாயத்தின் செயற்பாடுகள் அன்றைய காலத்தில் பல்வேறு சமூகத்தினரால் மதிப்பளிக்கப்பட்டு வந்தது. ஆனால் இன்றோ மாணவ சமூகத்தின் சில செயற்பாடுகள் பலருக்கு முகச் சுழிப்பாக அமைகின்றது கண்கூடு.

கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன கதையாக தற்போதைய மாணவ சமுதாயத்தினரின் ஒழுக்கக் கட்டுப்பாடு வீழ்ச்சியடைந்து செல்வதை நாம் கண்கூடாக அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

அந்த வகையில் மாணவர்களின் போக்குவரத்து பவனி பற்றி விசனப்பட்டு அல்லது ஆத்திரப்பட்டுக் கவலையுடன் சில கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டுள்ளது. அன்று வடமராட்சி - உடுப்பிட்டி வீதியால் நான் எனது வாகனத்தில் அவசர அலுவலாகப் பயணித்துக் கொண்டிருந்தேன். தனியார் கல்வி நிறுவன வகுப்புகள் சுமார் 6 மணிக்கெல்லாம் முடிந்து ஒரு தொகுதி மாணவர்கள் வந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் சமாந்தரமாக வந்துகொண்டிருந்தார்கள். வீதியால் வரும் மற்றவர்களையோ மற்ற வாகனங்களையோ பற்றிச் சிந்திப்பதில்லையா? அது தவறு என அவர்கள் உணரவில்லையா? அல்லது உணர்த்தப்படவில்லையா? தனியார் கல்வி நிறுவனங்கள் ஏனைய கல்வி நிறுவனங்களுடன் ஏட்டிக்குப் போட்டியாக வகுப்புக்களை நடத்துவதிலும் கட்டணங்களை மாணவர்களிடம் இருந்து கறப்பதிலும் காட்டும் அக்கறை அவர்களின் போக்குவரத்தில் காட்டக்கூடாதா? என விசனம் தெரிவிக்கின்றனர் மக்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் இந்த விடயத்தில் நடவடிக்கை எடுக்கத் தயங்குவது ஏன்?

சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுத்து தக்க தண்டனையை சமாந்தரமாகச் செல்வோருக்குக் கொடுத்தால் எமது சகோதர, சகோதரிகள் திருந்துவார்கள் அல்லது திருத்தப்படுவார்கள் அல்லவா.

இனியாவது ஒருகணம் சிந்தியுங்கள். சம்பந்தப்பட்டவர்கள் முன்வந்து நடவடிக்கை எடுப்பது அவசியம். ''திருடனாப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது'' எனவே இனியாவது மாணவர்கள் சமூகத்திற்கு நல்லவர்களாக வாழுங்கள்; அதற்கு முயற்சி செய்யுங்கள்.

# கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி

நீண்ட கல்வியல் பின்னணி உடையது வடமராட்சி மண். வடமராட்சி மண்ணிலே பல கல்வியியலாளர்களைத் தந்து கொண்டிருக்கின்ற மண் கரவெட்டி மண். கரவெட்டி மண்ணின் மத்தியிலே எழுச்சி கொண்டு நிற்கிறது கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி. ''உண்மையே வெல்லும்'' எனும் மகுடவாசகத்தை தாங்கி நிற்கும் இக்கல்லூரி, சுமார் ஒன்பது நூற்றாண்டு கல்வியல் வரலாற்றை உடையது. இன்று இசுறு பாடசாலையாகத் திகழும் இக்கல்லூரியானது அந்நிய நாட்டவரின் ஆதிக்கத்தின் கீழ் எமது இலங்கைத் திருநாடு இருந்த சூழலில் சுதேச மக்களின் சமய விழுமியங்கள் புறக்கணிக்கப்பட்ட ஒரு சூழலில் 1917ஆம் ஆண்டு இராசவாசல் வீரவாகு முதலியார் அவர்களினால் சைவ மரபுடனான உயர்கல்வி என்னும் உயரிய நோக்குடன் ஸ்தாபிக்கப்பட்டது. இக்கல்லூரியானது ஆங்கில ஆட்சியாளரின் பூரண ஆதரவுடன் இயங்கிய கிறிஸ்தவ கல்லூரிகளுடன் அக்காலத்தில் சரிநிகர் சமனாக நின்று ஆங்கிலக் கல்வியையும் சைவத்தமிழ் மரபையும் ஒருங்கே வளர்த்தது. இக்கல்லூரி அக்காலத்தில் S.S.L.C வகுப்புகள் வரை வகுப்புகளை நடத்தியதுடன் லண்டன் மற்றிக்குலேசன் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார் பண்ணியும் வந்துள்ளது.





ஆரம்பகால கட்டத்தில் ஒரு பனை வடலிவளவில் ஒரு சிறு கிடுகுக் கொட்டிலில் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி, இராசவாசல் முதலியார் அவர்களின் உயரிய தியாகங்களுக்கு மத்தியிலும் பல்வேறு சமூகத்தவரின் அர்ப்பணிப்பு மிக்க சேவையின் பிரதிபலனாகவும் இன்று பல மாடிக்கட்டடங்களைத் தாங்கி உயர்ந்து நிற்கிறது. அந்த வகையில் கல்லூரி அதிபர்களின் வரிசையில் திரு.V.K. கிருஸ்ணபிள்ளை, திரு.K.G. பத்மநாதபிள்ளை, திரு.K. சிவப்பிரகாசம், திரு.சோமசுந்தரம், திரு.பொன்.கணேசன், திரு.V. தங்கராஜா, திரு.T. நமசிவாயம், திரு.K. சிவபாதசுந்தரம், திரு.வ. செல்வராசா, திரு.க.அம்பலவாணர் போன்ற பலர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இதன் வளர்ச்சிப் போக்கில் உயர்தர மாணவர்களின் விஞ்ஞான அறிவுக்கு வித்திடும் வகையில் 1953ஆம் ஆண்டு விஞ்ஞான ஆய்வுகூடங்கள் அமைக்கப்பட்டன. ஆனாலும் நவீன விஞ்ஞான தொழில்நுட்பங்களைத் தாங்கி 2002ஆம் ஆண்டு புதிய மாடிக்கட்டடத்தில் புதிய ஆய்வுகூடங்கள் அமைக்கப்பட்டன. இடைநிலை மாணவர்களின் விஞ்ஞான அறிவை வளர்க்கும் நோக்குடன் பொது ஆய்வுகூடம் ஒன்று 2008ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

விஞ்ஞான தொழில்நுட்பக் கணனி அறிவை மாணவர்கள் மத்தியில் வளர்க்கும் நோக்குடனும் நல்ல கணனி அறிவை மாணவர்கள் மத்தியில் விதைக்கும் நோக்குடனும் இக்கல்லூரியில் 2008ஆம் ஆண்டு நவீன கணனி ஆய்வுகூடம் பெருமளவு கணனிகளைத் தாங்கி அமைக்கப்பட்டது. இதன் மூலம் கணனி அறிவுபெற்ற மாணவர் சமுதாயத்தின் அறிவிற்கு ஆதாரமாக இக்கல்லூரி மாணவர்கள் கடந்த காலங்களில் கணனி மென்பொருள் தயாரிப்பு (Computer Software making) இல் ஈடுபட்டு தேசிய ரீதியில் வெற்றி பெற்று சாதனை படைத்தது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

மாணவர்களின் வாசிப்புத் திறனை வளர்க்கும் நோக்குடன் 2006ஆம் ஆண்டு இக்கல்லூரியில் பாரியதொரு நூலகம் அமைக்கப்பட்டது. எல்லாவகை நூல்களையும் தாங்கியிருக்கும் இந்நூலகம் யாழ்.மாவட்டத்தின் முன்னணி நூலகங்களில் ஒன்றாகத் திகழ்வது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

(தொடரும்)

# வடமராட்சி மண்ணில் சுருக்கெழுத்துத் துறையில்
# தடம் பதித்து நிற்கும் வடமராட்சி சுருக்கெழுத்து தட்டச்சுக் கழகம்

வடமராட்சி மக்களிடையே சுருக்கெழுத்துத் துறையில் முன்னணிக் கழகமாக வடமராட்சி சுருக்கெழுத்து தட்டச்சுக் கழகம் திகழ்ந்து வருகின்றது. தற்போதய அறிவியல் யுகத்திற்கு ஈடுகொடுப்பதற்கு மனிதனுக்குக் கணனி, ஆங்கிலம் என்பவற்றுடன் சுருக் கெழுத்து தொடர்பான அறிவும் இன்றியமையாதது ஆகின்றது. ஒரு தொழிற்துறையில் தடம் பதிப்பதற்கு இன்றைய சூழலில் சுருக்கெழுத்து தட்டச்சு தொடர்பான அறிவு அவசியமாகின்றது. அந்தவகையில் வடமராட்சிப் பிரதேச மக்களின் சுருக்கெழுத்து தட்டச்சுத் தொடர்பான அறிவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் கழகமாக வடமராட்சி சுருக் கெழுத்து தட்டச்சுக் கழகம் மிளிர்கின்றது. இது வதிரிச் சந்தியில் இருந்து உடுப்பிட்டி நோக்கி செல்கின்ற பிரதான வீதியில் அழகு பொழிகின்ற வதிரி ஊரின் மத்தியிலே அமைந்துள்ளது. இதில் தற்போது பல மாணவர்கள் கல்விகற்று வருகின்றனர். கடந்த காலத்தில் பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் கல்வி கற்று வந்துள்ளனர்.




மேற்படி கழகம் 1983ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட் டது. ஆனாலும் அது வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் என பெயர் சூட்டப்படாமல் ஒரு சில பாடசாலைகளில் மட்டும் தற்காலிகமாக இயங்கி வந்தது. கால ஓட்டத்தில் 01.10.1985ஆம் திகதி பி.ப 4 மணிக்கு கழக ஸ்தாபகர் க.வெ. சிவசந்திரன் அவர்களால் வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் என பெயர் சூட்டப்பட்டு மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் எனப் பெயர் தாங்கி பல்வேறு பதிப்பாளர்களையும் தட்டச்சு வல்லுநர்களையும் உருவாக்கி வருதல் இதன் சிறப்பம்சம் ஆகும். அது மட்டுமல்ல, மாணவர்களுக்கிடையே சுருக்கெழுத்து தட்டச்சு தொடர்பான பல்வேறு அறிவுப்போட்டிகளை நடத்தி பரிசில் களை வழங்கிக் கௌரவித்து வருவது இதன் இன்னொரு சிறப்பம்சம் ஆகும். இது தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகார சபையுடன் (NAITA) இணைந்து இக்கழகம் செயற் பட்டு வருவதனால் இதனால் வழங்கப்படும் சான்றிதழ் தேசிய ரீதியில் மதிக்கப்பட்டு வருகின்றது. பரீட்சைகளில் சித்தியடையாது விரக்தி நிலையில் இருக்கும் மாணவர்கள் பலர் இக்கழகத்தில் பயிற்சி நெறியை மேற்கொண்டு அரச, அரசசார்பற்ற நிறுவனங்க ளில் உயர் தொழில் வாய்ப்பைப் பெற்று வருகின்றனர். இந்தக் கழகத்தின் தலைவர் திரு.குலசிங்கம் அவர்கள் கழகத்தைச் சிறப்பாக நிர்வகித்து வருகின்றார்.

எனவே, மேற்படி கழகம் தனது சேவையை இடைவிடாமல் தொடர்வதன் மூலமாக நல்லதொரு எதிர் கால சந்ததியை வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் கட்டி யெழுப்பும் என்பதில் இருவேறு கருத்திற்கு இடமேயில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சரம்... செய்திச் சரம்...

## மதுபோதையில் மோ.சைக்கிள் செலுத்தியவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,நவ.3

காப்புறுதிப் பத்திரமின்றி மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 7 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கினை விசாரித்த நீதிவான் இந்நபருக்கு 7 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஏழு மாத சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (201-207)

## வீதியை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

வேலணை,நவ.3

புங்குடுதீவு பெருங்காடு சந்தியிலிருந்து சிறுப்பிட்டிக் கிராமம் வரை செல்லும் வீதி நீண்டகாலமாகத் திருத்தவேலைகள் எதுவுமின்றிக் கவனிப்பாரற்று குண்டும், குழியுமாகக் காணப்படுகிறது.

இவ்வீதி புங்குடுதீவில் நான்கு கிராம சேவை அலுவலர் பிரிவுகளையும் நான்கு வட்டாரங்களையும் உள்ளடக்கிய மக்கள் பயணிக்கும் வீதியாகவும், பாடசாலைகள், ஆலயங்களுக்குச் செல்லும் வீதியாகவும் உள்ளது.

கடந்த காலச் சூழ்நிலையில் மக்கள் இப்பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்ததால் மேற்படி வீதியை மக்கள் போக்குவரத்துக்குப் பயன்படுத்துவது குறைவாக இருந்தது. ஆனால் தற்போது மக்கள் மீள் குடியேறியுள்ளதால் மீண்டும் மக்கள் இவ்வீதியைப் பயன்படுத்துகின்றனர். எனவே, வீதியைப் புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (201-267)

## சொற்பொழிவாளர் கௌரவிப்பு

வடமராட்சி,நவ.3

வல்வெட்டித்துறை தீருவில் வயலூர் முருகன் ஆலயத்தில் இடம்பெற்ற கந்த சஷ்டி திருவிழா தினங்களில் கந்தபுராணம் தொடர்சொற்பொழிவாற்றிய பிரபல ஆன்மீகச் சொற்பொழிவாளர் சைவப்புலவர் பொன்.சுகந்தன் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

சர்வதேச குருமார் ஒன்றியத்தலைவர் பிரம்மஸ்ரீ ப.மனோகரக்குருக்கள் தலைமையில் நடைபெற்ற இக்கௌரவிப்பு நிகழ்வில் வடமாகாண மேலதிக கல்வி பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் சைவப்புலவர் பொன்.சுகந்தனுக்கு ''சொல்லிசை வாருதி'' என்னும் பட்டத்தினை வழங்கிப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (201-236)

## சைக்கிள் திருட்டு

சங்கானை,நவ.3

சங்கானை பிரதேச செயலகத்தில் சைக்கிள் ஒன்று அண்மையில் திருட்டுப் போயுள்ளது. சமீபகாலமாக இதுபோன்று சைக்கிள்கள் திருட்டுப்போவதால் பிரதேச செயலரால் ஒரு காவலாளி இதற்கென நியமிக்கப்பட்டு கடமையாற்றியும் சைக்கிள் களவாடப்பட்டுள்ளது.

சங்கானைச் சந்தை, அப்பிரதேச மக்கள் வங்கிக் கிளை போன்ற இடங்களில் இத்தகைய களவுகள் அதிகமாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (201-29)

## தேவரையாளி இந்துவுக்கு அடுத்த ஆண்டு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,நவ.3

கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியின் பல்வேறு துறைகளும் அபிவிருத்தி செய்யப்படவேண்டியுள்ளதால் அடுத்த ஆண்டில் தேவையான நிதி ஒதுக்கீட்டைச் செய்யவுள்ளதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தேவரையாளி இந்துக் கல்லூரி அதிபர் மா.நவநீதமணி தலைமையில் க.மு.சின்னத்தம்பி கலையரங்கில் நடைபெற்ற 2009ஆம் ஆண்டுக்கான வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு கூறினார். கல்வியில் தமது திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களுக்கான பரிசில்கள் மற்றும் விருதுகளையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கினார். (203)

## வீதிகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,நவ.3

மூளாய் வீதியில் இருந்து வட்டுக்கோட்டை கண்ணகி அம்மன் ஆலயத்திற்குச் செல்லும் வீதியிலும் ஆலயத்தினைச் சூழவுள்ள தெற்கு, கிழக்குப் பக்க வீதியிலும் புனரமைப்புப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

பல வருடங்களாகப் புனரமைக்கப்படாத இவ்வீதிகள் வலி.மேற்குப் பிரதேச சபைச் செயலாளரின் முயற்சியினால் திருத்தப்படுவதாகக் கூறப்படுகின்றது. (204)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நடத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம்,நவ.3

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் மாதாந்தம் நடத்தப்படவுள்ளது.

உதவி அரசாங்க அதிபர் ந.திருலிங்கநாதன் இதற்கான நடவடிக்கை எடுத்துள்ளார்.

பிரதேச வளர்ச்சி - அபிவிருத்தி கருதி இடம்பெறவுள்ள மாதாந்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தின்போது சகலரதும் ஒத்துழைப்பு தேவை என உதவி அரச அதிபர் கேட்டுள்ளார். (201-302)

## கந்தபுராண நூல் பெற்றுக்கொள்ளலாம்

சுழிபுரம்,நவ.3

கந்தபுராண படன வள்ளியம்மை திருமண நூலை மீள்பதிப்புச் செய்து பஜனைச் சபையினர் வெளியிட்டுள்ளனர். எதிர்வரும் கார்த்திகைத் தீபத்திருநாளில் முருகன் ஆலயங்களில் வள்ளியம்மன் திருமணப்படனம் படிக்கப்பட்டு மாவிளக்கேற்றி விழா இடம்பெறும்.

எனவே இதனை முன்னிட்டு இந்நூல் மீள்பதிப்புச் செய்து வெளியிடப்பட்டுள்ளது. நூலைப் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்துள்ள ஆலயங்களுக்கு நூல் வழங்குவதற்குப் பஜனைச் சபை ஏற்பாடு செய்துள்ளது. நூலைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் நூறு ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையை ''செயலாளர், பஜனைச்சபை, சுழிபுரம்'' என்னும் முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ள முடியும். (201-28)

## இளைஞனின் கண்ணை பதம் பார்த்த கல்

யாழ்ப்பாணம்,நவ.3

உடைத்துக் கொண்டிருந்தபோது கல் பறந்து இளைஞனின் கண்ணைத் தாக்கியது.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை மட்டுவிலில் இடம்பெற்றது.

கட்டடத் தேவைக்கெனப் போடப்பட்டிருந்த கல்லினை உடைத்தபோதே இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த வீ.துஷானந்த் (வயது 19) என்பவர் கண்ணில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (201-207)

## கோடா வைத்திருந்தவருக்கு 45 ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம்,நவ.3

கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் கோடா வைத்திருந்த வரணி - இடைக்குறிச்சி வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 45 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி மதுவரி நிலையத்தினரால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கினை விசாரித்த நீதிவான் இந்நபருக்கு 45 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 20 மாத சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (201-207)

## தொலைபேசிச் சேவை விஸ்தரிப்பு

சங்கானை,நவ.3

சண்டிலிப்பாயில் இருந்து பொன்னாலை வரை ரெலிகொம் நிறுவனத்தால் கேபிள் தொலைபேசிச் சேவை விஸ்தரிக்கப்படுகிறது. இப்பகுதி வீதிகளில் தொலைபேசி இணைப்புக்கான தூண்கள் நட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (201-29)

# பீஜித் தீவில் நிர்வாகத்தை சீரமைக்க இலங்கை நீதிபதிகள் அங்கு செல்வர்

கொழும்பு,நவ.3

பீஜீத் தீவில் சிறந்த நீதி நிர்வாகத்தைக் கட்டியமைக்கும் பணியில் ஈடுபடுவதற்காக இலங்கையைச் சேர்ந்த நீதிபதிகள் குழு ஒன்று அந்நாட்டுக்கு விஜயம் செய்கின்றது.

பீஜித் தீவில் கடந்த ஏப்ரல் மாதம் முதல் நீதி நிர்வாக நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டுவிட்டன. இந்த நிலையில் பீஜித் தீவில் சிறந்த நீதி நிர்வாகத்தைக் கட்டியெழுப்ப இலங்கை அரசினால் பீஜித் தீவுக்கு அனுப்பப்படுகின்ற இந்த நீதிபதிகள் சுமார் 3 வருடங்கள் வரை அங்கு பணியாற்றுவார்கள்.

இலங்கைக்கும் பீஜித் தீவுக்கும் இடையிலான நீண்டகால நட்பின் அடையாளமாகவே பீஜித் தீவில் சிறந்த நீதி நிர்வாகத்தைக் கட்டியெழுப்புவதற்கு இலங்கை அரசு மிகவும் உறுதுணையாக செயற்பட்டு வருகின்றது என்று பீஜித் தீவின் பிரதம நீதியரசர் அந்தோனி கேற்ஸ் தெரிவித்துள்ளார். (சி)

# இலங்கைக்கு எதிரான அறிக்கைகள்; ஐ.நா. ஆணையாளர் மீது அரசு சீற்றம்

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளரின் அலுவலகத்திலிருந்து வரும் பக்கச்சார்பான, நீதியற்ற அறிக்கைகள் தொடர்பாகத் தான் உறுதியான விதத்தில் செயற்படப் போவதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க இது தொடர்பாகத் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையகத்திலிருந்து வரும் இலங்கை தொடர்பான நியாயமற்ற அறிக்கைகள் இனப்பதற்றத்தை உருவாக்கக்கூடியவை என்பதால் இலங்கை எதிர்காலத்தில் இவற்றுக்குக் கடுமையான பதிலையே வழங்கும்.

மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை விடுத்துவரும் பக்கச்சார்பான அறிக்கைகள் குறித்து அவருடன் ஆராய இலங்கை அரசு தயாராகவுள்ளது.

இந்தச் சந்திப்புகள் மூலம் திருப்தியான முடிவுகள் எட்டப்படாவிட்டால் இதற்குத் தீர்வு காண்பதற்கு சர்வதேச அளவில் நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசு முயலும்.

அமெரிக்காவின் அறிக்கை குறித்து ஆராய அரசு குழுவொன்றை அமைத்துள்ளமை மனித உரிமைகள் தொடர்பாக அது கொண்டுள்ள அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளது எனத் தெரிவித்துள்ளார். (சி)

# ஆஸ்திரேலியக் கப்பலிலுள்ள இலங்கையர்கள் 5 ஆண்டுகள் இந்தோனேஷியாவில் இருந்தனராம்

கொழும்பு,நவ.3

இந்தோனேஷியாவின் ரியாயு தீவுகளுக்கு அருகில் உள்ள ஆஸ்திரேலிய கப்பலில் உள்ள இலங்கையர்கள் தாங்கள் இந்தோனேஷியாவில் ஐந்து வருடங்கள் வாழ்ந்தவர்கள் எனத் தெரிவித்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவின் சுங்கத் திணைக்களக் கப்பலின் ஓசியானிக் வைகிங்கில் உள்ள இவர்கள் இந்தோனேஷியாவில் தாங்கள் ஐந்து வருடங்கள் வாழ்ந்தனர் எனவும் அங்குள்ள யு.என்.எச்.சி.ஆர். அலுவலகம் தம்மை அகதிகள் என ஏற்றுக் கொண்டுள்ளது எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் எந்த ஒரு நாடும் தம்மை ஏற்றுக்கொள்ளாதமையால் உண்டான விரக்தி காரணமாகவே படகுகளில் புறப்பட்டனர் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

"நான்கு, ஐந்து வருடங்கள் காத்திருந்த பின்னரே நாங்கள் சட்டவிரோத படகுகளில் புறப்பட்டோம்'' என இந்தோனேஷிய மொழியில் எழுதப்பட்ட கடிதத்தை அவர்கள் கப்பலுக்கு வெளியே எறிந்துள்ளனர்.

ஆஸ்திரேலிய அதிகாரிகள் தங்களை ஒரு வாரத்துக்குள் கப்பலிலிருந்து இறங்குமாறு கேட்டுள்ளனர் எனவும், எனினும் தாங்கள் அதனை ஏற்க மறுத்துள்ளனர் எனவும் தெரிவித்துள்ள இலங்கையர்கள் சர்வதேச சமூகம் தம்மீது கருணை காட்ட வேண்டும் எனக் கோரியுள்ளனர். (சி)

# குடாநாட்டில் செய்கையின்றியுள்ள விவசாய நிலங்களை பயன்படுத்துவதற்கான திட்டம் விரைவில் நடைமுறையில்

## சமூக சேவைகள் அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.3

குடாநாட்டில் பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்படாதிருக்கும் விவசாய நிலங்களைப் பயன்படுத்துவதற்கான திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்கென வட்டியில்லா இலகு கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

கூட்டுறவு அல்லது விவசாய சங்கங்களின் மூலம் பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்படாதிருக்கும் விவசாய நிலங்களைக் குத்தகைக்குப் பெற்று அவற்றில் பயிர்ச்செய்கைகளை மேற்கொண்டு பயன்களைப் பெற முடியும். இவ்வாறு தெரிவித்துள்ளார் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் திருநெல்வேலியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

விவசாயச் செய்கையை குடாநாட்டில் விருத்தி செய்வதன் மூலம் ஏராளமான இளைஞர், யுவதிகளுக்கு அவ்வுற்பத்திகள் சார்ந்த பல்வேறு தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கமுடியும்.

புதிய வகையிலான நாற்றுக்கள் இனங்காணப்பட்டு புதிய தொழில்நுட்பங்களை உபயோகித்து எமது விவசாயத்துறையை மேம்படுத்துவது அவசியமாகும்.

குறிப்பாக முந்திரிகைச் செய்கையில் இந்த உத்திகளைப் பயன்படுத்தவேண்டும். தூவல் நீர்ப்பாசன முறைமையையும் நாம் பரவலான பயன்பாட்டுக்குக் கொண்டு வரவேண்டும்.

பயிர்ச்செய்கைகளுக்குத் தேவையான எரு உரத்தை வவுனியா போன்ற பகுதிகளிலிருந்து எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குடாநாட்டின் விவசாயத் துறையை மேம்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வில் 927 பயனாளிகளுக்கு திராட்சைக் கன்றுகளும், 30 பயனாளிகளுக்கு தூவல் நீர்ப்பாசனத் தொகுதிகளும், மாம்பழ அறுவடைக்கான உபகரணங்களும் காளான் வளர்ப்புச் செய்கைக்கான உபகரணங்களும் அமைச்சரால் வழங்கப்பட்டன. (203-7-111)

# மாகாணத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட ஆங்கிலதினப் பாடல் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு,நவ.3

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்ட மட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட ஆங்கில தினப் போட்டியில் பாடல் போட்டியில் வெற்றிபெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:

*பிரிவு 3* - ஆ.ரோன் மெல்வின் கிறேகெரி (சென்.ஜோன்ஸ் கல்லூரி), சங்கவி கமலேந்திரன் (வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), மகேந்திரன் கீர்த்தாஞ்சலி (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை).

*பிரிவு 4* - விதுசன் உதயகுமாரன் (சென்.ஜோன் பொஸ்கோ), ஹரனிகா ரவிசங்கர் (வவுனியா தெற்கு, றம்பைக்குளம் மகளிர் ம.வி.), வைராகி வாகீசன் (வவுனியா தெற்கு, சைவப்பிரகாச மகளிர் கல்லூரி).

*பிரிவு 5* - சினோவா ஜெயராஜ் (சென்.ஜோன் பொஸ்கோ), மைக்கல் பியோனா பெனடிற் (சென்.ஜோன் பொஸ்கோ), பூஜா சபேசன் (வவுனியா தெற்கு, றம்பைக்குளம் மகளிர் ம.வி.).

*பிரிவு 6* - ஈ.ரெரன்ஸ் சுஜீவன் (சென்.ஜோன்ஸ்), விசாகி சிவகுமார் (வவுனியா தெற்கு தமிழ் மத்திய ம.வி), ஆன் மதுசானி சந்திரசேகரன் (மன்னார் சென்.சேவியர் மகளிர் கல்லூரி).

*பிரிவு 7* - இதயராஜன் அன்டர்சன் குரூஸ் (மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி), தயாபரன் லக்ஸ்மி (வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), சரோன் டென்யா துஷீந்திரன் (சுண்டுக்குழி மகளிர் கல்லூரி). (203-86)

*(வளரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் எடுக்கப்பட்ட படங்கள். அதிபர் சு.புண்ணியசீலன் மற்றும் ஆசிரியர்களால் விருந்தினர்களான யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் எம்.சின்னத்தம்பி, தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கைலாசநாதன் உட்பட ஏனையவர்கள் அழைத்து வரப்படுவதையும் பேராசிரியர் மா.சின்னத்தம்பி மாணவர் ஒருவருக்குப் பரிசில் வழங்குதல், ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் ஆறுதிருமுருகன் உரையாற்றுதல் ஆகியவற்றை ஏனைய படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

# யாழ்.மாவட்டத்தில் உயர்தரப் பரீட்சையில் தமிழ்ப்பாட சித்தி 100 வீதமாக உயர வேண்டும்

## யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் உரை

அச்சுவேலி,நவ.3

யாழ்.மாவட்டத்தில் ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் தமிழ் பாடத்தில் சித்தியடைவோர் வீதம் 78 இல் இருந்து 100 வீதமாக உயர வேண்டும்.

அதற்கான கற்பித்தல் நுட்பங்களை இந்த உயர்மட்டச் செயல் அமர்வில் ஆசிரியர்கள் பெற்றுச் சென்று வகுப்பறைகளில் பிரயோகிக்க வேண்டும்.

- இவ்வாறு கூறினார் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம்.

யாழ்.மாவட்டத்தில் ஜி.சீ.ஈ.உயர்தர வகுப்புக்களில் தமிழ் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு தேசிய கல்வி நிறுவகத்தின் ஏற்பாட்டில் நான்கு நாள்களுக்கு செயலமர்வு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறுகின்றது. கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகிய செயலமர்வின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

கடந்த காலங்களில் வெளிமாவட்டங்களில் உள்ள ஆசிரியர்களுக்கு கிடைத்த சந்தர்ப்பம் இந்த வருடம் யாழ்.மாவட்ட ஆசிரியர்களுக்குக் கிடைத்துள்ளது. இது வரவேற்கத்தக்க செயற்பாடாகும்.

தேசிய கல்வி நிறுவக வளவாளர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்களால் நடத்தப்படும் இந்தச் செயலமர்வு உயர்தர வகுப்பு ஆசிரியர்களுக்கு முழுமையான பயன் உடைய அமர்வாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை. செயலமர்வில் கண்டு கொள்பவற்றை மற்றும் நுட்பங்களை ஆசிரியர்கள் வகுப்பறைக்கு எடுத்துச்சென்று உரிய முறையில் மாணவர்களுக்கு பிரயோகிக்க வேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களின் தமிழ் பாட பெறுபேற்றின் வீதம் 78 ஆக இருப்பதை 100 வீதமாக உயர்த்த வேண்டும். தமிழ் பாடத்தில் சித்திபெறும் மாணவர்களுக்கு வேலை வாய்ப்பில் நல்ல எதிர்காலம் உண்டு. கலைத்துறை மாணவர்கள் தமிழ் பாடத் தெரிவை சுயவிருப்பத்துடன் ஏற்று நல்ல பெறுபேற்றைப் பெறுகின்ற நிலை ஏற்பட வேண்டும் - எனக் கூறினார். (203-11)

# கல்வி நிர்வாக சேவை தரம் I இற்குப் பதவியுயர்வு பெற்றோருக்கு எதிர்வரும் சனிக்கிழமை கல்வி அமைச்சில் நியமனக் கடிதம்

அச்சுவேலி,நவ.3

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் I இற்கு பதவிஉயர்வு பெற்றவர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் இருந்து கல்வி நிர்வாக சேவை தரம் I இற்கு எட்டுப்பேர் உயர்வு பெற்றுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் இருந்து பதவி உயர்வு பெறுவேர் பெயர் விவரம் வருமாறு:-

வீ.இராசையா - வடக்கு மாகாண கல்வித் திணைக்களம், எஸ்.பரஞ்சோதி - கோப்பாய் ஆசிரிய கலாசாலை, திருமதி.செ.மகாலிங்கம்- மேலதிக மாகாணக் கல்விப் பணிமனை, ப.விக்னேஸ்வரன் - வலிகாமம் கல்வி வலயம், எஸ்.குரூஸ்- மடுக்கல்வி வலயம், எஸ்.செல்வராசா - வடமராட்சி கல்வி வலயம், ரி.செல்வரத்தினம் - மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனை, திருமதி ஒக்வோல்ட்- வவுனியா கல்வி வலயம். (203- 11)




## பொற்பதி மீன் சந்தை மக்கள் பாவனைக்கு

யாழ்ப்பாணம்,நவ.3

குடத்தனை பொற்பதி மீன்சந்தை மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

இச்சந்தையானது கடந்த காலங்களில் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்திருந்தமையால் மக்கள் பாவனைக்கு விடப்படவில்லை.

தற்பொழுது இச்சந்தை பாவனைக்கு விடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (203- 78)

## இணுவில் மத்தி மாணவன் சித்திரப்போட்டியில் முதலிடம்

அச்சுவேலி,நவ.3

இணுவில் மத்திய கல்லூரியின் மாணவன் செல்வரட்ணம் அனுஸ்ரன் தேசிய மட்டத்தில் நடைபெற்ற சித்திரப்போட்டியில் பரிசில் பெற்றுள்ளார்.

உலக குடியிருப்புத் தினத்தை முன்னிட்டு கல்வி அமைச்சின் அழகியல் பிரிவும் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியும் இணைந்து "திலின நட்சத்திரம்" என்ற பெயரில் சித்திரம்/ கட்டுரைப் போட்டிகளை நடத்தியது.

உடுவில் கிழக்கைச் சொந்த இடமாகக் கொண்ட செல்வரட்ணம் அனுஸ்ரன் சித்திரப் போட்டியில் அகில இலங்கை மட்டத்தில் பரிசில் பெற்றுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (203- 11)

## பரணித் திருவிழா

யாழ்ப்பாணம்,நவ.3

யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்தில் அமைந்துள்ள சாமுண்டி சமேத சிவஞான வைரவர் ஆலயத்தின் பரணித் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

முற்பகல் 10.30மணிக்கு அபிஷேகத்துடன் பூசைகள் ஆரம்பமாகி. தொடர்ந்து வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று சுவாமி உள்வீதி வலம் வரும் நிகழ்வு இடம்பெறும். ( 201- 78)

# நெல்லில் ஒருங்கிணைந்த பயிர் பரீட்சார்த்த முயற்சி பயனளித்தது

யாழ்ப்பாணம், நவ.3

நெல்லில் ஒருங்கிணைந்த பயிர் போசன முகாமைத்துவப் பரீட்சார்த்த முயற்சி பயனளித்துள்ளது.

சண்டிலிப்பாய் பிரிவு கமநல சேவைகள் நிலைய விவசாய போதனாசிரியர் திருமதி பி.மணிவண்ணன் தலைமையில் இச் செயற்றிட்டம் வெற்றியளித்துள்ளது.

வலி.தென்மேற்கில் தெரிவு செய்யப்பட்ட 32 விவசாயிகளுக்கு சேதன மற்றும் அசேதன பசளை பிரயோக முறைகளை ஒருங்கிணைந்த முறையில் மானிப்பாய் மேற்கில் மேற்கொண்ட முயற்சியின் பலனாகவே விவசாயிகள் நன்மையடைந்து வருகின்றனர்.

நெல்லில் ஒருங்கிணைந்த பயிர் போசன முகாமைத்துவ செயற்றிட்டத்திற்கான நடவடிக்கையினை யாழ்.மாவட்ட விவசாயிகள் சமாசத் தலைவர் க.முதலியார் மேற்கொண்டுள்ளார்.

நெற்பயிர்ச் செய்கை தொடர்பான பாடவிதானத்தை பாடவிதான உத்தியோகத்தர் எஸ்.சௌந்தரராஜன் மேற்கொண்டுள்ளார். (203-302)

# யாழ்.மாநகரசபைப் பகுதியில் புனரமைப்புப் பணிகள் வேகமாக

## மாநகர மேயர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,நவ.03

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதியிலுள்ள வெள்ள வாய்க்கால்கள், குளங்கள் ஆகியனவற்றைப் புனரமைக்கும் வேலைத் திட்டங்கள் மிக வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக யாழ்.மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா குறிப்பிட்டார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்ட இவ்வேலைத் திட்டம் வேலைப் பகிர்வின் மூலமாக யாழ். மாநகர சபையின் வேலைத்தளப் பகுதியினரும், சுகாதாரத் தொழிலாளர்களும், வீதி வேலைத் தொழிலாளர்களும் இணைந்து ஈடுபட்டு வருகின்றனர்.

பொம்மை வெளியிலுள்ள ராஜாளி குளம், ஒஸ்மானியக் கல்லூரிக்கு அருகிலுள்ள குளம், கொட்டடியிலுள்ள கற்குளம் மற்றும் தாமரைக்குளம் ஆகியன ஆழமாக்கிப் புனரமைக்கும் பணிகளுடன் குளத்தினுள் காணப்பட்ட சல்பீனியா தாவரமும் வெட்டி அகற்றப்பட்டு வருகிறது.

இதில் முறைமைப்படுத்தப்பட்ட இலகு வேலைத்திட்டத்தின் கீழ் கற்குளம், தாமரைக்குளம் புனரமைப்பில் ஈடுபடுவதற்கான 2ஆயிரத்து 500 மனித வலுவிற்கான உணவினை வழங்க உலக உணவு நிறுவனம் முன்வந்துள்ளது.

மேலும், இப்பகுதியிலுள்ள 35 குளங்களை மையமாகக் கொண்ட வெள்ள வாய்க்கால்களையும் துப்புரவு செய்யும் பணி இடம்பெற்று வருகிறது.

இதில் வீரமாகாளி அம்மன் கோயில் குளத்தை மையமாகக் கொண்ட வெள்ள வாய்க்கால்களின் துப்புரவு பணி தற்போது நிறைவு பெற்றுள்ளது என்று கூறப்பட்டது.

மேற்படி வேலைத்திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும் உழவு இயந்திரங்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள் அவற்றின் எரிபொருள்களுக்கான செலவு ஆகியனவற்றை யாழ்.மாநகர சபையே பொறுப்பேற்றுள்ளதாகவும் மாநகர மேயர் மேலும் தெரிவித்தார். (203-14-111)

## தென்மராட்சி மத்தியஸ்தர் சபை உறுப்பினர் வெள்ளியன்று பதவியேற்பு

யாழ்ப்பாணம்,நவ.3

தென்மராட்சிப் பிரதேச மத்தியஸ்தர்சபை உறுப்பினர்கள் கடந்த வெள்ளிக்கிழமை பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலர் செ.சிறிநிவாசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி அ.பிரேம்சங்கர் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு சபை உறுப்பினர்களுக்கு நியமனக் கடிதங்களை கையளித்தார்.

சபை தவிசாளர், பிரதி தவிசாளர், உறுப்பினர்கள் ஆகியோரின் சத்தியப் பிரமாணங்களையும் ஏற்றுக் கொண்டார்.இந்த நிகழ்வில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை, நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் யாழ்.மாவட்ட அலுவலர் ப.சனாதனசர்மா, பொலிஸ் அலுவலர்கள், மதகுருமார், கிராமஅலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (203- 131- 207)

## பயிற்சி நெறியின் நிறைவுநாள் நிகழ்வு

கைதடி,நவ.3

மாற்று வலுவுள்ளோருக்கான மின்சார உபகரணங்கள் திருத்தும் பயிற்சி நெறியின் நிறைவுநாள் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30மணிக்கு உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சமூக சேவைத்திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலர் ஆ.ஞானவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக உடுவில் பிரதேச செயலர் திருமதி ம.சதீசனும், சமூக சேவைத் திணைக்களத்தின் வடக்கு மாகாணக் கணக்காளர் எஸ்.அகிலனும் கலந்து கொள்வர். (201- 288)

## 'சபரீச ஐயப்பா' இசை இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம்,நவ.3

கோண்டாவில் சபரீச ஐயப்பன் ஆலய 'சபரீச ஐயப்பா' இசை இறுவட்டு வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 3மணிக்கு ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

டாக்டர் இருதயாவின் எழுத்தாக்கத்தில் ஸ்ரீகுருமண்டலம் குருசுவாமி வீரமாணிதாசன் இசை அமைத்துப் பாடிய இந்த இசை இறுவட்டு சபரீச ஐயப்ப ஆலய அறங்காவலரும் குருசுவாமியுமான கி.அரிகரசுத சிவாச்சாரியார் தம்பதியினரால் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. (203)

## வாழைக்குலைச் சங்கலொறி பதிவுகள் மேற்கொள்ளப்பட்டதும் இங்கு கொண்டுவரப்படுமாம்

நல்லூர்,நவ.3

நீர்வேலி வாழைக்குலைச் சங்கத்திற்கான லொறி மோட்டார்,திணைக்களத்தின் விதி முறைகளுக்கமைய பதிவுகள் செய்யப்பட்டதும் இங்கு வந்து சேர ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் என யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

வாழைக் குலைச்சங்கத்திற்கென லொறி வழங்கப்பட்டிருந்தது. எனினும், அது இது வரை வந்து சேரவில்லை என்று திருநெல்வேலி விவசாயத் திணைக்களத்தில் நடைபெற்ற திராட்சைக்கன்றுகள், விவசாய உள்ளீடுகள் வழங்கும் நிகழ்வில் மேற்படி சங்கத்தினர் சுட்டிக்காட்டினர். இதற்குப் பதிலளிக்கும் போதே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (203- 111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதை முதலாவது படத்திலும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட 'சேவாலங்கா' நிறுவனப் பணிப்பாளர் வி.கேசவன், பாடசாலை அதிபர் திருமதி கி.சிவராஜா ஆகியோர் உரையாற்றுவதை அடுத்துள்ள படங்களிலும் நிகழ்வில் இடம்பெற்ற மாணவரின் கலை நிகழ்வின் ஒருகாட்சியை நான்காவது படத்திலும் காணலாம். (படங்கள்: சுன்னாகம் செய்தியாளர்)

# மாகாணமட்ட தொழிற்றுறைக் கண்காட்சியில் பரிசில் பெற்றவர்களின் விவரம் வெளியானது

யாழ்ப்பாணம், நவ.3

யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்ற மாகாண மட்ட தொழிற்றுறைக் கண்காட்சியில் மாகாண மட்டத்தில் பரிசில் பெறுபவர்களின் விவரம் வெளியாகியுள்ளது.

கடந்தமாதம் 18 ஆம், 19 ஆம் திகதிகளில் நடைபெற்ற இந்தக் கண்காட்சியில் பரிசில் பெற்றோர் விவரம் வருமாறு:-

**கைப்பணிப் பொருள்கள்**

**பற்றிக் துணி/உடை**

எ.மேரி துஸ்யந்தினி (பருத்தித்துறை -முதலாம் இடம்), எ.மேரி துஸ்யந்தினி- (பருத்தித்துறை-மூன்றாம் இடம்).

**பனை, தென்னை பொருள்கள்**

கே.சோதிராஜா(நல்லூர்-முதலாம் இடம்),

**கயிறு திரித்தல்**

எஸ்.சுமதி- (நல்லூர்-முதலாம் இடம்), ரி.ஜெகதீஸ்வரி (தெல்லிப்பழை- இரண்டாம் இடம்), என்.பிரதீபா-(கரவெட்டி-மூன்றாம் இடம்), எஸ்.குருநாதன் (தெல்லிப்பழை- நான்காம் இடம்), எ.கவிதா (கரவெட்டி-நான்காம் இடம்), கே.தர்சினி (நல்லூர்-நான்காம் இடம்),

**பனம் பொருள்**

கே.உஷாநந்தினி (சண்டிலிப்பாய்-முதலாம் இடம், வி.மேனகா (நல்லூர்-இரண்டாம் இடம்), பி.அனுக்கிரிஸ்ரா (காரைநகர்-மூன்றாம் இடம்), எம்.மேனகா (கோப்பாய்-நான்காம் இடம்), பி.பிரியதர்சினி (சண்டிலிப்பாய்-நான்காம் இடம்),

பி.பிரியதர்சினி(சண்டிலிப்பாய்-நான்காம் இடம்) , எம்.மேனகா (கோப்பாய்- நான்காம் இடம்), எ.லூத்செல்வி (காரைநகர்- நான்காம் இடம்).

**காதிதக் கூழ்**

கே.தேவகுமாரன் (நல்லூர்-முதலாம் இடம்), எஸ்.சுரந்திரன் (கோப்பாய்- இரண்டாம் இடம்), எம்.குணநாயகம் (நல்லூர்-மூன்றாம் இடம்), என்.சாந்தகுமாரி (சண்டிலிப்பாய்-அதிசிறப்பு).

**பற்றிக் கயிறு வேலை**

ஐ.விஜிதா (நல்லூர்-முதலாமிடம்), ஐ.விஜிதா (நல்லூர் -இரண்டாம் இடம்), ஐ.விஜிதா (நல்லூர்-மூன்றாம் இடம்), எஸ். சந்திரகலா (நல்லூர்-நான்காம் இடம்).

**பற்றிக் உடைகள்**

கே.உஷாந்தினி (கரவெட்டி-முதலாம் இடம்), வி.மஞ்சுளா (பருத்தித்துறை-இரண்டாம் இடம்), ரி.ரேணுகா (பருத்தித்துறை-மூன்றாம் இடம்).

**வர்ண வேலை**

எம்.தாமிரா (யாழ்ப்பாணம்-முதலாம் இடம்). என்.சிவகுமார் (பருத்தித்துறை-இரண்டாம் இடம்), எஸ்.சிவப்பிரகாசம் (யாழ்பாணம்-மூன்றாம் இடம்), எஸ். சிவப்பிரகாசம் (யாழ்ப்பாணம்- நான்காம் இடம்).

**தென்னை**

எஸ்.குருநாதன் (தெல்லிப்பழை- முதலாம் இடம்), எஸ்.குருநாதன்' (தெல்லிப்பழை-இரண்டாம் இடம்), ஐ.திவாதினி (தெல்லிப்பழை- அதிசிறப்பு),

**நூல்**

எஸ்.நாகேஸ்வரி (சண்டிலிப்பாய்- முதலாம் இடம்), எஸ்.நாகேஸ்வரி (சண்டி லிப்பாய்-இரண்டாம் இடம்), எம். றணிதா (சங்கானை-மூன்றாம் இடம்), எஸ்.செந்தீபா (தெல்லிப்பழை-நான்காம் இடம்).

**கைப்பட்டி**

எஸ்.நாகேஸ்வரி (சண்டிலிப்பாய்- முதலாம் இடம்),எஸ்.நாகேஸ்வரி (சண்டிலிப்பாய்-இரண்டாம் இடம்).

**மரவேலை**

ஜே.ஜெயப்பிரகாஸ் (நல்லூர்- முதலாம் இடம்), இ.கலைச்செல்வன் (நல்லூர்-இரண்டாம் இடம்) வி.பாலேந்திரன் (தெல்லிப்பழை-நான்காம் இடம்).

**மர உருவங்கள்**

வி.பத்மநாதன் (சங்கானை-முதலாம் இடம்), பி.சுதர்சன் (சங்கானை-இரண் டாம் இடம்), இ.வின்னேஸ்வரன் (உடுவில்-மூன்றாம் இடம்).

**வரைதலும் உருவங்களும்**

இ.கலைச்செல்வன் (நல்லூர்-முதலாம் இடம்), வி.பாலேந்திரன் (தெல்லிப்பழை-இரண்டாம் இடம்),வி.பாலேந்திரன் (தெல்லிப்பழை-மூன்றாம் இடம்), வி.பாலேந்திரன் (தெல்லிப்பழை- நான்காம் இடம்).

**தோல் வேலை**

பி.ஜனாகி (பருத்தித்துறை-முதலாம் இடம்), பி.ஜனாகி (பருத்தித்துறை -இரண்டாம் இடம்), என். உதயகுமார் (நல்லூர் -மூன்றாம் இடம்).

**பற்றிக் வர்ணம் தீட்டல்**

எம்.தனுஜா (நல்லூர்-முதலாம் இடம்), எஸ். சிவ மாலினி (இரண் டாம் இடம்), எ.அனிற் சபிதா (பருத்தித் துறை- மூன்றாம் இடம்).

**கோயில் பொருள்கள்**

வி.சோமேஸ்வரி (உடுவில்-முதலாம் இடம்), வி.சோமேஸ்வரி (உடுவில்- இரண்டாம் இடம்), வி.சோமேஸ்வரி (உடுவில்-மூன்றாம் இடம்), வி.சோமேஸ்வரி (உடுவில்- அதிசிறப்பு), வி.சோமேஸ்வரி (உடுவில்-அதி சிறப்பு),வி .சோமேஸ்வரி (உடுவில்- அதிசிறப்பு).

**மண் வேலை**

எம்.பரமநாதன் (நல்லூர்-முதலாம் இடம்), ரி.ரோகிணிதேவி (சங்கானை- இரண்டாம் இடம்), பி.நடனமலர் (சங் கானை- மூன்றாம் இடம்), பி.நடனமலர் (சங்கானை- நான்காம் இடம்).

**புல் பொருள்கள்**

கே.சோதிராஜா (நல்லூர்-முதலாம் இடம்).

**உலோக வேலை**

ரி.கதிர்செல்வன் (நல்லூர்-முதலாம் இடம்), கே.சர்நிலா (நல்லூர்-இரண்டாம் இடம்), ரி.சுஜீவன் (நல்லூர் மூன்றாம் இடம்).

**ஆபரண வேலை**

வி.தனராஜா (யாழ்ப்பாணம்-முதலாம் இடம்), எ.மகேஸ்வரன் (யாழ்ப்பாணம்-இரண்டாம் இடம்), கே.கல்பனா (தெல்லிப்பழை-மூன்றாம் இடம்).

**கல் ஆபரண வேலை**

கே.விஜயகுமார் (தெல்லிப்பழை- முதலாம் இடம்), கே.கல்பனா (தெல்லிப்பழை-இரண்டாம் இடம்), கே.இராஜகோபால் (யாழ்ப்பாணம்-மூன்றாம் இடம்).

**பவள ஆபரண வேலை**

கே.கேமலா (யாழ்ப்பாணம்- அதிசிறப்பு).

**இசைக்கருவிகள்**

எம்.பார்த்தீபன் (உடுவில்-முதலாம் இடம்).

**ஏனைய பொருள்கள்**

என்.குலேந்திரன் (யாழ்ப்பாணம்- முதலாம் இடம்), பி.சிவப்பிரகாசம் (யாழ்ப்பாணம்- இரண்டாம் இடம்), எஸ்.தயாபரன் (யாழ்ப் பா ணம்- மூன்றாம் இடம்), வி.சோமேஸ்வரி (உடுவில்- நான்காம் இடம்), பி.றீற்றாபெனடிக் (சண்டிலிப்பாய்- ஐந்தாம் இடம்), வி.சோமேஸ்வரி (உடுவில்- ஆறாம் இடம்), பி.சிவப்பிரகாசம் (யாழ்ப்பாணம்- ஏழாம் இடம்), எஸ். சங்கீதா (யாழ்ப்பாணம்-எட்டாம் இடம்).

**ஏனைய மரவேலை**

ஆர்.ஹரிகரன் (உடுவில்-முதலாம் இடம்), கே.ஜசிதரன் (உடுவில்- இரண்டாம் இடம்).

**கைத்தறிப் பொருள்கள்**

**கட்டில் விரிப்பு**

பி.ராஜேந்தினி (சங்கானை-முதலாம் இடம்),ஆர்.வனஜா (கரவெட்டி-இரண்டாம் இடம்), எஸ்.சுசீலா (தெல்லிப்பழை-மூன்றாம் இடம்),ஷேநிரோஜன் (கரவெட்டி- அதி சிறப்பு), எஸ். சிவமலர்(தெல் லிப்பழை- அதிசிறப்பு).

**துவாய்**

பி.ராஜேஸ்வரி (வவுனியா-முதலாம் இடம்), எஸ்.சுசீலா (தெல்லிப்பழை- இரண்டாம் இடம்), பி.ராஜேஸ்வரி (வவு னியா-மூன்றாம் இடம்).

**சேலை**

ஜி.மல்லிகாவதி (வவுனியா-முதாலாம் இடம்), ஜி.மல்லிகாவதி (வவுனியா- இரண்டாம் இடம்), சாந்தரூபி (சாவகச்சேரி-மூன்றாம் இடம்), எம்.தயாநிதி (கரவெட்டி-அதிசிறப்பு), ஜி.மல்லிகாவதி (வவுனியா-அதிசிறப்பு).

**பெண்கள் அணியும் ஆடைகள்**

பி.ராஜேஸ்வரி (வவுனியா-முதலாம் இடம்), பி.ராஜேஸ்வரி (வவுனியா- இரண்டாம் இடம்),பி.ராஜேஸ்வரி (வவுனியா- மூன்றாம் இடம்), பி.ராஜேஸ்வரி (வவுனியா-அதிசிறப்பு).

**ஜன்னல் துணி**

பி.பிறேமினி(கோப்பாய்-இரண்டாம் இடம்), எஸ்.மங்கலிகா (வவுனியா- மூன்றாம் இடம்).

**மேசைத் துணி**

எம்.தயாநிதி (கரவெட்டி-முதலாம் இடம்), என்.சுயமலதா (சங்கானை- இரண்டாம் இடம்), கே.சிவசக்தி (வவுனியா-மூன்றாம் இடம்), ரி.சசிகுமார் (உடுவில்-அதிசிறப்பு), என்.மஞ்சுதா (சங்கானை-அதிசிறப்பு).

**ஏனைய சிறிய மேசை விரிப்பு**

எஸ்.ஜீவரூபி (சாவகச்சேரி-இரண்டாம் இடம்).

**ஏனைய பைகள்**

ரி.ராஜேஸ்வரி (சாவகச்சேரி-மூன்றாம் இடம்). (203)

## கண்ணீர் அஞ்சலி



எமது தேவஸ்தான கணக்கு எழுதுநர்
இ.ரவீந்திரன் அவர்களின் பாசமிகு தந்தை

**பொன்னுத்துரை இரத்தினசபாபதி**

அவர்களின் திடீர் மறைவைக் கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம்.
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம், யாழ்ப்பாணம். (சி/562073) ஆதீன மஹாசபை.

## மரண அறிவித்தல்

### றொக்கேசன் யோசெவ்

(முன்னாள் அதிபர், யாழ்ப்பாணம் ஒ.எல்.ஆர். வித்தியாலயம், நாவாந்துறை றோ.க.தமிழ் வித்தியாலயம்)

யாழ்.மருதடி வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட றொக்கேசன் யோசெவ் நேற்று (02.11.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (03.11.2009) செவ்வாய்க்கிழமை கொழும்பு, கல்கிசையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அ.வெ.அரியநாயகம்,
மருதடி வீதி,
யாழ்ப்பாணம். (சி/562074)

தகவல்:
சாந்தி (மகள்- கல்கிசை)
T.P : 0718320150

## சாவகச்சேரி கலை மன்றத்தில் தவறவிடப்பட்ட பயணப் பொதிகள்

யாழ்ப்பாணம், நவ.3

சாவகச்சேரி கலைமன்ற மண்டபத்தில் கைவிடப்பட்டிருந்த மூன்று பயணப் பொதிகள் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கடந்த 28 ஆம் திகதி வவுனியாவிலிருந்து அழைத்து வரப்பட்டவர்களின் பொதிகளாக இவை இருக்குமென்பதால் தவறவிட்டவர்கள் உரிய ஆதாரங்காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (203-207)


## கல்விமாணி நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படாதவர் சந்திப்பு

யாழ்ப்பாணம், நவ.3

கல்விமாணி பரீட்சைக்குத் தோற்றியவர்களில் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படாத ஆசிரியர்கள் இன்று சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்திக்கவுள்ளதால் காலை 6.30 மணிக்கு அமைச்சரின் யாழ்.அலுவலகத்தில் ஒன்றுகூடுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி வித்தியாலயத்தில் 2009 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி 142 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த எமது வித்தியாலய மாணவன்



**ஜெ.டினோஷன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் அண்மித்த புள்ளிகளைப்பெற்ற

ச.கௌரீஸ்சன் - 133 புள்ளிகள்
ஜெ.லக்ஷணன் - 123 புள்ளிகள்
கு.துஜீபா - 120 புள்ளிகள்
அ.சுஜீதன் - 117 புள்ளிகள்

மாணவச் செல்வங்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் சகல வளங்களும் பெற்று மென்மேலும் சிறப்புடைய நயினை நாகபூஷணி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி வித்தி.

(90464)

## பதவி வெற்றிடங்கள்

யாழ்.நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஹோட்டலுக்கு பின்வரும் பதவிகளுக்கான உத்தியோகத்தர்கள் தேவைப்படுகின்றனர்.

1. ஹோட்டல் முகாமையாளர்
தகைமைகள் :- 1. ஹோட்டல் முகாமைத்துவ கல்விச் சான்றிதழும், முன் அனுபவமும்.
2. மும் மொழிகளிலும் சேவை அனுபவமுள்ளவர்

2. உதவியாளர்/பரிமாறுபவர்
தகைமை :- வேலை முன் அனுபவமுள்ளவர்

3. வரவேற்பாளர்
தகைமை :- க.பொ.த. (சா/த) சான்றிதழ். பெண்பாலார் விரும்பத்தக்கது.

3.காசாளர்
தகைமை :- க.பொ.த.உயர்தரம்-வர்த்தக பிரிவில் சித்தி பெற்றிருத்தல்,கணக்கியலில் வேலை முன் அனுபவம்.

மேற்படி பதவிகளுக்கான தகைமை உள்ளவர்கள் உரிய ஆவணங்களுடன் எதிர்வரும் புதன் (04.11.2009), வியாழன் (05.11.2009) ஆகிய நாள் களில் பி.ப. 2.30-4.30 மணிக்கிடையில் கீழ்க்குறிப்பிட்டுள்ள முகவரிக்கு நேரில் வரவும்.

உரிமையாளர்,
இல.33, ஆசீர்வாதம் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(90537)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரத் பொன்சேகா அரசியலுக்கு வரவிரும்பினால் தமது இராணுவ பதவியிலிருந்து விலக வேண்டும்

## - தமிழ்க் கூட்டமைப்பு எம்.பியான என். ஸ்ரீகாந்தா பேச்சு -

**கடந்த ஒக்ரோபர் மாதம் 20ஆம் திகதியன்று நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கான குறைநிரப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஸ்ரீகாந்தா ஆற்றிய உரை உதயன் உட்பட தமிழ் பத்திரிகைகளில் "பொன்சேகாவைப் பொது வேட்பாளராக நிறுத்தினால் கூட்டமைப்பு எதிர்க்கும் - ஸ்ரீகாந்தா தெரிவிப்பு" என்ற சாரப்பட்ட தலைப்பில் செய்தியாக வெளியாகியிருந்தது.**

**அந்த உரையின் அடிப்படைக் கருத்தைத் திசை திருப்பும் விதத்தில் நாளிதழ்களில் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன என்று சுட்டிக் காட்டப்பட்டிருப்பதை அடுத்து, ஸ்ரீகாந்தா எம்.பி. அன்றைய தினம் ஆற்றிய உரையின் முழு வடிவம் இங்கு பிரசுரமாகின்றது. அவருடைய உரை குறித்த செய்தி ஒக்ரோபர் 21ஆம் திகதியன்று உதயன் முதலாம் பக்கத்தில் வெளியாகி இருந்தது. (ஆ-ர்)**

'யுத்தம் முடிந்துவிட்டது. அதையிட்டு வெற்றி மகிழ்ச்சியிலே இருக்கின்றோம்' என்று இந்தப் பிரேரணையைச் சமர்ப்பித்த அமைச்சர் சரத் அமுனுகம குறிப்பிட்டார்.

இந்த யுத்தம் இலங்கைக்கும் ஏதோ ஒரு வெளிநாட்டுக்குமிடையில் நடைபெற்ற யுத்தமல்ல; இது ஓர் உள்நாட்டு யுத்தம். இந்த யுத்தத்திலே கொல்லப்பட்டவர்கள் அனைவருமே இலங்கைப் பிரஜைகள் தாம் என்பதை நாங்கள் மறந்துவிடக்கூடாது. படைத்தரப்பினராக இருந்தாலென்ன, எதிர்த்தரப்பிலே போரிட்ட தமிழ்த் தீவிரவாத இளைஞர்களாக இருந்தாலென்ன அல்லது இந்த இரண்டு தரப்புகளுக்கும் நடுவில் சிக்குண்டு உயிரிழந்த பொதுமக்களாக இருந்தாலென்ன, அனைவருமே இந்த நாட்டின் பிரஜைகள் என்பதை நாங்கள் மறந்துவிடக்கூடாது.

இந்த உண்மையின் அடிப்படையிலே, நடந்து முடிந்துவிட்ட இந்த யுத்தத்தைப் பற்றித் தொடர்ந்தும் மகிழ்ச்சியோடு பேசிக்கொண்டிருப்பதில் எந்தவித அர்த்தமும் இருக்கமுடியாது; யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களைத் தொடர்ந்தும் நீடித்துக்கொண்டிருக்க முடியாது. காரணம், இந்த யுத்தத்துக்குக் காரணமான தேசியப் பிரச்சினை மற்றும் இந்த யுத்தம் விட்டுச் சென்றிருக்கின்ற பல்வேறு பிரச்சினைகள் என்பவற்றுக்கு முழுநாடும் முகங்கொடுத்தாக வேண்டும்.

இந்த யுத்தத்தின் விளைவாகப் பல்லாயிரக்கணக்கான தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். அவர்களுடைய குடும்பங்கள் நிர்க்கதியாகியிருக்கின்றன. பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் பெற்றோரில் ஒருவரை இழந்த நிலைமை. சில ஆயிரக்கணக்கான குழந்தைகள்



என். ஸ்ரீகாந்தா

பெற்றோர் இரண்டு பேரையுமே இழந்த நிலைமை. இதைப்போல, படைத்தரப்பிலே போரிட்ட சிங்கள இளைஞர்கள் பல்லாயிரக்கணக்கிலே கொல்லப்பட்ட காரணத்தினால் அந்தக் குடும்பங்களும் இன்று பரிதவித்து நிற்பதை நாங்கள் நன்றாக அறிவோம். ஆகவே, இந்த மனிதாபிமானப் பிரச்சினைக்கு முழு நாடும் முகங்கொடுத்தாக வேண்டும்.

சில இடைவேளைகளின் மத்தியிலும் கூட தொடர்ந்த யுத்தம், இருபத்தியைந்து வருட காலமாக - 1983 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து - நீடித்திருந்ததென்ற உண்மையின் பின்னணியிலே-

இந்த யுத்தம் இடம்பெற்ற வடக்கு, கிழக்கு மாகாணங்கள் கடந்த இருபத்தைந்து வருட காலத்திலே அர்த்தமுள்ள எந்தவொரு அபிவிருத்தியையும் சந்தித்திருக்கவில்லையென்ற உண்மையின் அடிப்படையிலே -

இன்று யுத்தத்தினால் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டு சின்னாபின்னப்படுத்தப்பட்டிருக்கின்ற வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்குத் தேவைப்படுகின்ற அவசரமான, அவசியமான பொருளாதாரக் கட்டுமானங்களைப் பொறுத்தமட்டிலே என்ன நடைபெறப்போகின்றது என்ற கேள்வியை இந்தச்சந்தர்ப்பத்திலே நாங்கள் எழுப்பக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

### எதற்காக இத்தனை படையினர்?

ஒரு நிலையான இராணுவத்தை இந்த நாடு கொண்டிருக்கின்றது; நிலையான இராணுவம், அதுவும் இலட்சக் கணக்கிலே, சின்னஞ்சிறிய இந்த இலங்கைத் தீவுக்கு எந்த விதத்திலும் தேவையா னதல்ல. எப்பொழுதும் இந்தச் சபையிலே அரச தரப்பினரால் பிரஸ்தாபிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தோற்கடிக் கப்பட்டி ருக்கின்றது. இந்த நிலை மையிலே ஒரு பாரிய இராணுவம் - பாரிய படைகள் - இந்த நாட்டுக்கு மேலும் அவசியம்தானா என்ற கேள்வியை நாங்கள் எழுப்பவேண்டியிருக்கின்றது. பல இலட்சக்கணக்கிலே படையினரை வைத்துக்கொண்டு எமது பொருளாதாரத்தின் ஒரு முக்கியமான பங்கினை படைத்தரப்புக்கெனச் செலவழிப்பது எந்த அடிப்படையில் அறிவுபூர்வமானது?

தேசியப் பிரச்சினையான இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியுமென்றால் இந்த நாட்டுக்குப் பாரிய இராணுவம் தேவைப்படாது. ஆனால், இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, தமிழ் மக்கள் தரப்பிலிருந்து இனிமேல் எந்தவொரு இராணுவ ரீதியான எழுச்சியும் இடம்பெறாத விதத்திலே ஒரு புதிய இலங்கையைக் கட்டியெழுப்புவது தொடர்பில் அரச தரப்பிலே வேறு எண்ணங்கள் இருக்குமாக இருந்தால் -

அதாவது தமிழினம் ஒட்டுமொத்தமாக இராணுவ ரீதியாக எந்தச் சந்தர்ப்பத்திலும் எழுந்துவிடாமல் அடக்கி வைக்கப்படக் கூடிய விதத்திலே - ஆங்கிலத்திலே சொல்வதானால் - Pre-emptive move என்று கூறலாம் - பிரச்சினைகள் முன்கூட்டியே தடுக்கப்படுவதற்கு இந்த நாட்டிற்கு ஒரு பாரிய இராணுவம் தேவை என்று கருதி, வடக்கு, கிழக்கு மாகாணங்களை ஊடறுத்துப் பாரிய இராணுவ முகாம்கள் தேவை என்கின்ற சிந்தனையின் அடிப்படையிலே அரசு செயற்படுமாக இருந்தால் -

நிச்சயமாக இந்த நாட்டை எவரும் பொருளாதார ரீதியாகக் கட்டியெழுப்ப முடியாது; தேசிய ஒற்றுமையைச் சாதிக்கவும் முடியாது.

இந்த யுத்தத்துக்குக் காரணமாக அமைந்த தேசியப் பிரச்சினைக்கு அரசு விரைவாக அரசியல் தீர்வு ஒன்றை முன்வைக்க வேண்டும் என்று நாங்கள் சார்ந்திருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றது.

அந்த அரசியல் தீர்வு காணுகின்ற விடயத்திலே தமிழ் மக்களுடைய, தமிழ் பேசும் மக்களுடைய அரசியல் அபிலாஷைகளை ஒன்றுபட்ட நாட்டுக்குள்ளே தீர்த்து வைக்கக்கூடிய விதத்திலே ஒரு தேசிய இணக்கப்பாட்டை நாங்கள் எட்ட முடியுமாக இருந்தால், படைகளின் செலவினத்துக்காகப் பல்லாயிரம் கோடி ரூபாவை வருடா வருடம் நாங்கள் [illegible] வேண்டியதில்லை: எரித்துத் தொலைக்க வேண்டியதில்லை. இந்தப் பணத்தை நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு நாங்கள் செலவழிக்க முடியும். எனவேதான், பாரிய இராணுவத்தைப் படிப்படியாகக் குறைக்கின்ற முயற்சி ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று நாங்கள் கூறுகிறோம். இராணுவத்திலுள்ள இளைஞர்கள் இராணுவத்திலிருந்து சுய விருப்பத்தோடு படிப்படியாக விலகிச் செல்கின்ற ஒரு திட்டத்தை அரசு முன்வைக்கவேண்டும். இந்த முயற்சியிலே எதிர்க்கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும். இந்த இளைஞர்கள் சுயமாக இராணுவத்திலிருந்து வெளியேறி, பொருளாதார ரீதியில் இலங்கைத் தீவுக்குத் தங்களுடைய பங்களிப்பை வழங்கக்கூடிய விதத்தில் பல்வேறு துறைகளில் தங்களை ஈடுபடுத்திக்கொள்கின்ற பாரிய தேசிய திட்டமொன்று இன்று அவசரமாகத் தேவை. ஒருபுறம் இந்த நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்கின்ற அதேவேளையில், மறுபுறம் இராணுவத்தினுடைய எண்ணிக்கையைப் படிப்படியாகக் குறைப்பதன் ஊடாக யுத்தம் முடிந்துவிட்டிருக்கின்ற சூழ்நிலையிலே, பல்லாயிரம் கோடி ரூபாவை இந்த நாட்டின் தேசியப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்குச் செலவழிக்க முடியும். இதைப் பற்றிக் கூட்டாகச் சிந்தித்துச் செயற்பட வேண்டிய கடமையை நாங்கள் அனைவரும் கொண்டிருக்கின்றோம் என்பதை நான் அழுத்தம் திருத்தமாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

### நேர்மையாக செயற்பட அரசுத் தரப்பு தயாரா?

இது ஒரு தேசியப் பிரச்சினை. இதனைத் தீர்க்கும் விடயத்தில் மனப்பூர்வமாக, விசுவாசமாக, நேர்மையோடு, ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை வழங்குவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தயாராக இருக்கின்றது என்பதனை நாங்கள் இந்தச் சபைக்கு உள்ளேயும் வெளியேயும் தொடர்ந்து கூறி வந்திருக்கின்றோம். எமது இந்த நிலைப்பாட்டிலே எந்தவித மாற்றமும் கிடையாது, இருக்கவும் மாட்டாது.ஆனால் அரசு துணிச்சலோடு, அதேநேரம் நேர்மையோடு செயற்பட வேண்டிய கடமையைக் கொண்டிருக்கின்றது. அதைவிடுத்து குறைநிரப்புப் பிரேரணைகளைச் சமர்ப்பிப்பதனூடாக இந்தச் சபையினுடைய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு, ஒரு குறுகிய கண்ணோட்டத்தோடு அரசு செயற்படுமாக இருந்தால் - வடக்கு, கிழக்கிலே இராணுவ முகாம்கள் நிரந்தரமாகத் தேவை என்கின்ற அபிப்பிராயத்தோடு அரசு செயற்படுமாக இருந்தால்-

தமிழினத் தரப்பிலிருந்து எதிர்காலத்திலும் பிரச்சினைகள் வரலாம் என்கின்ற சந்தேகத்தோடும் பயத்தோடும் ஒரு பாரிய, நிலையான படைத்தரப்பினை - இராணுவத்தை அரசு கொண்டிருக்க வேண்டும் என்கின்ற எண்ணத்தோடு இலங்கை அரசு செயற்படுமாக இருந்தால் -

நிச்சயமாக அது ஆக்கபூர்வமான, பகுத்தறிவு ரீதியிலான அணுகுமுறையாக இருக்கமாட்டாது என்பதனை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

### இராணுவப் புரட்சி சாத்தியமா?

இந்த நாட்டிலே இராணுவம் கூட ஓரளவுக்கு அரசியல் மயப்படுத்தப்பட்டிருக்கின்றது என்கின்ற கசப்பான உண்மையை யாரும் மறுத்துரைக்க முடியாது. இந்த நிலைமை 1950 களில் இருந்தது கிடையாது. 1962 ஆம் ஆண்டிலே ஓர் இராணுவப் புரட்சிச் சதி முறியடிக்கப்பட்டது. பின்னர் 1966 இலே இரண்டாவது முறையாக ஓர் இராணுவப் புரட்சிச் சதி முறியடிக்கப் பட்டது. அதற்குப் பிறகு படைத்தரப்பிலிருந்து - இராணுவத் தரப்பிலிருந்து இந்த நாட்டின் ஜனநாயக ஆட்சி முறைக்கு இதுவரையில், இந்த வினாடி வரையில் - எந்தவொரு சவாலும் இருந்ததில்லை. இதை நாங்கள் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். ஏனென்றால், சமீபத்தில் வெளிநாடொன்றில் இருந்து வந்த சில பிரதிநிதிகளை நாங்கள் சந்திக்க நேர்ந்தபொழுது அந்தப் பிரதிநிதிகளில் ஒருவர் எங்களைப் பார்த்து, "இந்த நாட்டிலே இராணுவப் புரட்சியொன்று ஏற்படக்கூடிய அபாயம் இருப்பதாகக் கதை அடிபடுகின்றதே. அதையிட்டு என்ன நினைக்கின்றீர்கள்?" என்று கேட்டார்.

அப்பொழுது நான், "சிங்கள மக்கள் மத்தியிலே இந்த நாட்டின் ஜனாதிபதி இப்பொழுது அபரிமிதமான அரசியல் செல்வாக்கைக் கொண்டிருக்கின்றார். அத்தோடு, இன்றைய சர்வதேச நிலைமை மற்றும் ஆசியக் கண்டத்தினுடைய நிலைமை என்பன அப்படியான ஓர் அபாயத்துக்கு எந்தவிதத்திலும் இடமளிக்கமாட்டா. அதனை நீங்கள் உறுதியாக நம்பலாம்" என்று அவருக்கும் அவருடன் கூட இருந்த பிரதிநிதிகளுக்கும் நான் சொன்னேன். அந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளுடைய குழுவைச் சேர்ந்த பொறுப்புவாய்ந்த ஒருவர் எதற்காக அந்தக் கேள்வியை எழுப்பினாரென்பது எனக்குத் தெரியவில்லை.

இப்பொழுது ஜனாதிபதித் தேர்தல் பற்றிப் பேசப்படுகின்றது. எதிரணியின் வேட்பாளராக இராணுவ ஜெனரல் ஒருவரை நிறுத்தப் போவதாகப் பேச்சுகள் அடிபடுகின்றன. சமீபத்திலே, இந்தச் சபையில் எதிர்க்கட்சியின் முக்கிய உறுப்பினரான மங்கள சமரவீர கூறுகையில், "எதிர்த்தரப்பின் வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவா அல்லது வேறு ஒருவரா என்பதை ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டு 24 மணித்தியாலத்திலே நாங்கள் வெளியிடுவோம்" - என்றார்.

இது குழப்பமான நிலைமை. பொறுப்புவாய்ந்த ஓர் எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பிலே இந்தக் கருத்தை நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். இராணுவத்துக்கும், அரசியலுக்கும் சம்பந்தம் இருக்கமுடியாது. இராணுவத்தில் கடமையாற்றிக் கொண்டிருக்கின்ற ஓர் உயர் அதிகாரியை - கூட்டுப் படைகளின் தலைமை அதிகாரியான ஜெனரல் சரத் பொன்சேகாவை - அரசியலோடு சம்பந்தப்படுத்திப் பேசுவது அல்லது ஜனாதிபதித் தேர்தலில் அவர் வேட்பாளரா இல்லையா என்பதை அறிவிப்போமென்று கூறுவது, பொறுப்புவாய்ந்த ஓர் எதிர்க்கட்சிக்கு அழகல்ல. ஜெனரல் சரத் பொன்சேகா இளைப்பாறிய பிறகு அல்லது அவர் விரும்பினால் தனது பதவியை இராஜிநாமாச் செய்துவிட்டு அரசியலுக்கு வரலாம். அப்படி எத்தனையோ பேர் வந்திருக்கிறார்கள். இராணுவத்தில் இருந்தவர்கள் பெரிய பொறுப்புகளில் இருந்திருக்கிறார்கள். ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் சேர். ஜோன் கொத்தலாவல பிரதமராகவும், கேர்ணல் சீ.ஏ.தர்மபால நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்திருக்கிறார்கள். மேஜர் மொண்டேகு ஜயவிக்கிரமவும், கப்டன் சீ.பீ.ஜே.செனவிரட்னவும் அமைச்சர்களாக இருந்திருக்கிறார்கள். அத்துடன் அவர்கள் நீண்டகாலம் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் இருந்திருக்கிறார்கள். அதில் பிரச்சினைகள் எவையும் இருக்கவில்லை.

ஆனால், பொறுப்புவாய்ந்த எங்கள் எல்லோருக்கும் ஒரு கடமை இருக்கின்றதென்று நான் நம்புகின்றேன். அதாவது, இந்த நாட்டின் ஜனநாயக அரசியல் முறைமையை, ஜனநாயக ஆட்சி முறைமையைப் பாதுகாக்கவேண்டிய கடமை இருக்கின்றது. ஆகவே, இராணுவத்தை அரசியலோடு இணைத்துப் பேசுவது ஆரோக்கியமானதல்ல. அதற்காக அவர்கள் எவரும் தேர்தலில் போட்டியிடக்கூடாது என்று நான் சொல்லவரவில்லை. ஆனால், இராணுவத்தில் பதவி வகிக்கின்ற எந்தவொரு அதிகாரியின் பெயரையும் அவர் பதவியில் இருக்கின்றபொழுது அரசியலோடு இணைத்துப் பேசுவது பொறுப்பான அரசியலல்ல என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஐக்கிய தேசியக் கட்சி டி.எஸ்.சேனாநாயக்க, டட்லி சேனாநாயக்க, ஜே.ஆர்.ஜெயவர்தனா, ரணசிங்க பிரேமதாஸ, காமினி திஸாநாயக்க போன்ற பல அரசியல் தலைவர்களைக் கடந்த காலத்திலே பெற்றிருந்த ஒரு கட்சி. இப்பொழுது ரணில் விக்கிரமசிங்க அக்கட்சியின் தலைவராக இருக்கின்றார்.

(14ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# மாவட்ட வலம் - மன்னார்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

## விஞ்ஞானம் - I


34-T-I

01. பாடசாலையின் சங்கீத பாட பயிற்சி அறையினுள் சென்ற குமார் எனும் மாணவன் வீணையின் தந்தியை அருட்டியதால் ஒலி உருவாகியது சம்பவம் தொடர்பான சரியான கூற்றுக்கள்.
    a - வீணை ஒரு நரம்புக்கருவியாகும்.
    b - உருவாகிய ஒலி குறுக்கலை இயக்கமுடையதாகும்.
    c - உருவாகிய அலையின் இயக்கத்திசையிலே மூலக்கூறுகள் அதிர்ந்தன.
    d - தந்தியின் நீளத்தைக் குறைத்தால் மீடிறன் குறையும்.
    1) a, b 2) b, c 3) c, d 4) a, c

02. ஒரு சிறுவனின் நோயின் அறிகுறிகளை வைத்திய சிட்டையில் வைத்தியர் கீழ் வருமாறு குறிப்பிட்டிருந்தார்,
    1 - காயத்தினூடாக தொடர்ந்து குருதி கசிந்தது.
    2 - குருதியில் விற்றமின் K இன் அளவு போதியளவு இருந்தது.
    3 - இவனுடைய பெற்றோர்கள் இரத்த உறவுடையவர்.
    சிறுவனுக்கு ஏற்பட்டிருக்கும் நோய்.
    1) இலுக்கேமியா. 2) குருதிச்சோகை (அனீமியா)
    3) ஈமோபிலியா. 4) துரொம்போஸிஸ்.


03. வெப்பநிலை அதிகரிக்கும்போது கரைதிறன் அதிகரிக்கும் எனும் கூற்றுக்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணம்,
    1) கரைய மூலக்கூறுகள் வேகமாக அசைதல்.
    2) கரைப்பான் மூலக்கூறுகள் எழுந்தமானமாக இயங்குதல்.
    3) கரைப்பான் மூலக்கூறுகளுக்கிடையிலான இடைவெளி அதிகரித்தல்.
    4) கரையத்தின் மீது கரைப்பான் மூலக்கூறின் மோதுகை குறைதல்.

04. தூர நேர, இடப்பெயர்ச்சி நேர வரைபுகள் கீழே உள்ளன. இவற்றின் படித்திறன்களால் பெறப்படுவது,
    1) ஆர்முடுகல், அமர்முடுகல்
    2) வேகம், கதி
    3) கதி, வேகம்.
    4) மாறாவேகம், மாறாக்கதி.




05. சூடான பாத்திரத்தில் கையை வைத்த மாணவி உடனடியாக கையை இழுத்தெடுத்தார். மேற்படி செயற்பாட்டில் பிழையானது,
    1) குறித்த செயற்பாடு நரம்புத்தொகுதியால் கட்டுப்படுத்தும் மின்னியல் முறையான நரம்பியையாக்கம்.
    2) இது ஒரு மண்டையோட்டுத் தெறிவினையாகும்.
    3) முண்ணானால் கட்டுப்படுத்தப்படும் தெறிவினையாகும்.
    4) இங்கு வாங்கியாக தோலும் விளைவு காட்டியாக கையின் வன்கூட்டுத் தசையும் தொழிற்படும்.

06. உருவில் காட்டப்பட்டுள்ளது.
    1) அயன் பிணைப்பைக்கொண்ட அமோனியா அணு ஆகும்.
    2) பங்கீட்டு வலுப்பிணைப்பு கொண்ட அமோனியா அணுவாகும்.
    3) அயன் பிணைப்புக்கொண்ட அமோனியா மூலக்கூறு.
    4) பங்கீட்டு வலுப்பிணைப்பு கொண்ட அமோனியா மூலக்கூறுகள் ஆகும்.




* இல. 7ஆம், 8ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.


07. ஒளிக்கதிரின் நடவடிக்கைகள் பற்றிய கூற்றுக்கள் மாணவர்களால் முன்வைக்கப்பட்டன.
    a - ஒளிக்கதிர் குறுக்கலை வடிவில் பயணம் செய்யும்.
    b - ஓர் ஊடகத்திலிருந்து இன்னோர் ஊடகத்தினுட் செல்லும்போது அதன் வேகத்தில் மாற்றம் ஏற்படும்.
    c - அடர்ந்த ஊடகத்திலிருந்து ஐதான ஊடகம் ஒன்றினுள் புகும்போது படு கோணம் முறிகோணத்திலும் பெரிதாக இருக்கும்.
    d - ஒளி முழுவுட்தெறிப்படைதல் மூலம் வளைவான பாதையினூடு பயணம் செய்யும்.
    மேற்கூறிய கூற்றுக்களுள் சரியானது/ சரியானவை,
    1) aயும், bயும், cயும். 2) aயும், bயும், dயும்.
    3) cயும், dயும், aயும். 4) a, b, c, d

08. ஒளி முறிவடைவதற்கு மேற்கூறிய கூற்றுக்களுள் சரியானது,
    1) a 2) b 3) c 4) d

09. பலூன் ஒன்றினுள் $1.5m^3$ ஐதரசன் வாயு 2Pa அமுக்கத்திலுள்ளது வெப்பநிலையை மாறாது பேணியவாறு அதன் கனவளவை $2m^3$ ஆக அதிகரிக்கும்போது வாயுவின் அமுக்கம் யாதாக இருக்கும்?
    1) அமுக்கம் குறையும். 2) அமுக்கம் மாறாதிருக்கும்.
    3) அமுக்கம் கூடும், 4) அமுக்கம் பற்றி கூறமுடியாது.

10. படத்தைப்பயன்படுத்தி 10ஆம், 11ஆம், 12ஆம் வினாக்களுக்கு விடை தருக. மைய நரம்புத்தொகுதியின் பகுதிகளின் ஆங்கிலக் குறியீடும் தொழில்களும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது பொருத்தமான தொடர்பு,

| பகுதி | தொழில் |
|---|---|
| A | W - விரைவான துலங்கல்களை ஆளுதல். |
| B | X - இதயம், சுவாசச் செயற்பாட்டைப் பேணுதல். |
| C | Y - புலனங்கங்களின் தொழிற்பாட்டை ஆளுதல். |
| D | Z - தசை இயக்கங்களைக் கட்டுப்படுத்தல். |




11. மனித உடலில் நீர்ச்சமனிலை பேண ADH எனும் ஓமோன் உதவுகிறது. இதனைச் சுரக்கும் சுரப்பி மேலுள்ள அமைப்பின் எவ்வெழுத்தில் அமைந்திருக்கும்,
    1) A 2) B 3) C 4) D


12. மேற்படி அமைப்பில் பறவைகளில் மிகவும் விருத்தி அடைந்திருக்கும் பகுதி/ பகுதிகள்,
    1) A, B 2) A, C 3) B 4) C, D

13. $H_2SO_{4(aq)} + 2NaOH_{(aq)} \rightarrow Na_2SO_{4(aq)} + 2H_2O_{(aq)}$ $\Delta H = -$ மேற்காட்டிய தாக்கம் பற்றிய கூற்றுக்களுள் சரியானது என்று கூறமுடியாது.
    1) இது ஒரு நடுநிலையாக்கல் தாக்கம் எனப்படும்.
    2) புறவெப்பத்தாக்கமாகும்.
    3) இரு வன்னமில வன்காரத்தாக்கமாகும்.
    4) இங்கு வன்னமிலமும் வன்காரமும் பகுதியான, முற்றான பிரிகையைக் காட்டும்.

14. பின்வரும் செயற்பாடுகளில் சூழலுக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்த செயன்முறை,
    1) நற்போசணையாக்கம். 2) பிரிந்தழிதல்.
    3) நகரமயமாக்கல். 4) கைத்தொழிற்புரட்சி.

15. கூற்று - 01: சில மூலப்பதார்த்தங்கள் எமது தோலில் பட்டு வழுவழுப்பான சவர்க்காரம் போன்ற இயல்பைக் காட்டுகின்றன.
    கூற்று - 02: எமது தோலிலுள்ள எண்ணெய்களுடன் மூலம் தாக்கமடைந்து சவர்க்காரம் உருவாகின்றது.
    1) கூற்று 01 சரி, கூற்று 02 விளக்கமாகும்.
    2) கூற்று 01 சரி, கூற்று 02 விளக்கமில்லை.
    3) கூற்று 01 பிழை, கூற்று 02 விளக்கமாகும்.
    4) கூற்று 01 பிழை, கூற்று 02 விளக்கமில்லை.


16. குதை அடியின் படம் அருகிலுள்ளது. பொருத்தமான/ ஏற்றுக்கொள்ளக்கூடிய கூற்று,
    1) இதில் மூவூசி செருகியை மட்டுமே பொருத்த முடியும்.
    2) பெரிய துவாரம் L கம்பியும் ஏனையவை நொதுமல் (N) புவிக்கம்பியுமாகும் (E)
    3) குதை அடி கங்கணச் சுற்றிலே இறைக்கப்பட்டிருக்கும்.
    4) குதை அடியில் ஏற்படும் குறுஞ்சுற்றோட்டம் தலைமை ஆளியால் கட்டுப்படுத்தப்படும்.




* இலத்திரனியல் சாதனங்கள் பற்றிய கூற்றுக்கள் மணவர்களால் முன்வைக்கப்பட்டு உள்ளன.
    A - தூய குறைகடத்திகள் மின்னை அதிகளவு கடத்தாது.
    B - குறைகடத்திகளைக் கலப்பதால் மாசுக்குறை கடத்திகள் உருவாக்கப்படும்.
    C - மாசுள்ள குறைகடத்திகள் P வகை, n வகை என வகைப்படும்.
    D - P ஐயும் n ஐயும் கலப்பதால் Pn சந்தி உருவாகும்.
    E - P+n கலப்பதால் உருவாகும் சந்தி ஏற்றமில்லாத வறிதாக்கல் பிரதேசமாகும்.

17. P வகை, n வகை குறைகடத்திகள் பெற கலக்கவேண்டிய ஆவர்த்தனக் கூட்டங்கள்,
    1) (V, IV) 2) (III, IV) 3) (V, IV) (III IV) 4) (III, IV) (V, IV)

18. பின்முகக் கோடலில் வறிதாக்கல் பிரதேசம் பற்றி சரியானது,
    1) பிரதேசம் பருமனில் அதிகரிக்கும்.
    2) பிரதேசம் பருமனில் குறையும்.
    3) பிரதேசம் மாறாது.
    4) பிரதேசம் பற்றிக் கூறமுடியாது.





19. ஒரு அங்கி பற்றிய தகவல்களை மாணவனொருவன் சேகரித்து வைத்திருந்தான்.
    A - பளிங்குருவாக்கக்கூடிய ஆக்ககூடியது.
    B - சுயாதீனமாக இனம் பெருகும் ஆற்றல் அற்றது.
    C - சுவாசிக்க மாட்டாது.
    மேற்கூறப்பட்ட இயல்புடைய அங்கி,
    1) பக்றீரியா. 2) பிளாஸ்மோடியம்.
    3) வைரஸ். 4) பங்கஸ்.

20. தும்புமாங்காயின் தாவரவியற் பெயராக அமையக்கூடியது,
    1) Mangifera Zeylanica 2) MANGIFERA ZEYLANICA
    3) Mangifera ZEYLANICA 4) Mangifera zey!anica

21. விண்வெளிகளும் கண்டுபிடிப்புகளினதும் இணைப்பில் பிழையெனக் கருதப்படுவது,
    1) சுவான், ஷெல்டன் → கலக்கொள்கை.
    2) கரோலஸ் லீனியஸ் → இருசொற் பெயரீடு.
    3) வில்லியம் ஹார்வே → குருதி இனங்கள்.
    4) சாள்ஸ் டார்வின் → கூர்ப்புக் கொள்கை.

22. தர்க்கம் செய்யப்பட்ட கூற்றுக்களில் பொருத்தமானது,
    1) வானொளியில் வெளிவரும் பாட்டு ஒலி ஒரு மின்காந்த அலை எனினும் அதனைக் காவி வரும் வானொலி அலை பொறிமுறை அலை.
    2) சுனாமி அலை ஒரு குறுக்கலை எனினும் அது ஆழத்தில் வேகம் குறைவாகவும் கரையில் வேகம் உயர்வாகவும் காணப்படும்.
    3) மின்காந்த அலைகளெல்லாம் குறுக்கலை எனினும் குறுக்கலை எல்லாம் மின்காந்த அலையல்ல.
    4) பொறிமுறை அலைகளில் குறுக்கலை, நீள்பக்க அலைகள் காணப்பட்ட போதிலும் அவை கடத்தப்படுவதற்கு ஊடகம் தேவையில்லை.

23.




அலை நீளத்தைக் குறிக்கும் ஆங்கில எழுத்துக்கள்
    1) aயும் xஉம். 2) xஉம், yஉம். 3) aயும் bயும். 4) bயும் yஉம்.

மறுபக்கம் பார்க்க....

இன்றைய விஞ்ஞான பாட மாவட்டவல செயற்றிட்டத்திற்கு அனுசரணை வழங்குவது
NSP®
ஸ்ரீ லங்கா
அப்பியாசக் கொப்பிகள்
எழுத்துக்களுக்கு மேலும் அழகு சேர்க்கும்
உங்கள் தோழன்
★ இறக்குமதி செய்யப்பட்ட உறுதியான தரமான வெள்ளை கடதாசி
★ ஒவ்வொரு பக்கமும் புதியது போன்ற உணர்வு
★ இருபக்கத்திலும் எவ்வித தடையும் இல்லாமல் அழகாக எழுதக் கூடிய தடிப்பம்
★ எழுதத்தூண்டுவதுடன் உங்கள் சிந்தனை வேகத்தையும் தூண்டும்
இன்றே NSP கொப்பிகளை வாங்கி ஏனைய அப்பியாசக் கொப்பிகளுடன் ஒப்பிட்டு பாருங்கள்
NSP இன் சிறப்பை நீங்களாகவே உணர்வீர்கள்
N0 5, Sangamitta Mawatha, Colombo 13, Sri Lanka. Tell: 94-11-2 323 581, Fax: 94-11-2 342 911

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஞ்ஞானம் I இன் தொடர்ச்சி.....

24. செங்கோண அரியமொன்றில் ஒளிக்கதிர் நடத்தை படம் மூலம் காட்டப்பட்டு உள்ளது. பிழையான கூற்று,
   1) ஒளிக்கதிர் 90°இனால் திரும்பலடைந்துள்ளது.
   2) படுகோணமும் தெறிகோணமும் அவதிக்கோணத்திற்கு சமன்.
   3). இது அரியத்தில் நடைபெறும் முறிவுச் செயற்பாடாகும்.
   4) ஒளிக்கதிர் 180°இனூடாக திரும்பலடைந்துள்ளது.


25. தலைமேல் ஏறியியல் (OHP)உண்டாகும் விம்பத்தின் இயல்பும் பொருளின் அமைவிடமும் பற்றிச் சரியானது,

| பொருள் | விம்பம் |
|---|---|
| 1) Fஇல் | தலைகீழானது உருப்பெருத்தது. |
| 2) Fஇற்கும் 2Fஇற்குமிடையில் | தலைகீழானது ஊருப்பெருத்தது. |
| 3) 2Fஇற்கு அப்பால் | நிமிர்ந்தது உருப்பெருத்தது. |
| 4) 2Fஇல் | நிமிர்ந்தது உருச்சிறுத்தது. |

26. நுகரப்படும் மின் கிலோவாற்று மணி என்பதால் தரப்படும் கிலோவாற்று மணி என்பதன் சரியான வடிவம்,
   1) IKWH   2) IkwH   3) IkWh   4) IKwh


27. பயன்படுத்தும் மின் அலகினைக் குறைப்பதற்கு மாணவர்களால் முன்வைக்கப் பட்ட கருத்துக்கள் கீழே உள்ளன. இவற்றுள் ஏற்றுக்கொள்ள முடியாதது,
   1) மின்னழுத்தியால் ஒரே தடவையில் அதிக ஆடைகளை அழுத்துதல்.
   2) மின்விசிறியை வேகமாக சுழலச்செய்தல்.
   3) மின்விசிறியை மெதுவாக சுழலச் செய்தல்.
   4) இழை மின்குமிழ்களுக்குப் பதிலாக CFL ஐப் பயன்படுத்தல்.

28. இரும்பால் செய்யப்பட்ட கரண்டி மீது வெள்ளி உலோகத்தை மின்முலாமிடப்பட வேண்டியுள்ளது. மின்முலாமிடல் பற்றிய பின்வரும் கூற்றுக்களை அவதானிக்குக.





   A - F வெள்ளித்தகடாக இருக்கும்.
   B - Z கரண்டியாகும்.
   C - X - $AgNO_3$
   D - Y - கதோட்டு, Z - அனோட் சரியான கூற்று,
   1) A, B   2) C, D
   3) B, C   4) A, D

29. மேற்படி மின்பகுப்பில் நடைபெறும் தாக்கம் என்று கூறமுடியாதது,
   1) $Ag_{(s)} \rightarrow Ag^{+}_{(aq)} + e$
   2) $AgNO_{3(s)} \rightarrow Ag^{+}_{(aq)} + NO^{-}_{3(aq)}$
   3) $Fe_{(aq)} \rightarrow Fe^{3+} + 3e$
   4) $Ag^{+}_{(aq)}\ e \rightarrow Ag_{(s)}$


30.


காட்சிப்படுத்தப்பட்டுள்ள இலத்திரனியல் உபகரணங்களின் குறியீடுகளில் சரியானது,




31. வாயுக்களின் நடத்தை பற்றிய செயற்பாட்டினை ஆராய்ந்த போயில் எனும் விஞ்ஞானியால் முன்வைக்கப்பட்ட வரைபுகள் கீழே உள்ளன. மிகப் X,Y அச்சுக்களின் தரவுகளுக்கு பொருத்தமான வரைபு,

| X அச்சு | Y அச்சு |
|---|---|
| 1. P | V |
| 2. P | I/V |
| 3. PV | P |
| 4. PV | V |




   1) 1 - A, 2 - B, 3 - C, 4 - D   2) 1 - A, 2 - C, 3 - B, 4 - D
   3) 1 - B, 2 - C, 3 - A, 4 - D   4) 1 - B, 2 - A, 3 - C, 4 - D

32. சாள்ஸின் விதி பின்வருமாறு சுருக்கமாக காட்டப்படுகிறது.
   V x T [m] [P] இங்குள்ள
   V, T, M, P என்பவற்றினை அளக்கும் சர்வதேச (SI) அலகுகளைச் சரியாகக் காட்டுவது,
   1) $m^3$, c°, g, Pa   V - கனவளவு
   2) $m^3$, K, kg $Nm^{-2}$   T - தனிவெப்பநிலை
   3) $m^3$ F mg $Nm^{-2}$   M - திணிவு
   4) m3 K mg Pa   P - அமுக்கம் எனக்கொள்க.

33. 90g $C_6H_{12}O_6$ 500ml நீரில் கரைத்துப் பெறப்பட்ட கரைசலின் செறிவு என்று கூறக் கூடியது, C = 12, H = 1, O = 16
   1) $lmoldm^{-3}$   2) 1/2 $moldm^{-3}$
   3) 0.25 $moldm^{-3}$   4) 0.9 $moldm^{-3}$

* கீழே காட்டப்பட்டுள்ள இரசாயனத்தாக்கங்களை அவதானித்து வினாக் களுக்கு விடை தருக.
   1 - $CaO + H_2O \rightarrow Ca(OH)_2$
   2 - $2NaOH + CO_2 \rightarrow Na_2CO_3 + H_2O$
   3 - $4Fe + 3H_2O + 3O_2 \rightarrow 2Fe_2O_3 + H_2O$
   4 - $H_2SO_4 + 2KOH \rightarrow K_2SO_4 + 2H_2O$

34. துரு உண்டாகும் தாக்கம் என்று கூறக்கூடியது,
   1) 1   2) 2   3) 3   4) 4

35. ஒளித்தொகுப்புக் காரணிகளில் ஒன்றை உறிஞ்சிக்கொள்ள நடைபெறும் தாக்கம்,
   1) 1   2) 2   3) 3   4) 4

36. நீறிய சுண்ணாம்பு பெற நடைபெறும் தாக்கம்,
   1) 1   2) 2   3) 3   4) 4

37. ஆய்வுகூடத்தில் அருகருகேயுள்ள இரு கண்ணாடிப் போத்தல்களின் மூடியை திறந்தபோது போத்தல்களின் வாய்ப்பகுதியில் செறிந்த வெண்ணிறப்புகை உண்டாகியது. மாணவர் கருத்துகளில் பிழையானது,
   1) $NH_4Cl$ எனும் பொருள் உருவாகியுள்ளது.
   2) ஒரு போத்தலில் அமோனியாவும் மற்றையதில் ஐதரோ குளோரிக்கமிலமும்.
   3) நடைபெற்ற தாக்கம் $NH_3 + HCl \rightarrow NH_4Cl$
   4) ஆய்வுகூடப் போத்தல்களைத் திறந்தால் புகைவரும்.

38. கீழ்வருவனவற்றுள் கனியம் என்று கூறமுடியாதது,
   1) அப்பறைற்று.   2) கருங்கல்.   3) காரீயம்.   4) படிகம்.

39. $N_2$ வாயுவை மின்குமிழில் அடைப்பதற்கு மிகப் பொருத்தமான காரணம்?
   1) வளிமண்டலத்தில் 78% அளவில் காணப்படல்.
   2) இதன் உறைநிலை - 237.6°C
   3) இரு நைதரசன் அணுக்களிடையே வலிமையான மும்மைப் பிணைப்பு உண்டு.
   4) தகனத் துணையிலி ஆகும்.


40. மண்சரிவைக் குறைக்க எடுக்கும் நடவடிக்கையில் தவறான முடிவு,
   1) மரங்கள் வெட்டுவதைத் தடைத் செய்தல்.
   2) பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையை நிறுத்தல்.
   3) படிவெட்டி பயிர்ச்செய்கையில் ஈடுபடல்.
   4) நீரோடும் வாய்க்கால்களை வெட்டுதல்.

## விஞ்ஞானம் - II

34-T-II


### பகுதி A - அமைப்புக் கட்டுரை வினாக்கள்

01. வீதி விபத்துக்கள் பெருமளவில் நடைபெறுகின்றமைக்கு காரணம் வாகனச் சாரதி களினதும் பாதசாரிகளினதும் கவலையினமேயாகும்.





மேலே காட்டப்பட்ட உருவானது சீரான கதி 40m/sஇல் சென்றுகொண்டிருந்த கார் எதிரே வந்த பாதசாரியைக் கண்டவுடன் $20ms^{-2}$ அமர்முடுகலுடன் இயங்க ஆரம்பிக்கும் நிலையைக் காட்டுகிறது.

1) a. இதன்போது சடுதியாக தடுப்பைப் பிரயோகித்து செயற்பட்டமை தெறி வினையாகும். இதன்போது தூண்டல் - துலங்கல் வாங்கி, விளைவுகாட்டி ஆகியவற்றை எழுதுக.
   தூண்டல் ..........
   துலங்கல் ..........
   வாங்கி ..........
   விளைவுகாட்டி..........
   b. மேற்படி தெறிவினை அடங்கும் வகையை எழுதுக.
   ..........
   c. தெறிவினையின்போது கணத்தாக்கப் பாதையை எழுதுக.
   ..........
   d. தெறிவினையின் அனுகூலமொன்றைக் குறிப்பிடுக.
   ..........
   e. தெறிவினைகளின் செயற்பாடு குறைவடைவதற்கான இரு காரணங்களை எழுதுக.
   ..........
2) a. மேற்படி காரின் இயக்கத்திற்குரிய வேக-நேர வரைக.



   b. மேலே நீர் குறிப்பிட்ட வரைபின் உதவியுடன் கார் நிறுத்தப்படும்போது பாதசாரிக்கும் காரிற்குமுள்ள தூரத்தைக்காண்க.
   ..........
   c. காரின் திணிவு 400kg எனக்கொண்டு தடுப்புவிசையின் பருமனைக் காண்க.
   ..........
3) a. காரின் எரிபொருளாக ஒக்ரேன் ($C_8H_{18}$) பயன்படுத்தப்பட்டிருப்பின் அதன் பூரண தகனத்திற்குரிய இரசாயனச் சமன்பாட்டை எழுதுக.
   ..........
   b. மேற்படி தகன விளைபொருட்கள் வளிமண்டலத்தில் அதிகரிப்பதால் ஏற் படும் பிரதான பாதிப்புக்கள் 2 ஐக் குறிப்பிடுக.
   ..........
   c. குறிப்பிடப்படும் பாதிப்புக்களை இழிவாக்குவதற்கான நடவடிக்கைகள் 2 தருக.
   ..........

02. மனித சுற்றோட்டத்தொகுதியின் மாதிரிக்கட்டமைப்பு அருகில் தரப்பட்டுள்ளது.
1) a. தரப்பட்டுள்ள சுற்றமைப்பில் பின்வரும் எழுத்துக்கள் குறிக்கும் அங்கங்களை எழுதுக.
   M - ..........
   N - ..........
   K - ..........
   b. இரட்டைக்குருதிச் சுற்றோட்டம் என்றால் என்ன? ..........
   c. முற்றான இரட்டைக்குருதிச் சுற்றோட்டம் கொண்ட இரு விலங்கு வகுப்புக்களைக் குறிப்பிடுக.
   ..........
   d. தொகுதிச் சுற்றோட்டம் ஆரம்பிக்கும், முடிவுறும் இதய அறைகளைப் பெயரிடுக.
   ..........
   e. சுற்றோட்டத்தொகுதியின் வினைத்திறனான செயற்பாட்டிற்காகக் காணப்படும் இரு இயல்புகளை எழுதுக.
   ..........
   f. இதய நோயிலிருந்து பாதுகாப்பைப்பெறும் இரு நடவடிக்கைகளைத் தருக.
   ..........




வளரும்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்தசங்கரி கருணாநிதிக்கு கடிதம்

**தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதிக்கு கடந்த வாரம் அனுப்பிய கடிதம் இங்கே முழுமையாகப் பிரசுரிக்கப்படுகிறது. இதன் ஒரு பகுதி நேற்றைய உதயனில் செய்தியாக வெளியானது.**

பேரறிஞர் அண்ணாவென வாஞ்சையோடு அழைக்கப்பட்டும், தங்களையும் தன் அமைச்சரவையில் இணைத்துக் கொண்டும், தங்களுக்கு முன் முதலமைச்சர் பதவி வகித்த பெரும் மதிப்புக்குரிய சீ.என்.அண்ணாத்துரையின் காலம்தொட்டு எமது பிரச்சினையில் தாங்கள் கொண்டிருக்கும் பெரும் அக்கறை பற்றி நான் நன்கறிவேன். எமது பிரச்சினைக்கு எப்போது தீர்வு கிட்டுமென முழு உலகும் ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கிறது. ஐயா! துரதிஷ்டவசமாகத் தீர்வுக்காக ஏற்பட்ட பல வாய்ப்புகளை நாம் இழந்து நிற்கின்றோம். சில ஆண்டுகளுக்கு முன் தங்களின் நன்மதிப்பைப் பிரயோகித்து இலங்கை அரசுக்குப் பிரச்சினையைத் தீர்க்க உதவவேண்டுமென்று வேண்டியிருந்தேன். அத்தகைய கடிதங்களின் பிரதியொன்றையும் இத்துடன் இணைத்துள்ளேன். இனப்பிரச்சினைத் தீர்வு இந்திய அரசியல் சாசனத்தின் முன் மாதிரியாகக் கொண்டு தீர்வு காணப்படவேண்டுமென்று நான் ஆலோசனை வழங்கியிருந்தேன். சிறிதும் எதிர்பாராத இடங்களில் இருந்தும் கூட அந்த ஆலோசனைக்கு மிகப் பெரும் வரவேற்பு இருந்தது. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தையொத்த அதிகாரப்பகிர்வை இலங்கையின் மாகாண சபைகளுக்கு வழங்கினால் சிறுபான்மை மக்களின் அபிலாஷைகள் நிறைவேறுவதோடு இலங்கைவாழ் மக்களின் பெரும்பாலானோருக்கும் ஏற்புடையதாகவும் இருக்கும். மேலும் தமிழ்நாட்டில் வாழும் தமிழ் மக்களை அமைதிப்படுத்துவதோடு அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட பிரச்சினைக்குத் தீர்வு காண உதவிய பெருமையும் தமிழகத்திற்குச் சேரும். அண்மையில் இலங்கைக்கு விஜயம்செய்த இந்திய நாடாளுமன்றக் குழுவினர் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்தபோது விரைவில் இலங்கையிலிருந்து ஓர் உயர்மட்டக் குழு புதுடில்லிக்கு வர இருப்பதாகவும் அவர்களுடன் முக்கிய இரு பிரச்சினைகளான அரசியல் தீர்வு, இடம்பெயர்ந்தோரின் மீள் குடியேற்றம் போன்றவை பற்றிப் பேசும் சந்தர்ப்பம் உண்டெனக் குறிப்பிட்டதாகவும் அறிகின்றேன். இந்த விடயமே இக் கடிதத்தை எழுத என்னைத் தூண்டியது.

50 ஆண்டுகளுக்கு மேல் நான் அரசியலில் ஈடுபட்டிருக்கின்றேன் என்பது பற்றியும் இனப்பிரச்சினை ஆரம்பிப்பதற்கு முதற் காரணமாக இருந்த 1949ஆம் ஆண்டின் பிரஜாவுரிமைச் சட்டம், 1956ஆம் ஆண்டின் தனிச்சிங்களச் சட்டம் ஆகியன நிறைவேற்றப்பட்டு நிலைமை மேலும் மோசமடையக் காரணமாக இருந்த காலகட்டத்தில் நான் வாழ்ந்தவன் என்பதால் இவை பற்றி நன்கறிந்தவன் என்பதையும் தாங்கள் அறிவீர்கள் என நினைக்கிறேன்.

நிரந்தரத் தீர்வு காண்பதற்கு மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளும் கடும்போக்காளர்களின் செயற்பாட்டால் குழப்பத்திற்குள்ளாகி நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து இந்த ஆண்டின் முற்பகுதியில் உச்சக்கட்டத்தை அடைந்தது.

2009 மே 18ஆம் திகதி விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதோடு மறுநாள் அதன் தலைவர் இறந்ததுடன் அத்தனையும் திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தது. மொத்த விளைவு இலங்கையின் 25 மாவட்டங்களில் தமிழ் பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட 08 மாவட்டங்கள் அழிந்தன. கடந்த கால் நூற்றாண்டு காலமாக சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் பல்வேறு சமூகத்தினரும் எதுவித வேறுபாடின்றி பல்வேறு கஷ்ரங்களை அனுபவித்தனர்.

கோடிக்கணக்கான பெறுமதியான பொதுச் சொத்துகளும் அரச சொத்துகளும் அழிக்கப்பட்டன. ஏனைய சமூகத்தினரோடு ஒப்பிடுகையில் முஸ்லிம், தமிழ் மக்களின் உயிரிழப்புக்களும் சொத்தழிவுகளும் மிகக் கூடுதலானவை எனக் கூறலாம். கிழக்கு மாகாணத்தில் 45ஆயிரம் பேரும் வட மாகாணத்தில் அதேபோன்ற தொகையினரும் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். அத்தோடு அரச தரப்பு இராணுவத்தினரின் மனைவியரும் பெருமளவில் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். அநாதையாக்கப்பட்டோரின் எண்ணிக்கையும் குறைந்ததல்ல. இன்றும் கூட முகாம்களில் உள்ள ஆயிரத்து நூறுக்கு மேற்பட்ட அநாதைகளைப் பொறுப்பேற்க ஒரு சில உறவினர்களைத் தவிர வேறு யாரும் முன்வரவில்லை.

பல்லாயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும் இறந்துள்ளனர். அநேகர் தம் கால்கள், கைகளையும், கண் பார்வையையும், கேட்கும் சக்தியையும், தம் நெருங்கிய அன்பு உள்ளங்களையும் இழந்துள்ளனர். நம்பிக்கையானதொரு தகவலின்படி முகாம்களில் பத்துக்கு ஒருவர் அங்கவீனர்களாக உள்ளனர்.

ஆயிரக்கணக்கான வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. மீன்பிடி, விவசாயம், பல்வேறு தொழில்கள் பெருமளவில் குறைக்கப்பட்டு அல்லது முற்றாக நிறுத்தப்பட்டும் உள்ளன. பல்வேறு கட்டுப்பாடுகளின் மத்தியிலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மக்கள் முற்றுமுழுதாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் இருந்தபோதும் யாரும் பட்டினி கிடக்கவில்லை. எந்தவித பாகுபாடின்றி அரசு அப்பிரதேசத்திற்கு உணவு அனுப்பியது. மக்களும் தம் சொந்த முயற்சியால் கஷ்ரமின்றி வாழ்ந்தனர். அநேகர் லொறி, டிராக்டர், கார் வைத்திருந்தனர். பல்லாயிரக்கணக்கானோர் மோட்டார் சைக்கிள்களையும் சொந்தமாக வைத்திருந்தனர். கணிசமான தொகையினர் பாற்பண்ணை, கோழிப்பண்ணை நடத்தினர். பெருமளவில் விவசாயமும் மேற்கொண்டனர். இன்று இவைகள் அனைத்தும் அற்றுப்போயின.

இடம்பெயர்ந்த மக்கள் இடத்துக்கு இடம் மாறி இறுதியில் உடைமைகள், அத்தனையையும் இழந்தனர். சிலர் தமது மனைவியர், பெற்றோர், மக்கள் ஆகியோரை இழந்து அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் வந்ததும், அரசால் முகாம்களுக்கு கொண்டு வரப்பட்டவேளை அவர்கள் எதுவுமற்றவர்களாகவும், உடுத்த உடையுடனும் வந்து சேர்ந்துள்ளனர். இரு மாதங்களுக்குள், அவர்கள் மிக மோசமான சூழ்நிலையில் வாழ்ந்ததன் பயன், அத்தனை பேரும் பரம ஏழைகளாக்கப்பட்டுள்ளனர்.

இப்போது அவர்கள் கடந்த சில மாதங்களாகப் பட்ட துன்பங்களைக் கூட கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் அனைவரும் பலாத்காரமாக எதுவித தேவையுமின்றித் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகளின் தீவிர உறுப்பினர்கள் ஏறக்குறைய அனைவரும் முகாம்களில் இருந்து தப்பிச் சென்றுவிட்டனர். ஒரு லட்சத்து 50 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு அவர்களின் பிள்ளைகள் 10ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் புலிகளின் சிறுவர் போராளிகளாக முத்திரை குத்தப்பட்டு பெற்றோர்களிடமிருந்து பலாத்காரமாகப் பிரிக்கப்பட்டு பல்வேறு பயிற்சிகளுக்காகப் புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

ஆனால் அவர்கள் இன்று பாடசாலைகளில் கல்வி போதிக்கப்படவேண்டியவர்கள். அவர்கள் கல்வியில் மிகவும் திறமைசாலிகளாக முன்னேறக் கூடியவர்கள். அப்பாவிகள் துன்புறுத்தல்களுக்கு ஆளாகின்ற வேளையில் உண்மையான குற்றவாளிகள் தப்பியோடிவிட்டனர். வயதில் முதிர்ந்தோர், கர்ப்பிணித் தாய்மார்கள், பிள்ளைகள், காயமுற்றோர் [illegible] மாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றமை எந்தச் சந்தர்ப்பத்திலும் நியாயப்படுத்த முடியாததொன்று. அரசு தற்போது முகாம்களில் உள்ளவர்களைப் பகுதி பகுதியாக மீளக்குடியமர்த்துவதற்காக விடுவித்து வருகின்றது. அவர்களுக்கு ஆறுமாத காலத்திற்கு போதுமான உலர் உணவுகளும், விவசாயக் கருவிகள் சிலவும், சொற்ப உதவி பணத்தொகையும் மட்டும் வழங்குவது போதுமானதல்ல.

சகல இடம்பெயர்ந்தோருக்கும் அவர்களுடைய இழப்புக்களுக்கு ஏற்ப நஷ்டஈடு வழங்கப்படவேண்டும். தங்களின் பங்களிப்புடனேயே இவர்கள் நஷ்டஈடு பெறுகின்றமை சாத்தியமாகும்.

நாடும் நாட்டு மக்களும் அதிகளவில் கஷ்ரங்களுக்கு உள்ளாகி பலவற்றை இழந்துள்ளமையால் இந்த நாட்டிலோ அல்லது வேறு எங்கேயோ யார் இருந்தாலும் இவ்வாறு மீண்டும் ஏற்படுவதை விரும்பமாட்டார்கள். இத்தகைய சம்பவங்கள் மீண்டும் ஏற்படக் கூடாது, ஏற்படவிடவும் கூடாது. ஒற்றையாட்சியின் கீழ் எத்தகைய தீர்வு வழங்கப்பட்டாலும் கடும் போக்காளர்கள் எதிர்காலத்தில் அநாவசியமாக இதில் தலையிடும் வாய்ப்பைக் கொடுக்கும்.


ஆகவேதான் இந்திய முறையிலான ஒரு தீர்வை முன்வைக்குமாறு நான் வற்புறுத்தி வருகின்றேன். இந்தியர்கள் வேற்றுமையில் ஒற்றுமை காணும் சிறந்ததொரு கோட்பாட்டுக்கு அமைய அவர்களின் அரசமைப்பை உருவாக்கியுள்ளமையால் அந்த மாதிரியான அமைப்புமுறை ஒற்றையாட்சி, சமஷ்டி ஆகிய வார்த்தைகளை விரும்பாதவர்களுக்கு ஏற்புடையதாக இருக்கும்.

ஆகவே ஐயா, சகல அரசியல் வேறுபாடுகளையும், வேற்றுமைகளையும் மறந்து தமிழ் நாட்டவர் அனைவரையும் ஒன்றிணைத்து அரசியல் தீர்வு காண்பதில் தங்களின் பங்களிப்பு இன்றியமையாததாகும். எங்களைப் பொறுத்தவரையில் சிறுபான்மைக் கட்சிகளைச் சேர்ந்த நாம் ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் ஒன்றுபட்ட இலங்கைக்குள் சிறுபான்மை இனங்களின் உரிமைகளைப் பாதுகாக்க திடசங்கற்பம் பூண்டுள்ளோம்.


எனது வேண்டுகோளைத் தாங்கள் ஏற்று இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மத்திய அரசை இலங்கை சிறுபான்மை மக்களுக்கு ஏற்புடையதாகவுள்ள எனது ஆலோசனையை ஏற்றுக்கொள்ள வைக்கவேண்டுமென மிக விநயமாகக் கேட்டுக்கொள்கிறேன். தங்களைச் சந்தித்து இது சம்பந்தமாக மேலும் சில கருத்துக்களைத் தெரிவிக்கும் வாய்ப்பை விரைவில் ஏற்படுத்தித் தருவீர்கள் எனக் கேட்டுக்கொள்கிறேன். ✱

---

## உள்ளத்தை உருக வைக்கும்
## பத்தொன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் மலர்தல்
15.04.1904



விண்ணில் உறைதல்
30.10.1990

### அமரர் வேலாயுதர் சிதம்பரப்பிள்ளை
### திதி: அபரபக்க பிரதமை (03.11.2009)

*அப்பாவே! எங்கள் அழகுமிக்க ஓவியமே!*
*ஆண்டுகள் பல சென்றாலும் ஆறுமா எம் துயரம்?*
*கோயில் சுனைசூழக் கோலமிடும் ஊரினிலே*
*குன்றா இளமையுடன் குலவிளக்காய்த் திகழ்ந்தீரே*

*உழைப்பால் உயர்ந்தீரே உத்தமரே எங்கள் அப்பா*
*உன்னதமாய் வாழ்ந்திடவே உகந்த வழி காட்டினீரே*
*அறிவாற்றல் மிக்கவராய் அவனியிலே வாழ்ந்திடவே*
*அல்லும் பகலும் அயராது சேவை செய்தீர்*

*வாழ்ந்து சென்ற ஊரின் வனப்பும் அழிந்ததுவே*
*வாழ்விடங்களெல்லாம் வனமாக மாறியதே*
*இயற்கை அன்னை மாறியதால் இயல்பு வளம் குன்றியதோ*
*ஈடில்லா உங்கள் அன்பை எண்ணியெண்ணித் தவிக்கின்றோம்*

*பாரினிலே உங்களைப் போல் பண்புடையோர் இல்லையப்பா*
*பாசச்சுமையோடு பரன்பாதம் பற்றியதேன்?*
*உள்ளம் எனும் கோயிலிலே உவந்து நடமாடுகிறீர்*
*உலகமெனும் மாயையிலே உங்களை நாம் காண்போமா?*

என்றும் உங்கள் நினைவில் வாழும்
குடும்பத்தினர்.

குடியிருப்பு,
மந்துவில் வடக்கு, கொடிகாமம். (90334)

---


## அலுவலக உத்தியோகத்தர் உடன் தேவை

கம்பியூட்டர் ரைப்பிங், INTERNET, E.MAIL, SCANNING, GRAPHIC DESIGNING என்பவற்றில் நன்கு பரீட்சயமான அத்துடன் ஆங்கிலத்தில் உரையாடக்கூடிய உத்தியோகத்தர் தேவை.

திறமைக்கேற்ப ஊதியம் வழங்கப்படும். நாளை (04.11.2009) புதன்கிழமை காலை 9.00மணிக்கும் பி.ப 4.00மணிக்குமிடையில் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

தொடர்பு: 0774528818
148, கோயில் வீதி, (யுனிசெவ் முன்பாக), யாழ்ப்பாணம். (அ/56062)


---

## மரண அறிவித்தல்
### சிங்கராஜா செல்வரூபன்



பலாலியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வதிவிடமாகவும் இங்கிலாந்தில் வசித்தவருமான சிங்கராஜா செல்வரூபன் 20.10.2009 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சிங்கராஜா-யோகேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் சிவரூபன் (இங்கிலாந்து), காலஞ்சென்ற சசிரேகா ஆகியோரின் சகோதரரும் கஜிதாவின் மைத்துனரும் நவினாவின் பெரியதந்தையும் Rachaeld அன்புக் கணவரும் Lennon, Liam ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.11.2009) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு Claborough, Retford, Notts என்னும் இடத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்நிதி வீதி,
பத்தமேனி, அச்சுவேலி. (90516)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப்பெற்று பாடசாலைச் சமூகத்திற்குப் பெருமை தேடிய மாணவச் செல்வங்கள்

அண்மையில் வெளியாகிய புலமைப் பரிசில் பரீட்சையில் அந்தந்தப் பாடசாலை மட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று பாடசாலைச் சமூகத்திற்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் தமது சொந்த ஊருக்கும் பெருமை தேடிக்கொடுத்த மாணவச் செல்வங்களின் கருத்துக்களைத் தொகுத்து 'உதயன்' வாசகர்களுக்காகத் தருகின்றோம். தொடர்ந்து படியுங்கள்.



## கணேசமூர்த்தி சிவகலை
### கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தியாலயம்
### புள்ளிகள் - 172

எனது அப்பாவின் பெயர் கணேசமூர்த்தி. பூசகராகப் பணிபுரிகிறார். அம்மா சசிகலா ஆயுள்வேத வைத்தியர். எனக்கு ஒரு தம்பி மட்டுமே உள்ளார். அவர் தரம் 2இல் இப்பாடசாலையிலேயே கல்வி கற்கிறார்.

நான் புலமைப் பரிசில் பரீட்சையில் அதிக புள்ளிகளை எடுக்க வேண்டும் என்று தினமும் மூத்த விநாயகரைப் பிரார்த்திப்பேன். நான் தினமும் அதிகாலையில் எழுந்து படிப்பது எனது வழமை. மனஉறுதியோடும் நம்பிக்கையுடனும் கற்றேன். ஓய்வாக இருக்கும் வேளையில் பத்திரிகைகள் அறிவியல் கதைப்புத்தகங்கள் வாசிப்பேன். தேவையானவற்றை குறிப்பெடுத்துக் கொள்வேன். மாலையில் தனியார் கல்வி நிலையத்திற்கும் செல்வேன்.

என்னுடைய அம்மா, அப்பா இருவரும் எனது கல்வியில் மிகுந்த அக்கறையுடையவர்கள். அப்பா எந்த வித சிரமமும் பாராது தேவையான சகல உதவிகளையும் செய்வார். அம்மா கால நேரம் பாராது கற்பதற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து பல அறிவுரைகளும் கூறுவார்.

இப்பாடசாலையில் காலடிவைத்த போது திருமதி வசந்தா ஆசிரியை அன்போடு அரவணைத்து தாயைப் போல பக்கத்திலிருந்து கல்வி புகட்டுவார். எமது அதிபர் ரவீந்திரன் மிகவும் அன்பானவர். அவர் காலைக் கூட்டங்களிலும் வகுப்பிலும் கல்வியும் ஒழுக்கமும் எவ்வளவு அவசியம் என்பது பற்றி மீண்டும் மீண்டும் அறிவுரை சொல்வார். எமக்கு விசேட வகுப் புக்கள் வைத்து நல்ல அறிவுரை கூறுவதோடு, எந்நேரமும் உங்களுக்குத் தெரியாத விடயங் களை வந்து கேட்டுப் படிக்கும்படி சொல்லி ஊற்சாகப்படுத்தி தன்னம்பிக்கையை வளர்த்தார்.

எமது வகுப்பாசிரியர் திருமதி சாமினி தரம் 3இலிருந்து கல்வி கற்பிக்கிறார். விசேட வகுப்புகள் நேரகாலம் பாராது வைப்பார். பல போட்டிகள் நடத்தி பரிசில்கள் தந்து ஊக்கு விப்பார். அன்பான முறையில் கண்டித்து அறிவுரை கூறுவார். அத்தோடு அவரது கணவர் சுதர் சன் ஓர் ஆசிரியர். அவரும் பல நாள்கள் எமக்கு விசேட வகுப்புகள் எடுத்து ஊக்கமளித்தார். அத்தோடு ஏனைய ஆசிரியர்களான திருமதி கு.பாமினி, திருமதி உதயா, செல்வி சர்மினி, செல்வி சுதர்சனா, செல்வி த.தர்சினி ஆகியோரும் பல பயிற்சிகளும் செய்து அறிவுரை கூறி ஊக்கப்படுத்தினர்.

எனது கடின முயற்சியும், அதிபரின் நல்ல ஆலோசனையும், ஆசிரியர்களின் அரவணைப்பும், பெற்றோரின் அர்ப்பணிப்பும், உறவினரின் ஆதரவும் தான், நான் பாடசாலை மட்டத்தில் மட்டுமல்ல வடமராட்சி வலயத்திலேயே அதிகூடிய புள்ளியாக 172ஐ எடுக்க உதவியது. நான் எனது அப்பா அம்மாவின் அபிலாசைகளை தொடர்ந்து படித்து நிறைவேற்றுவேன். எல்லாம் வல்ல மூத்த விநாயகர் பாதம் பணிந்து வெற்றிக்கு வித்திட்டவர்கள் அனைவருக்கும் எனது பணிவான வந்தனங்களைக் கூறிக் கொள்கிறேன்.



## சுப்பிரமணியம் சுபா
### கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தியாலயம்
### புள்ளிகள் - 163

எனது அப்பா ஆலயப் பூசகர். அம்மாவின் பெயர் சு.ஞானாம்பிகை, உபதபால் அதிபராகக் கடமையாற்றுகிறார்.

எனது அம்மா எனக்குத் தெரியாத விடயங்களைக் கேட்கும் போதெல்லாம் விளக்கத்துடன் கூறுவார். அப்பா கல்வி கற்பதற்கு தேவையானவற்றையெல்லாம் வாங்கித் தருவார். எனது பாடசாலை அதிபர் த.ரவீந்திரன் அவர்கள் விசேட வகுப்புகள் வைக்கும் போது விளங்காத விடயங்களை அன்போடு அரவணைத்துத் தெளிவாக விளக்கம் தருவார். எனது வகுப்பாசிரியர் தரம் 3இல் இருந்தே பல போட்டிகள் நடத்தி பரிசுகள் தந்து எம்மை உற்சாகப் படுத்தினார்.

எனது அப்பா, அம்மாவின் அன்பான அரவணைப்பும் கனிவான கண்டிப்பும் அதிபரினால் வழிகாட்டிய தன்னம்பிக்கையும் வகுப்பாசிரியரோடு இணைந்து மேலதிக வகுப்புகள் எடுத்த ஏனைய ஆசிரியர்களையும் என்றும் மறக்க முடியாது. இவர்கள் எல்லோரினதும் வழிப்படுத்தலினால் பரீட்சையில் சித்தியடையும் ஆசை நிறைவேறியதோடு பாடசாலை மட்டத்தில் இரண்டாவது அதிகூடிய புள்ளிகளைப் பெறமுடிந்தது. எனது பாடசாலை, கல்வியில் சிறந்த பெறுபேற்றினைப் பெறும் ஒரு சாதனைப் பாடசாலை ஆகும்.

நான் எதிர்காலத்தில் சிறந்த ஆசானாக வர இறைவனை வேண்டுகிறேன். புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற உறுதுணையாக இருந்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**செவ்வி : கர்ணன், ஞானஆதவன், குமரசிறி**



## மதிமாறன் தேன்நிலா
### கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
### புள்ளிகள் - 179

எனது தந்தை ஒரு தனியார் கல்வி நிறுவன ஆங்கில ஆசிரியர். தாயார் வீட்டுப் பணி புரிகின்றார். நான் முன்பள்ளியில் கற்றது முதல் பேச்சு, விளையாட்டு, கல்வி நடவடிக்கைகளில் முன்னிலை வகித்து வந்துள்ளேன். அதற்கான பயிற்சியை கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும் நடத்தும்.

அதைத் தொடர்ந்து நான் கல்விகற்கும் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையும் எனது முன்னேற்றத்திற்கு பல துறைகளிலும் களம் அமைத்துத் தந்தது. அங்கும் பேச்சு, விளையாட்டு, கல்வி முயற்சிகளில் ஆர்வத்துடன் பங்குபற்றிப் பல பரிசில்களைப் பெற்றுள்ளேன்.

சென்ற வருடம் முதல் இப்புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் முயற்சிகளில் எனது பாடசாலையும் என் பெற்றோரும் என்னை ஊக்குவித்து வந்துள்ளனர். எமது அதிபர், தரம் ஐந்தில் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஆகியோர் ஊக்கத்துடன் எம்மை தயார்ப்படுத்த சிறப்பு வகுப்புக்கள் நடத்தினர். எமது பெற்றோரும் சிரத்தையுடன் எனக்கு வசதிகள் செய்து என்னைக் கற்றலுக்காக ஊக்குவித்தனர்.

எமது அதிபர் சிங்களம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சிறப்பு வகுப்புக்கள் நடத்தி எம்மை வழி நடத்தியமை, நான் பாடசாலையில் முதல் இடம்பெற உதவியது. நான் தொடர்ந்தும் இடைவிடா முயற்சி செய்து பல்கலைக்கழகப் பட்டதாரி ஆகுவதே எனது இலக்கு. எனது இவ்வுயர்வுக்கு ஆரம்ப வகுப்புகளில் எம்மைக் கற்பித்த ஆசிரியர்கள் அனைவருக்கும் பொதுவாகவும், ஐந்தாம் வகுப்பில் கற்பித்த ஆசிரியர்களுக்கும் அதிபருக்கும் எனது பெற்றோருக்கும் சிறப்பாகவும் நான் என்றென்றும் நன்றியுடையவளாவேன்.



## சிவகுமாரன் கஜலக்சன்
### கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தியாலயம்
### புள்ளிகள் - 152

எனது அப்பா ஆலயப் பூசகர். அம்மா வீட்டுப்பணி. சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவன். அம்மா குடும்பத்தின் நிலைமைகளை எடுத்துச் சொல்லி நன்றாகப் படிக்கவேண்டும் என அறிவுரை கூறுவார்.

அப்பா எனக்குத் தேவையான பயிற்சிப் புத்தகங்களை வாங்கித் தந்து ஊக்கப்படுத்தினார். நல்ல நண்பர்களோடு சேர்ந்து எனது அறிவை மேலும் வளர்த்துக் கொண்டேன்.

எனது அதிபர் த.ரவீந்திரன் விசேட வகுப்பு எடுக்கும் போதெல்லாம் உங்களால் பரீட்சையில் சித்தியடைய முடியும் என்று அடிக்கடி சொல்லி தன்னம்பிக்கையை வளர்த்தார்.

எனது வகுப்பாசிரியர் திருமதி சு.சாமினி நேரகாலம் பாராது விசேட வகுப்புகள் நடத்தி எமது அறிவை வளர்த்தார். அடிக்கடி போட்டிகள் நடத்தி பரிசுகள் தந்து ஊக்குவித்தார். ஏனைய ஆசிரியர்களும் எனக்கு பல்வேறு விதத்தில் உதவினார்கள். எனது பாடசாலை வளங் கள் குறைந்த கிராமப்புறத்தில் உள்ள கஷ்ரப்பிரதேச பாடசாலையாகும். இருந்தாலும், அதிபர், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான செயற்பாட்டினால் 8 மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். நான் பாடசாலை மட்டத்தில் 3ஆம் இடத்தில் சித்தியடைந்தேன். என்னை வழிப்படுத்தி நெறிப்படுத்திய அனைவருக்கும் இறைவன் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.



## மகேந்திரராசா ஜனகன்
### அச்சுவேலி மத்திய கல்லூரி
### புள்ளிகள் - 166

எனது தாய், தந்தையர் இருவரும் ஆசிரியர்கள். எனது குடும்பத்தில் நான் மூத்தபிள்ளை. எனக்கு ஒரு சகோதரனும் சகோதரியும் உள்ளனர்.

எனக்கு காலையில் எழுந்து படிக்கும் பழக்கம் இல்லை. ஆனால் வகுப்பில் படிப்பவற்றை உடனேயே படித்து விடுவேன். இரவில் 7மணியிலிருந்து 9மணி வரை பாடங்களைக் கற்பேன். கற்பதற்கு அம்மா உதவி புரிவார். வீட்டு வேலைகளைக் கவனமாகச் செய்வதற்கு அம்மா உதவி செய்வார். தரம் 4இல் இருந்தே பயிற்சி வினாத்தாள்களைச் செய்யும் பழக்கம் உண்டு. படிக்கும் வேளைகளில் படிக்கவேண்டும் என்பது அப்பாவின் கண்டிப்பு. மற்றைய நேரங்களில் புத்தகங்களை நிறைய வாசிக்கும் பழக்கம் உண்டு. கூடிய புள்ளிகளைப் பெற வேண்டும் என்று அப்பா எப்பொழுதும் ஊக்கப்படுத்துவார். பாடசாலை அதிபர், வகுப்பாசிரியர் மற்றும் எனக்குக் கற்பித்த ஆசிரியர்களுக்கு நன்றி கூறுகின்றேன். மற்றும் அன்பழகன் ஆசிரியர், காந்தன் மாமா ஆகியோரும் நான் சிறந்த புள்ளிகள் பெற உதவி செய்துள்ளனர். அனைவருக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.



## செல்வராஜா ஹனிராஜ்
### கோப்பாய் தெற்கு றோ.க.த.க பாடசாலை
### புள்ளிகள் - 149

இப்புள்ளியைப் பெறுவதற்கு எனது வகுப்பாசிரியை திருமதி புவனேஸ்வரி சிவகுமாரன் தந்த ஆக்கமும் ஊக்கமும் பிரதான காரணம். அதிபர். ச.லலீசன் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தேவையான வினாத்தாள் பயிற்சிகளை பெற்றுத் தந்தார்.

அடிக்கடி படி படி என்று கூறிக்கொண்டிருப்பார். எனது அப்பாவையோ, அம்மாவையோ ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் அழைத்து எனது படிப்புப் பற்றி ஆலோசிப்பார். கத்தோலிக்க சூழலில் வளர்ந்த நான், தொடர்ந்து சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் எனது இடைநிலைக் கல்வியைத் தொடர உள்ளேன். கல்வி கற்று ஒரு மருத்துவராக வந்து எனது கிராமத்திற்கு சேவையாற்ற வேண்டும் என விரும்புகிறேன். எனது தந்தை ஒரு ஓவியர். தாயார் வீட்டுப்பணி செய்பவர். எனது அண்ணா, அக்கா ஆகியோரும் யாழ்.சென்பற்றிக்ஸ், திருக்குடும்பக் கன்னியர்மடம் ஆகிய பாடசாலைகளிலே கல்வி கற்கின்றனர். நான் கல்வி கற்பதற்கு எனது தாய் தந்தையரின் ஒத்துழைப்பும் சிறப்பாகக் கிடைத்தது.



## இரத்தினசிங்கம் ஸ்ரீராம்
### அச்சுவேலி மத்திய கல்லூரி
### புள்ளிகள் - 156

எனது தந்தை தனியார் பஸ் நடத்துநர். எனது தாயார் வீட்டுப்பணி செய்பவர். எமது சொந்த இடம் பலாலி. போர்ச்சூழல் காரணமாக இடம் பெயர்ந்து அச்சுவேலியில் வசித்து வருகிறோம். எனது இவ் வெற்றிக்குப் பெற்றோரின் ஊக்கமே காரணம்.

இது தவிர எனது வகுப்பாசிரியர் மற்றும் எனக்கு தரம் 1 முதல் கற்பித்த ஆசிரியர்கள், அதிபர் மற்றும் தனியார் கல்வி நிறுவனத்தார் ஆகியோரும் எனக்கு உதவினர். எமது பாடசாலையில் ஒழுங்கு செய்யப்பட்ட முன்னாள் ஆசிரிய ஆலோசகர் செல்வப்பிரகாசம் அவர்களின் சமூகக் கல்விக் கருத்தரங்கும் பயனுள்ள ஒன்றாக இருந்தது.

நான் படிப்பில் மட்டுமன்றி மெய்வல்லுநர் போட்டி, சதுரங்கம், சங்கீதம் என்பவற்றில் ஈடுபட்டு கோட்ட, வலய போட்டிகளிலும் பங்குபற்றியிருக்கிறேன். நான் இத்துடன் நிற்காது தொடர்ந்து சிறப்பாக கற்பதுடன் சாரணியம் மற்றும் ஏனைய இணைபாட விதான செயற்பாடுகளிலும் ஈடுபட்டு எதிர்காலத்தில் ஏழைச் சிறுவர்களின் அறிவுக் கண்களைத் திறக்கும் ஆசிரியராவதற்கு விரும்புகிறேன்.



## தனுசன் கமலேஸ்வரன்
### அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை
### புள்ளிகள் - 147

நான் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவன். எனது அம்மாவும் அப்பாவும் என்மேல் மிகுந்த அக்கறையுள்ளவர்கள். நான் வீட்டில் மூத்தபிள்ளை. எனக்கு ஒரு சகோதரனும் ஒரு சகோதரியும் உள்ளனர். நான் படித்து முன்னுக்கு வரவேண்டும் என்ற குறிக்கோளோடு தினமும் இரவு 7மணியில் இருந்து 9மணிவரை படிப்பேன். நான் எப்போதும் எதையும் தேடிக் கற்பதில் ஆர்வமுடையவன். எதிர்காலத்தில் ஆசிரியராக வரவேண்டும் என்பது தான் எனது ஆசை. அதற்கான எனது முயற்சியைத் தொடருவேன்.

எனது இந்தப் பரீட்சை வெற்றிக்கு உறுதுணையாக நின்ற எனது வகுப்பாசிரியர், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அதிபர் ச.மாணிக்கவாசகர் ஆகியோருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

எனது சகபாடிகள் நகர்ப்புறப் பாடசாலைகளையும் பிரபல பாடசாலைகளைத் தேடி ஓடிக் கொண்டிருக்கின்ற வேளையில் கிராமப்புறப் பாடசாலையில் நம்பிக்கை வைத்துப் படித்தேன். எதிர்பார்த்த மாதிரி வெற்றியும் பெற்றுள்ளேன். கற்க வேண்டும் என்ற சுயநம்பிக்கையும் முயற்சியும் உள்ள நிலையில் ஆசிரியர்களின் வழிகாட்டலை முழுமையாக ஏற்று கற்றல் செயற்பாடுகளை மேற்கொண்டால் வெற்றி பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்.அத்திவாதினதின் வருடாந்த விழா நேற்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்றது. இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அவுஸ்திரேலிய திருச்சபைகளின் கூட்டிணைப்பின் இயக்குநர் வண.ஜோன் பொன்ஹம்சி மங்கள விளக்கை ஏற்றி வைப்பதையும், யாழ். ஆதீனத்தின் புதிய அலுவலகக் கட்டடத் தொகுதியின் நினைவுக் கல்லை தென்னிந்திய திருச்சபையின் பேராயர் எஸ். டானியல் தியாகராஜா திரைநீக்கம் செய்து வைப்பதையும் முதல் இரண்டு படங்களில் காணலாம். தென்னிந்திய த் திருச்சபையின் இளைப்பாறிய பேராயர் எஸ். ஜெபநேசன் நாடவைவெட்டி அலுவலகத்தைத் திறந்து வைப்பதையும் இந்த வைபவத்தில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம். (படங்கள்:சரவணன்)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ இளவாலை கன்னியர் மடம் ம.வி.பரிசளிப்பு தினமாகிய இன்று
கல்லூரி அன்னைக்குப் புகழ் சேர்த்த மாணவச் செல்வங்கள்

**க.பொ.த.(சா.த) 2008**

1. செ.ஆன் லாவண்யா 9A
2. கை. ஆன்யஸ்மின் 5A,2B,2C
3. ம.ரொஷின் மெலானி 5A,B,3C
4. கோ. அமுதலோஜினி 4A,3B,2C
5. பி.றோசலின் தமிழினி 4A,2B,2C,S
6. கி.பிரிந்தா 4A,B, 3C,S
7. க. கஜதீபா 4A,B,3C
8. கை. ஜக்குலின் ஜொனிற்றா 3A,4B,2C
9. சு.பகீரதி 3A,2B,3C,S
10. க. பிரியங்கா 3A, B, 2C,3S
11. கு.ஐதிகா 3A,2B,2C,S

**தரம் 5**
**புலமைப்பரிசில் 2008**

1. அ. மேரி விதுஜா 141
2. இ.நேமிதா 135
3. அ.மரிய டெனிற்றா 130
4. பீ.அனிஸ்ரா அமலினி 128
5. செ.மேரி நிலைக்சனா 125
6. ந.துசாகினி 124
7. பு. பிறிஜிட் யஸ்மிதா 119
8. பி.மொலின் 114

**உடற்பயிற்சிப் போட்டி 2009**

வலய மட்டம் 2 ஆம் இடம்
மாவட்ட மட்டம் 2 ஆம் இடம்
மாகாண மட்டம் 3 ஆம் இடம்
தேசிய மட்டம் 2 ஆம் இடம்
பங்குபற்றிய 30 மாணவர்களையும்

**2008 பல்கலைக்கழகம்/**
**கல்வியியற் கல்லூரி**

1. சாகினி நடராஜா 2A,B மருத்துவ பீடம் (யாழ்.பல்கலைக்கழகம்)
2. கஜந்தினி சண்முகராஜா 3C (உயிரியல்விஞ்ஞானம் யாழ்.பல்கலைக்கழகம்)
3. விஜயகுமாரி விஜயரட்ணம் 2C,S (சித்த மருத்துவம் யாழ்.பல்கலைக்கழகம்)
4. லூர்ட்ஸ் மேரி றோசலின் சிவலிங்கம்3A (முகாமைத்துவம் யாழ்.பல்கலைக்கழகம்)
5. ஜெயன் சுகன்யா செபஸ்ரியன் 2A,B (முகாமைத்துவம் யாழ்.பல்கலைக்கழகம்)
6. சுவேதா பாலச்சந்திரன்3A (இந்து நாகரிகம் யாழ்.பல்கலைக்கழகம்)
7. மரிய அன்ரலா சகாயசீலன் 2AB (மனைப்பொருளியல் யாழ்.பல்கலைக்கழகம்)
8. கியூறிற்றா இராசநாயகம் ABC (நாடகமும் அரங்கியலும் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கை நிறுவகம், மட்டக்களப்பு)

ஆகிய மாணவர்களையும்
மாகாண மட்ட திடகள போட்டியிற் 15 பதக்கங்களை
வென்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர், பழைய மாணவர், பெற்றோர்
யா/இளவாலை கன்னியர்மடம் ம.வி.

(90497)


# சரத் பொன்சேகா.....

(09ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் ஒரு நல்ல அரசியல் தலைவர் என்பதிலே எனக்கு இரண்டாவது கருத்துக் கிடையாது. அவர் மீது எனக்கு நிறைய அபிமானம் உண்டு. மரியாதை உண்டு. ஆனால், பொறுப்பு வாய்ந்த எந்தவொரு எதிர்க்கட்சியும் இந்த நாட்டின் ஜனநாயக அரசியல் முறைமைகளிலிருந்து விடுபட்டுச் செல்கின்ற அல்லது அதற்கு முரண்பாடாக இருக்கக்கூடிய விதத்திலே எந்தவொரு கருத்தையும் குறுகிய அரசியல் ஆதாயத்துக்காகக்கூட அல்லது ஒரு வெறும் அரசியல் யுக்தியாகக் கூட எந்தச் சந்தர்ப்பத்திலும் வெளியிடக் கூடாதென்பதை நான் அழுத்தம் திருத்தமாகக் கூறிவைக்க விரும்புகின்றேன். நாங்கள் அனைவரும் ஒரு பாரிய தேசிய பிரச்சினைக்கு முகங்கொடுத்திருக்கிறோம்.

**அகதிகளின் அவலம்**

இந்த நாட்டு மக்கள் ஒன்றுபட்டு எழுந்திருக்கவேண்டும். நீண்டகாலமாக எமது மக்கள் நீதிக்காக ஏங்குகின்றார்கள். இப்பொழுதுகூட இரண்டரை இலட்சம் மக்கள் முகாம்களிலே வாடிக்கொண்டிருக்கின்றார்கள். மழை காலம் வந்துவிட்டது. 'வடக்கின் வசந்தம்' வருவதற்கு முன்னாலேயே வடக்கிலே மாரிகாலம் - குளிர்காலம் வந்து விட்டது. விரைவிலே செட்டிக்குளத்திலிருக்கும் முகாம்கள் நீரிலே மூழ்கிப்போகின்றன. பஸில் ராஜபக்ஷவை சில வாரங்களுக்கு முன்னர் இந்தச் சபை வளாகத்திலே நானும் என்னுடய சக நாடாளுமன்ற உறுப்பினரொருவரும் சந்திக்க நேர்ந்தபொழுது இந்த அபாயத்தை அவருக்குச் சுட்டிக்காட்டினோம். அதற்குரிய மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன என அவர் எங்களுக்கு உறுதியளித்திருக்கிறார். இந்த மாரி காலத்திலே முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் போக எஞ்சியிருக்கக்கூடியவர்கள், வவுனியாவிலுள்ள பாடசாலைகள் அனைத்தையும் மூடியாவது, கொங்கிறீட் கட்டடங்களுக்குள்ளே பாதுகாப்பான கூரைகளின் கீழே வாழுகின்ற நிலைமையை அரசு உறுதிப்படுத்தவேண்டும். ஏனென்றால், இந்த தற்காலிக முகாம்கள் இந்தப் பாரிய மழை காலத்திலே ஒருநாளுக்குக் கூட நின்றுபிடிக்கமாட்டா.

பாரிய பிரச்சினைகளை இந்த நாடு எதிர்நோக்கியிருக்கின்றது. எமது மக்கள் இன்றைக்கு அனைத்தையும் இழந்து நிற்கின்றார்கள். வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அபிவிருத்திகள் மறுக்கப்பட்ட நிலையிலே கடந்த கால் நூற்றாண்டுகளாகக் காய்ந்துபோய்க்கிடக்கின்றன. எனவே, தேவையற்ற செலவினங்களைக் குறைத்து அமைச்சர்களின் எண்ணிக்கையைக் கூட எதிர்காலத்திலே தேவைக்கு அதிகமாகப் போய்விடாமல் உறுதிப்படுத்தி, இவ்விதம் இராணுவத் திற்கு - படைத்தரப்புக்கு மேலும் செலவழிப் பதைக் குறைப்பது மட்டுமல்லாமல், இராணுவத்தின் எண்ணிக்கையையும் குறைத்து, பொறுப்போடு செயற்படுகின்ற நிலைமையை ஏற்படுத்தி, அரசியல் பிரச்சினைக்குத் தேசிய நல்லிணக்கத்தோடு விரைவாகத் தீர்வு காணமுடியுமாக இருந்தால் இந்த நாட்டின் எதிர்காலம் ஒளிமயமானதாக அமையும் என்று கூறுகிறேன். *


# முதலாம் வருட நினைவுதினம்



தோற்றம்
02.05.1938

மறைவு
14.11.2008

அமரர்
மயிலன் சின்னத்தம்பி

திதி: பிரதமை (03.11.2009)

எங்கள் குடும்பத்தின் தன்னிகரில்லா தலைவனாய்!
எம்மை எல்லாம் வழிப்படுத்தி
எம்மை எல்லாம் தரணியில் தலை நிமிர்ந்து வாழ வைத்த
தவப்பெருமகன் நீங்கள்!
ஆண்டு ஒன்று நகர்ந்தாலும் உங்கள் பாசம்
என்றும் விட்டு அகலாது!

எங்கள் கண்ணீர்ப் பூக்கள் என்றென்றும் உங்களுக்காக
ஆண்டவன் அடியில் உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் துயருறும்,
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

அண்ணா சனசமூக நிலைய வீதி,
கெருடாவில் தெற்கு,
தொண்டைமானாறு.

(சி/562077)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திருமதி தங்கம் வேலுப்பிள்ளை

தோற்றம் 24.04.1930
மறைவு 06.10.2009

உள்ளத்தால் உயர்வாகி
வாழ்விற்கு வழிகாட்டி
இதயத்தில் இருக்கும்
எங்கள் அம்மாவே!
உங்கள் ஆத்மா சாந்தி
அடையப் பிரார்த்திக்கின்றோம்.

கடந்த 06.10.2009 அன்று இறைபதம் எய்திய எமது குடும்ப ஒளிவிளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை மறுதினம் (05.11.2009) வியாழக்கிழமை காலை 6 மணியளவில் புலோலி, புற்றளை சித்தி விநாயகர் ஆலய அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து வீட்டுக்கிருத்திய கிரியைகள் மு.ப.10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வுகளில் குடும்ப சமேதராய் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக

சாவகச்சேரி வீதி,
மந்திகை, புலோலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்.விபுலானந்தனின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தை யாழ்.மத்திய கல்லூரி, கன்னியர் மடம் அணிகள் கைப்பற்றின

யாழ்ப்பாணம்,நவ.3

யாழ்.மத்திய கல்லூரியின் முன்னாள் மாணவ முதல்வரும் கூடைப்பந்தாட்ட வீரருமான அமரர் பொன்.விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான யாழ்.மத்திய கல்லூரி மாணவர் முதல்வர் சபை மின் ஒளியில் நடத்திய பாடசாலைகளின் ஆண், பெண் அணிகளுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி 'ஏ' அணி, யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் அணி ஆகியன வெற்றி பெற்றன.

இந்தப் போட்டிகள் கடந்த வியாழக்கிழமை மாலை 5.30 மணியளவில் யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்றன.

முதலில் இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் அணிமோதிக்கொண்டது.

இதில் யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மடம் அணி எதிர்த்து விளையாடிய யாழ். வேம்படி மகளிர் கல்லூரி அணியை 50:25 என்ற புள்ளி வித்தியாசத்தில் வெற்றி கொண்டு சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக்கொண்டது.

இப்போட்டித் தொடரில், ஆட்டநாயகியாக திருக்குடும்பக் கன்னியர்மடத்தைச் சேர்த்த ஆன் பெனிசிஸ் எட்வேட் தெரிவு செய்யப்பட்டார். ஆட்ட தொடர் நாயகியாக வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த தர்சினி பாலச்சந்திரன் தெரிவு செய்யப்பட்டார்.

தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி 'ஏ' அணி மோதிக்கொண்டது.

யாழ்.மத்திய கல்லூரி 'ஏ' அணி எதிர்த்து விளையாடி யாழ்.இந்துக் கல்லூரி அணியை 79:43 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

இப்போட்டித் தொடரில்,சிறந்த ஆட்ட நாயகனாக யாழ்.மத்திய கல்லூரி அணியைச் சேர்ந்த பிரசாத்மன் தெரிவு செய்யப்பட்டார்.

சிறந்த தொடர் ஆட்டநாயகனாக யாழ். இந்துக்கல்லூரியைச் சேர்ந்த துவாரகன் தெரிவு செய்யப்பட்டார். (50-23)

## துரையப்பா அரங்கு புனரமைப்பு

யாழ்ப்பாணம்,நவ.3

யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கின் அபிவிருத்திக்கென 6.3 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வடமாகாண ஆளுநரின் பணிப்பின் பேரில் ஒதுக்கப்பட்ட இந்த நிதியைக் கொண்டு விளையாட்டரங்கு மீள் புனரமைப்பு செய்யப்படவுள்ளதுடன், உடற்பயிற்சிக்கான உபகரணங்களும் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

மேலும், 3.3 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் கோட்டைப் பகுதியிலுள்ள பற்றைகள், புதர்களை அகற்றும் பணி சில தினங்களில் நிறைவு பெறவுள்ளதாகவும் யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார். (50- 14)

# மானிப்பாய் இந்து 18 வயது அணி சண்டிலிப்பாய் கோட்டச் சம்பியனானது

வலி.வடக்கு,நவ.3

சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 18 வயதுப் பிரிவினர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி வெற்றி பெற்று கோட்டச் சம்பியனாகியது.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் புனித ஹென்றியரசர் கல்லூரியும்,மானிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் சளைக்காது மோதிக்கொண்டன.

இரு அணிகளும் எதிரணியின் கோல் கம்பங்களை ஆக்கிரமிக்க முயற்சித்த போதிலும் பின்னனி வீரர்களின் துடிப்பான எதிர்ப்பின் மூலம் கோல்கள் பெற முடியாத நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவுற்றது.

இரண்டாவது பாதி ஆட்டம் இரு அணிகளின் ஆதரவாளர்களின் பலத்த ஆதரவுக்கு மத்தியில் ஆரம்பமாகியது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை உரிய முறையில் பயன்படுத்தி ஒரு கோலைப் பெற்று முன்னிலையில் காணப்பட்டது.

ஹென்றியரசர்கல்லூரிகோல்பெறபெரும் முயற்சிஎடுத்துக்கொண்டபோதிலும்மானிப்பாய் இந்துக் கல்லூரி மிகவும் கவனமாக விளையாடி அந்த முயற்சிகளை முறியடித்தது.

ஆட்ட நிறைவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 01:00 என்ற கோல் கணக்கில் ஹென்றியரசர் கல்லூரியை வெற்றிபெற்று கோட்ட சம்பியனாகியது.

3 ஆம் இடத்திற்கான போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும், மாதகல் சென்.யோசேப் வித்தியாலயமும் மோதிக்கொண்டதில் இரு அணிகளும் கோல்கள் பெறாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதைகளைத் தொடர்ந்து மாதகல் சென்.யோசேப் வித்தியாலயம் 03:01 கோல்கள் என்ற அடிப்படையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை வெற்றிபெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (50-86)

# மின்னொளியில் நடந்த கூடைப்பந்தாட்டம்; கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வெற்றி

வலி.வடக்கு,நவ.3

கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலுக்கு மின்னொளி வழங்கும் வைபவத்தில் இடம்பெற்ற பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டி ஒன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரி ஒரு புள்ளியினால் வெற்றி பெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மின்னொளியில் நடைபெற்ற போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரியும் கொக்குவில் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதல் கால் பாதி ஆட்டத்தில் 10:05 புள்ளிகள் என்று பின்தங்கி இருந்த உடுவில் மகளிர் கல்லூரி தொடர்ந்து இடம்பெற்ற இரண்டு கால் பாதி ஆட்டங்களிலும் படிப்படியாக முன்னேறியது.

ஆட்டம் முடிவடைய 2 நிமிடம் இருக்கும் நிலையில் உடுவில் மகளிர் கல்லூரி 25:24 புள்ளிகள் என்ற நிலையில் இருந்தது.

இந்த இறுதி விநாடிகளில் உடுவில் மகளிர் கல்லூரி வீராங்கனை செய்த தவறுக்காக வழங்கப்பட்ட தண்டனை மூலம் கொக்குவில் இந்துக் கல்லூரி 2 புள்ளிகளைப் பெற்று முன்னேறிக் கொண்டது.

ஆட்டநிறைவில் கொக்குவில் இந்துக் கல்லூரி 26:25 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது. (50-86)

## 11 வயதுக்குட்பட்டோருக்கான தாச்சிப்போட்டி

# பெரியவிளான் றோ.க.த.க. பாடசாலை ஆண்,பெண் அணிகள் சம்பியன்

யாழ்ப்பாணம்,நவ.3

சண்டிலிப்பாய் கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான 11வயதுக்கு உட்பட்ட ஆண், பெண் அணிகளுக்கான தாச்சிப்போட்டிகள் பெரியவிளான் றோ. க.த.க. பாடசாலை மைதானத்திலும், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மைதானத்திலும் நடைபெற்றன. இதில் ஆண், பெண் இரு அணிகளிலும் பெரியவிளான் றோ.க.த.க. பாடசாலை சம்பியனாகியது.

இவ் வருடம் நடைபெற்ற இளவாலைக் குடும்பமட்டத் தாச்சிப் போட்டியிலும் இரு அணிகளும் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (50)

# தம்பாட்டி அ.த.க. அணியை வீழ்த்தி சம்பியனானது நாரந்தனை கணேசா வித்தி.

ஊர்காவற்றுறை,நவ.3

ஊர்காவற்றுறைக் கோட்ட பாடசாலைகளின் 16 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையே நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் நாரந்தனை கணேசா வித்தியாலயம் சம்பியனாகியது.

ஊர்காவற்றுறை கோட்ட 16 வயதுப் பிரிவினருக்கான போட்டி காரைநகர் யாழ்ரன் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இப்போட்டியில் தம்பாட்டி அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயமும் நாரந்தனை கணேசா வித்தியாலயமும் மோதிக் கொண்டன. இப்போட்டி மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்றது. இப்போட்டியில் இரு அணிகளும் ஆக்ரோசத்துடன் விளையாடின. ஆனால் தீடீரென நாரந்தனை கணேசா பந்தை இலகுவாக நகர்த்தி கோல் அடிக்க, முதல் பாதி ஆட்டம் 1:0 என்ற கணக்கில் நிறைவு பெற்றது.

பின்னர் இரண்டாவது பாதி ஆட்டத்தில் தம்பாட்டி அணி கோல் அடிக்க முயற்சி செய்தது. ஆனால் முடியவில்லை. நாரந்தனை கணேசா கோல் அடிப்பதைத் தடுத்து நிறுத்தி இலகுவாக மீண்டும் ஒரு கோல் போட்டு அசத்த 2:0 என்ற கணக்கில் நாரந்தனை கணேசா ஊர்காவற்றுறை கோட்டச் சம்பியனானது. (50-325)






இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட 15 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ்.மாவட்ட மட்ட போட்டியில் வெற்றி பெற்ற யாழ்.மத்திய கல்லூரி அணியினரையும் கல்லூரி அதிபர், விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியரையும் படத்தில் காணலாம். (50-23)

## 16வயதுப் பிரிவுக்கான உதைபந்தாட்டம்

# நாவாந்துறை றோ.க., யாழ்.மத்திய கல்லூரி அணிகள் இறுதியாட்டத்துக்குத் தகுதி

யாழ்ப்பாணம்,நவ.3

யாழ். கல்வி வலய மட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்று வந்த 16 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரை இறுதியாட்டங்களில் நாவாந்துறை றோ.க., யாழ். மத்திய கல்லூரி அணிகள் வெற்றி பெற்றன.

கடந்த வியாழக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தின் முதலாவது போட்டியில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து நாவாந்துறை றோ.க. அணி மோதிக் கொண்டது. போட்டி ஆரம்பமான முதல், இரண்டு அணியினரும் மிகவும் உற்சாகத்தோடு மோதிக்கொண்டனர்.

இரண்டு அணியினரும் கோல் பெறுவதற்காக முயற்சி மேற்கொண்டபோதும் எதுவித கோலினையும் பெறமுடியவில்லை. இதனால் முதல்பாதி ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமாகியவுடன் இரண்டு அணி வீரர்களும் உத்வேகத்துடன் விளையாடினர்.

இதன்போது நாவாந்துறை றோ.க. வீரர் நிதர்சன் முதலாவது கோலினை அடித்தார். இதனால் போ[illegible] துறை றோ.க. [illegible] தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி இரண்டாவது கோலைத் தனது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார். இந்த நிலையில் இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரண்டு கோல்களை நாவாந்துறை றோ.க. பெற்றுக்கொண்ட நிலையில் ஆட்டம் முடிவுற்றது.

இதனால் நாவாந்துறை றோ.க. 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்திற்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் யாழ்.மத்தியகல்[illegible] எதிர்த்து ஊரெழு கணேசா [illegible] அணி மோதிக்கொண்டது.

ஆட்டம் ஆரம்பமாகிய நேரம் முதல் இரண்டு அணிகளும் மிகவும் வேகமாக விளையாடின. அந்த வேளையில் யாழ். மத்திய கல்லூரி அணி வீரர் பிரசாத் தனக்குக் கிடைத்த பந்தினை அடித்து தனது அணிக்கான முதலாவது கோலினைப் பெற்றுக் கொண்டார்.

முதல் பாதி ஆட்டம் 1:0 என்ற நிலையில் முடிவுற்றது. இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரண்டு அணிகளும் மிகவும் உற்சாகத்தோடு விளையாடி கோல்கள் அடிக்கும் முயற்சியில் ஈடுபட்டன.

அந்தச் சந்தர்ப்பத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணி வீரர் றிஸ்யாத் தனது அணிக்கான இரண்டாவது கோலினையும் பெற்றுக்கொடுத்தார்.

இதனால் போட்டி மிகவும் சூடு பிடிக்கத் தொடங்கியது. யாழ்.மத்திய கல்லூரி அணிவீரர் டார்வின் மிகவும் நுட்பமான முறையில் பந்தினை நகர்த்திச் சென்று தனது அணிக்கான மூன்றாவது கோலினை அடித்தார்.ஆட்ட முடிவில் யாழ்.மத்திய கல்லூரி அணி 3:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற் றது. (50- 23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







நல்லூரில் புதிதாக அமைக்கப்பட்ட நடராஜா -பரமேஸ்வரி மணிமண்டபத் திறப்புவிழா நேற்று மணிமண்டபத்தின் ஸ்தாபகர் நடராஜா சத்தியரூபன் தலைமையில் இடம் பெற்றது.

யாழ். அரச அதிபர் கே.கணேஷ் மணிமண்டபத்தை நாடா வெட்டித் திறந்து வைப்பதையும் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை அருகில் நிற்பதையும் முதலாவது படத்தில் காணலாம். விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்தில் காணலாம். மணிமண்டப ஸ்தாபகரும் சிறிநதியா நகைமாளிகை முதல்வருமான நடராஜா சத்தியரூபனும் அவரது பாரியாரும் இணைந்து மங்கள விளக்கேற்றுவதை மூன்றாவது படத்திலும்நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரை நான்காவது படத்தில் காணலாம்.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், நடராஜா சத்தியரூபனுக்கு வாழ்த்து மடல் வழங்குவதை இறுதிப்படத்திலும் காணலாம்.

*(படங்கள்:லக்ஷ்மன்,சரவணன்)*

## தேவை

படுக்கையில் இருக்கும் வயோதிப ஆ[illegible] நோயாளர் ஒருவரை பராமரிக்க முழுநேர ஊழியர் தேவை. நேரில் வரவும்.
42/1, இந்துக் கல்லூரி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம்.

இதோ!
ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி. தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல் சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஒளடதம்

(சி-5620080)

**பீம் வாசக சிரப் (Vasaka Syrup)**

இருமல் பாணி

**யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.**

*Manufactured By:*
*Beam Hela Osu Lanka*
*High Level Road,*
*Kottawa, Pannipitiya*
*Ayu D.M.Reg.No: 165*

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா,
இல.288, ஆஸ்பத்திரி வீதி;
யாழ்ப்பாணம்.
தொ.பே.021 222 2567

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் கந்தையா மகாலிங்கம்

தோற்றம் : 14.02.1951 மறைவு : 13.11.2008



நித்தமும் உங்களை நினைத்து
நீர்க் குமிழி போல நிலையற்ற
இவ்வுலகில்
நீங்கள் காட்டிய நல்வழியில்
நீங்கா நினைவுகளுடன்
வாழ்கிறோம்.

மூணா மலை வீதி,
மானிப்பாய்.

மனைவி, பிள்ளைகள்.

(90538)

## English Personal Class

ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கில Personal வகுப்புக்கள் கற்பிக்கப்படும்.
தொடர்பு: 0779850403 (90539)

## தவறிவிட்டது

கடந்த 22.10.2009 வியாழக்கிழமை இடம்பெயர்ந்தோரை விடுவித்தபோது தி.பூமணி என்பவரது (28.16.02) என இலக்கமிடப்பட்ட உரப்பை பொதி ஒன்று அன்றைய தினம் துரையப்பா விளையாடரங்கில் தவறி விட்டது. அப் பையினுள் முக்கிய ஆவணங்கள் உள்ளடங்கியுள்ளதால் தவறுதலாக எடுத்தவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொண்டு தந்துதவவும். T.திருமேனி, யூலனூர், அச்செழு, நீர்வேலி.

(90544)

## யாழ் மாணவர்களுக்கு அரிய வாய்ப்பு

ஐரோப்பிய நாடுகளுக்கான Student Visa, Sponsor ஏற்பாடுகள் செய்து தரப்படும். மாணவர்களின் நலன் கருதி இலகு கடன் வசதிகளும் செய்து தரப்படும்.
✱ எமது சேவைகள் யாவும் இலவசம்
தொடர்புகளுக்கு: 0213210614, 0772299900. (90545)

## வீதிப் புனரமைப்பை துரிதப்படுத்துக

சுழிபுரம்,நவ.3

சுழிபுரம் கல்லவேம்படியில் இருந்து சுழிபுரம் காட்டுப்புலம் தமிழ் கலவன் பாடசாலை வரையும் செல்லும் வீதி திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன, இதனால் மழை காலத்தில் போக்கு வரத்து செய்யமுடியாத நிலைமை ஏற்படவுள்ளது. மழை காலம் ஆரம்பமாவதற்கு முன்னர் உடனடியாக வேலைகளை முடிக்குமாறு அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கோரியுள்ளனர். (201-28)

## கஞ்சா அடைத்த சுருட்டு வைத்திருந்தவருக்கு வழக்கு

கஞ்சா அடைக்கப்பட்டிருந்த சுருட்டு வைத்திருந்த நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கினைவிசாரித்த நீதிவான் இந்த நபருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஐந்து மாத சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (203-207)

## நீங்கா நினைவில் ஓராண்டு



அன்னையின் மடியில் 17.07.1916

இறைவன் அடியில் 13.11.2008

### அமரர் வைத்திலிங்கம் சுப்பிரமணியம்

திதி: பிரதமை- (03.11.2009)

ஆண்டு ஒன்று ஆனாலும்-தெய்வமே
அலைகள் போல் ஓயாத எம் உள்ளங்கள்
ஆண்டாண்டு சென்றாலும்-தெய்வமே
ஆறாது உங்கள் நினைவலைகள்
எங்கள் அன்புத் தெய்வத்தின்
ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"முருகா அகம்",
சுதுமலை மேற்கு,மானிப்பாய்.

(90541)

## மரண அறிவித்தல்

### திரு. ஆறுமுகம் தியாகராஜா

(இளைப்பாறிய கணக்குப் பரிசோதகர், துறைமுக ஆணைக்குழு)



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. ஆறுமுகம் தியாகராஜா அவர்கள் 29.10.2009 அன்று சிவபதம் அடைந்துவிட்டார். இவர் தங்கராணியின் அன்புக் கணவரும், நாகரத்தினத்தின் சகோதரனும், ஸ்ரீ தங்கராஜா (வீதி அபிவிருத்தி அமைச்சு - RDA, செத்சிறிபாய, பத்தரமுல்ல), தியாகராணி, இராசராணி, சிவஞானராஜா, சிவனேசராஜா, ஸ்ரீகரராஜா, ஜெயராணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயந்தி, தேவராஜா, ஸ்ரீ விக்னேஸ்வரமூர்த்தி, விமலாவதி, சந்திரகோசி, சுதர்சிகா, நரேஷ் ஆகியோரின் அன்பு மாமனாரும், சாயிஸ்ரீ, பிரியங்கா, ஜெயநாத், உமா, ஸ்ரீராம், அபிராமி, சபேசன், நீரஜா, தேனுகா, கார்த்திகேயன், அனுஷயன், அபினுஷன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும். சந்திராணி, கந்தசாமி, தெய்வேந்திரம், காலஞ்சென்ற தங்கமலர், மனோன்மணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிஸை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நேற்று (02.11.2009) திங்கட்கிழமை பி.ப. 4.00 மணிக்கு தகனக் கிரியைகளுக்காக கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

*தகவல்:-*
*மனைவி,பிள்ளைகள்*

*123/2-1/1,ஹம்டன் லேன்*
*வெள்ளவத்தை*
*கொழும்பு-06*

*தொடர்புகளுக்கு:-*
*011-2366701, 0773139317*

*இந்த மரண அறிவித்தலானது நேற்றையதினம் பிரசுரமாகவேண்டியது. தவறுதலாக நேற்று பிரசுரமாகவில்லை. அதனால் இன்று பிரசுரமாகிறது.*

## கணனிசார் பதவி வெற்றிடங்கள்



எமது நிறுவனத்தில் கணனித்துறையில் பின்வரும் பணிநிலைகளுக்குப்பொருத்தமான தகுதியுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அ) உதயன் இணையப்பதிப்பு வடிவமைப்பாளர்
உதயன் பத்திரிகை மின் இணையப்பதிவு மற்றும் e-uthayan தளங்களை உடனுக்குடன் புதுப்பிக்கும் (Update) வகையில் பதிவேற்றம் (Upload) செய்யத்தேவையான ஆற்றலும் அனுபவமும் உள்ளவர்கள்

ஆ) பக்கவடிமைப்பாளர்கள்
தினசரி பதிப்புப் பணிகளுக்கான Pagemaking, Designing Works குரிய அனுபவம் Adobe Photoshop, Pagemaker மற்றும் Corel Drow அறிவுடையவர்கள்

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

கொழும்பில் பணியாற்ற விரும்பினால் இலவசமாகத் தங்குமிட வசதி ஏற்பாடு செய்யப்படும்.

கல்வித் தராதரம், திறமை, அனுபவச் சான்றுகளுடன் சிபார்சு செய்யக்கூடிய இருவரின் விபரங்களுடன் இன்றும் நாளையும் பிற்பகல் 2 மணி முதல் 6மணிவரை நேரில்வரவும்

ஆளணி முகாமையாளர், உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில் நேற்றும் தாக்குதல்: 24 பேர் மரணம்; 40 பேர் படுகாயம்!



இஸ்லாமாபாத், நவ.03

பாகிஸ்தான் நகரான ராவல்பிண்டியில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் 24 பேர் பலியாயினர். நாற்பதுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். மரணித்தோரிலும், காயமுற்றோரிலும் பெண்களும், பிள்ளைகளுமடங்குவர் என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

ராவல்பிண்டியின் மால் வீதியிலுள்ள ஷாலிமர் ஹோட்டலுக்கு வெளியே நேற்றுக் காலை உள்ளூர் நேரப்படி 10.40 மணியளவில் இக்குண்டு வெடித்தது. இதன் அருகில் வங்கியொன்று உள்ளது. இதன் அருகிலேயே இராணுவத் தலைமை அலுவலகம் அமைந்துள்ளது என பொலிஸார் பி.பி.ஸிக்குத் தெரிவித்தனர்.

பலத்த பாதுகாப்புமிக்க இப்பகுதி இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது.

நான்கு நட்சத்திர ஷாலிமர் ஹோட்டலின் கார் தரிப்புப் பகுதியில் இக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த தரிப்பிடத்துக்கருகிலேயே அலுவலகத் தொகுதியும், வங்கியும் அமைந்துள்ளன. வாடிக்கையாளர்கள் வரிசைக் கிரமமாக நின்று கொண்டிருந்த சமயம் இக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என ராவல்பிண்டி பிரதம பொலிஸ் அதிபர் அஸ்லாம் தாரின் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

''பூகம்பத்தால் தாக்குண்டதுபோல கட்டடம் குலுங்கியது. நாங்கள் வெளியே வந்தோம். எங்கும் புகை மண்டலமாக இருந்தது. எங்கள் அலுவலகத்துக்குள்ளும் மனித அவயவங்கள் வீசப்பட்டுக் கிடந்தன'' என்றும் நிறுவனம் ஒன்றின் பெண் முகாமையாளர் குறிப்பிட்டார்.

குண்டுவெடிப்பையடுத்து, அப் பகுதியில் பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டன. இராணுவத்தினரும், பொலிஸாரும் அப்பகுதிக்கு விரைந்தனர். சம்பவ இடத்துக்குத் தீயணைப்பு வாகனங்களும், அம்புலன்ஸ் வாகனங்களும் வரவழைக்கப்பட்டன. காயம் அடைந்தவர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டார்கள்.

குண்டுவெடிப்புக்குத் தலிபான் தீவிரவாதிகள் காரணமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. ஹோட்டலுக்கு வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் அல்லது மோட்டார் சைக்கிளில் குண்டு வைக்கப்பட்டு வெடிக்க வைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

# உக்ரைனில் தீவிரமாகப் பரவும் பன்றிக்காய்ச்சலுக்கு 53 பேர் பலி!

மாஸ்கோ, நவ. 03

ரஷ்யா அருகேயுள்ள உக்ரைனில் பன்றிக் காய்ச்சல் அதிவேகமாகப் பரவி வருகிறது. இந் நோயினால் ஓர் இலட்சத்து 84 ஆயிரத்து 919 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 7 ஆயிரத்து 383 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 123 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இந்த நோய்க்கு இதுவரை 53 பேர் பலியாகி உள்ளனர்.

இந்தத் தகவலை உக்ரைன் ஜனாதிபதி விக்டர் யுஷ்சென்கோ தெரிவித்துள்ளார். அத்துடன் பன்றிக்காய்ச்சல் நோய்க்கான மருந்து, மருத்துவ உபகரணங்கள் ஆகியவற்றை வழங்கி உதவும்படி அவர் சுலோவாக்கியா, ஹங்கேரி, ருமேனியா, ரஷ்யா, போலந்து ஆகிய ஐரோப்பிய நாடுகளுக்கும், அமெரிக்காவுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவரின் அவசர வேண்டுகோளுக்கிணங்க பல ஐரோப்பிய நாடுகள் மருந்துகள், முகமூடி கவசங்கள் ஆகியவற்றை அனுப்பியுள்ளன. இருந்தும் உக்ரைனில் பன்றிக் காய்ச்சல் நோய் முடிவுக்கு வர வில்லை.

மேற்கு உக்ரைனிலுள்ள 9 பகுதிகளில் அதிவேகமாகப் பரவியுள்ளது. இதனால் இப் பகுதிகளில் பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. இப்பகுதிக்குச் செல்ல பொதுமக்களுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

எனவே, இங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் உலக சுகாதார நிறுவனம் ஈடுபட்டுள்ளது. இந்நிறுவனத்தின் மருத்துவக் குழு நேற்று திங்கட்கிழமை உக்ரைனுக்குப் புறப்பட்டது.

உக்ரைனிலிருந்து பக்கத்து நாடான ரஷ்யாவுக்கும் பன்றிக்காய்ச்சல் நோய் பரவி வருகிறது. இங்கு 2 ஆயிரத்து 500 பேர் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். ரஷ்யாவின் தலைநகரான மொஸ்கோவிலுள்ள வைத்தியசாலைகளில் பார்வையாளர்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது. இதன் மூலம் மொஸ்கோவிலுள்ள ஆயிரத்து 500 பள்ளிகளை ஒரு வாரத்துக்கு மூட உத்தர விடப்பட்டுள்ளது.

முன்பு சோவியத் ஒன்றியத்திலிருந்த பெலாரஸிலும் பன்றிக்காய்ச்சலுக்கு 59 பேர் பலியாகியுள்ளனர்.

# ஆப்கானுக்கு கூடுதல் படைகள்: ஒபாமாவின் முடிவு தாமதமாகும்

## வெள்ளை மாளிகை சிரேஷ்ட அதிகாரி தகவல்

வாஷிங்ரன், நவ. 03

ஆப்கானிஸ்தானுக்கு கூடுதல் படைகளை அனுப்புவது தொடர்பான தமது இறுதி முடிவை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா உடனடியாக அறிவிக்க மாட்டார் என வெள்ளைமாளிகை சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி பராக் ஒபாமாவின் ஆசிய நாடுகளுக்கான உத்தியோகபூர்வ சுற்றுப் பயணம், எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பமாகும். இச்சுற்றுப்பயணத்துக்குப் பின்னரே அவர் தம் முடிவை அறிவிப்பார் என்றும் இந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

ஆப்கான் விவகாரங்களை அணுகுவதற்கான புதிய உத்திகள், கூடுதல் படைகளை அனுப்புவதற்கான முடிவு ஆகியவற்றை இவ்விஜயத்துக்குப் பின்னரே பராக் ஒபாமா அறிவிப்பார் என்றும் அவர் மேலும் விவரித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான இரண்டாம் சுற்றுத் தேர்தல் எதிர்வரும் 7 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்நிலையில் எதிரணி வேட்பாளர் அப்துல்லா அப்துல்லா போட்டியிலிருந்து தாம் விலகிக் கொள்ளப் போகின்றார் என அறிவித்தல் விடுத்துள்ளார்.

இத்தகைய உள்விவகாரங்களால் ஆப்கானிஸ்தானில் அரசியல் ஸ்திரப்பாடு ஆட்டம் கண்டுள்ளது. அதனால் ஆப்கான் சம்பந்தப்பட்ட தம் முடிவுகளை உடனடியாக வெளியிட அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா முன்வரவில்லை என அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளார்கள்.

# அல் - குவைதாவின் ஆயுதக் கிடங்கு சவூதி ரியாத்துக்கருகில் கண்டுபிடிப்பு

ரியாத், நவ. 03

ரியாத்துக்கருகில் ஏற்கனவே நிர்மூலமாக்கப்பட்ட அல்-குவைதா தீவிரவாத முகாமுக்கருகில் நிலவறையொன்றுக்குள் பாரிய ஆயுதக் கிடங்கொன்று சவூதி பொலிஸாரால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இந்த ஆயுதக் கிடங்கிலிருந்து 300 தன்னியக்க துப்பாக்கிகள் 44 ஆயிரம் சுற்றுக்களுக்கான வெடிப்பொருட்கள், எறிகுண்டுகள், தற்கொலைப் படை அங்கிகள் ஆகியவை மீட்கப்பட்டுள்ளன.

ஓகஸ்ட் மாதம் அரேபிய வளைகுடாவில் கைது செய்யப்பட்ட 44 தீவிரவாத சந்தேக நபர்களின் பாவனைக்கு உரியவை இவை என நம்பப்படுகிறது. இவர்கள் அல்-குவைதா உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டவர்களாவர்.

2003 ஆம் ஆண்டு சவூதியில் தொடர் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றன. இவற்றையடுத்து, அல்-குவைதா உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் பெருவாரியானோர் பரவலாக கைது செய்யப்பட்டனர். அநேகர் தலைமறைவாகி வளைகுடாவின் பல பாகங்களுக் கும் சென்றுவிட்டனர்.

அரேபிய வளைகுடாவிலுள்ள ஏமனில் அண்மையில் தாக்குதல் நடத்தப்பட்டது. ஒசாமா பின்லேடனின் சர்வதேச வலையமைப்புப் பணிக்குத் தலைமை வகிக்கும் ஒருவரே இக்குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரி என்ற தகவல் வெளியாகியது.

ஓகஸ்ட் மாத இறுதியில் ஜெட்டா துறைமுகத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலை இக் குழுவினரே நடத்தியுள்ளனர் என பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது. இதில் துணை உள்துறை அமைச்சர் இளவரசர் மொஹம்மத் பின் நயீப்பும் காயமடைந்தார்.

இதற்குப் பின்னர் சவூதி பொலிஸார் அதிரடி தேடுதல் வேட்டையை மேற்கொண்டு வருகின்றனர். இப்பொலிஸாரே ரியாத்துக்கருகில் பாரிய இரகசிய ஆயுதக் கிடங்கொன்றை கண்டுபிடித்துள்ளனர்.

# அமெரிக்காவில் கைதான கோல்மன் பாகிஸ்தானில் பயிற்சிபெற்று வந்தவர்

## புலனாய்வு விசாரணையில் தகவல்

வாஷிங்ரன், நவ. 03

அமெரிக்காவில் பயங்கரவாதி என்ற சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட டேவிட் கோல்மன், பாகிஸ்தானில் பயங்கரவாதப் பயிற்சிபெற்று வந்தவர் என்ற தகவல் புலனாய்வுக் குழுவினர் மேற்கொண்ட விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது.

அமெரிக்கப் புலனாய்வுக் குழு, டேவிட் கோல்மன் கைது செய்யப்பட்டமை தொடர்பான மனுவொன்றை இலினோஸ் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. அதில் புலனாய்வு விசாரணை தொடர்பான தகவல்கள் அடங்கியுள்ளன.

''டேவிட் கோல்மனுக்கு சிகாகோவில் சொந்தமாக வீடு உள்ளது. இதை இளைஞர் ஒருவருக்கு வாடகைக்கு விட்டுள்ளார். டேவிட் கோல்மனுக்கும், பாகிஸ்தானிலுள்ள பல்வேறு பயங்கரவாத அமைப்புகளுக்குமிடையே நெருக்கமான தொடர்பு உள்ளது. இதனால் அவர் அடிக்கடி பாகிஸ்தான் சென்று பலநாள்கள் முகாமிட்டுப் பயங்கரவாதப் பயிற்சிபெற்று வந்துள்ளார்'' என அந்த மனுவில் குறிப்பிடப் பட்டுள்ளது.

''பாகிஸ்தானைவிட்டு வெளிநாடுகளில் உலா வரும்போதும் பாகிஸ்தானிலுள்ள பயங்கரவாதத் தலைவர்களுடன் தொடர்ந்து இவர் தொடர்புகொண்டு வந்துள்ளார். பெரும்பாலும் மின்னஞ்சல், தொலைபேசி ஆகியவை மூலம் இவர் பயங்கரவாதத் தலைவர்களுடன் தகவல்களைப் பரிமாறி வந்துள்ளார்'' என்றும் நீதிமன்றத்தில் அமெரிக்கப் புலனாய்வுக் குழு தாக்கல் செய்துள்ள மனுப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

டேவிட் கோல்மனிடம் அமெரிக்கப் புலனாய்வுக் குழு நடத்திய விசாரணையில், இவர் இந்தியாவில் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்தமையும் இவரது இலக்குப் பட்டியலில் காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்தியின் பெயர் இடம் பெற்றிருந்தமையும் வெளியா கியுள்ளன.

இதையடுத்து டேவிட் கோல்மனிடம் விசாரணை நடத்த இந்தியப் புலனாய்வுக் குழுவினரும் அமெரிக்கா செல்லத்திட்டமிட்டுள்ளனர்.

## ரஷ்ய இராணுவ சரக்கு விமானம் விழுந்து விபத்து: 11 பேர் மரணம்

சைபீரியா, நவ. 03

சைபீரியாவிலுள்ள இக்குத்ஸ்க் என்னுமிடத்தில் ரஷ்யா இராணுவ சரக்கு விமானமொன்று வயலில் விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானது. இதில் 11 பேர் உயிரிழந்தனர்.

விமானம் விழுந்ததும் அதில் தீப்பற்றிக் கொண்டது. அதனால் அனைவரும் உடல் கருகி பலியாகியுள்ளனர். இவ்விமானம் ரஷ்ய உள்துறை அமைச்சகத்துக்குச் சொந்தமானது.

ரஷ்யாவின் யகுசியா பகுதியிலுள்ள மிர்னி என்னுமிடத்திலிருந்து 40 மெட்ரிக் தொன் எடையுள்ள இராணுவத் தளவாடங்கள், வாகனங்கள் ஆகியவை சகிதம் இந்த விமானம் புறப்பட்டுள்ளது.

இலியஷ்கின் ஐ.எல்.76 ரகத்தைச் சேர்ந்த இவ் விமானம் நான்கு இயந்திரங்களைக் கொண்டது. இயந்திரக் கோளாறு காரணமாக இவ்விமானம் விபத்துக்குள்ளாகி இருக்கலாம். எனினும், விசாரணை மேற்கொள்ளப் பட்டுள்ளது என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.




# அமெரிக்கப் பொருளாதாரம் வீழ்ச்சியிலிருந்து மெல்ல மீட்சி

## பராக் ஒபாமா தெரிவிப்பு

வாஷிங்ரன், நவ. 03


''அமெரிக்கப் பொருளாதாரம் வீழச்சியிலிருந்து மெல்ல மீட்சிக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறது. இப்போது எனது அரசு சரியான பாதையில் நடைபோடத் தொடங்கியுள்ளது'' என ஜனாதிபதி பராக் ஒபாமா திருப்தி தெரிவித்துள்ளார்.

உலகின் மிகப் பெரிய பொருளாதாரத்தைக் கொண்டது அமெரிக்கா. இங்கு வரலாறு காணாத பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. வங்கித்துறையே பெருமளவு தோற்றுவிட்ட நிலை.

இதனால் உலகின் பல நாடுகள் பெரிய அளவில் பாதிப்புக்குள்ளாகின. மூன்று ஆண்டுகள் வரை நீடித்த இந்தக் கொடுமை யான வீழ்ச்சியால் பல லட்சம் மக்கள் வேலை இழந்தனர்.

எனினும், இப்போதுதான் இந்நிலையில் இலேசான மாறுதல்கள் தோன்ற ஆரம்பித்துள்ளன. அதேவேளை, வங்கித்துறையில் பெரிய மாற்றம் ஏற்படவில்லை.

ஜனாதிபதி ஒபாமாவின் நிதிச் சலுகைகள் காரணமாக மூன்றாவது காலாண் டில் அமெரிக்கப் பொரு ளாதாரம் வீழ்ச்சியிலிருந்து எழுந்து 3.5 சதவிகித வளர்ச்சியைக் கண்டுள்ளது.



இதுகுறித்து ஜனாதிபதி ஒபாமா குறிப்பிடுகையில், ''நான் பதவி ஏற்றபோது பொரு ளாதாரம் மிக மோசமான நிலையிலிருந்தது. இப்போது வளர்ச்சிக்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கிவிட்டன. எனது தலைமையிலான அரசு சரியான திசையில்தான் செல்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது'' எனத் தெரிவித்துள்ளார்.

''எனினும், இன்னும் நிறைய சோதனைகள் பாக்கியுள்ளன. இதை நான் அறி வேன். வேலைச் சந்தையை சீரமைக்க வேண்டிய பெரும் பணி உள்ளது. அதன் ஒரு பகுதியாக 6 லட்சத்து 50 ஆயிரம் வேலைவாய்ப்புகளை காப்பாற்றியுள்ளோம். வேலை இழப்பைத் தடுப்பதில் தொடர்ந்து தீவிர கவனம் செலுத்தப்படும்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய விமானத்தைத் தகர்க்கப் போவதாக மிரட்டல்; 126 விமான நிலையங்களிலும் 7 அடுக்குப் பாதுகாப்பு!

சென்னை, நவ. 03

மும்பையிலுள்ள ஏயார் இந்தியா அலுவலகத்துக்கு வந்த ஈ மெயில் மிரட்டலை அடுத்து சென்னை விமான நிலையத்துக்கு 7 அடுக்குப் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

மும்பையில் உள்ள ஏயார் இந்தியா அலுவலகத்துக்கு கடந்த சனியன்று மிரட்டல் மின்னஞ்சல் வந்தது. அதில், இந்தியாவில் இருந்து நவம்பர் முதலாம் திகதி புறப்படும் ஏதாவது ஒரு ஏயார் இந்தியா விமானத்தை தீவிரவாதிகள் குண்டுவைத்து தகர்க்கப் போகிறார்கள் என்று தெரிவிக்கப் பட்டிருந்தது.

அதிர்ச்சி அடைந்த மும்பை ஏயார் இந்தியா அலுவலக அதிகாரிகள், உடனடியாக டில்லியில் உள்ள மத்திய சிவில் விமான போக்குவரத்து துறைக்குத் தெரியப் படுத்தினர்.

இதையடுத்து, விமானப் போக்குவரத்து துறை அமைச்சகமும் விமான நிலையங்களின் தலைமை ஆணையமும் இணைந்து இந்தியாவிலுள்ள எல்லா விமான நிலையங்களையும் உஷார்ப்படுத்தின. உடனடியாக சென்னை உட்பட 126 விமான நிலையங்களிலும் 7 அடுக்குப் பாதுகாப்பு நேற்று முன்தினம் காலையிலிருந்து அமுல்படுத்தப்பட்டது.

சென்னை விமான நிலையத்தில் நேற்று முன்தினம் காலையில் இருந்தே விமானப் பாதுகாப்புப் படையினர், விமான நிலையப் பொலிஸார், உளவுப் பிரிவுப் பொலிஸார், வெடிகுண்டு நிபுணர்கள் மற்றும் அதிரடிப்படை வீரர்கள், விமான நிலையத்தின் உள்பகுதி மற்றும் வெளிப் பகுதியில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

விமான நிலையத்துக்கு வரும் எல்லா வாகனங்களும் நுழைவு வாயிலிலேயே நிறுத்தப்பட்டு, மோப்ப நாய்களின் உதவியுடன் சோதனை செய்யப்பட்டு விமான நிலையத்துக்குள் அனுமதிக்கப்பட்டன. ஏயார் இந்தியா விமானத்தில் பயணம் செய்யும் பயணிகளிடம் 4 அடுக்கு சோதனை செய்யப்பட்டது. பாதுகாப்பு சோதனைக்காக கூடுதல் பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர். 4 அடுக்கு சோதனைகள் நடந்ததால் விமானங்கள் 15 நிமிடம் தாமதமாக புறப்பட்டன.

ஒவ்வொரு விமானத்திலும் 2, 3 அதிரடிப் படையினர் பாதுகாப்புக்கு உடன் சென்றனர். வெடிகுண்டு மிரட்டல் வழக்கமாக வரும் புரளிதான். எனினும், எந்த தகவலையும் அலட்சியம் செய்யாமல் 100 சதவீதம் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்துள்ளோம். அதனால் எந்த அசம்பாவிதமும் நடக்காது. பயணிகள் பயம் இல்லாமல் தைரியமாக செல்லலாம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

# புதுவையில் கடும் மழை; இடி தாக்கி மூவர் மரணம்

புதுச்சேரி, நவ.03

வங்க கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை மற்றும் பருவ மழை தொடங்கியதன் காரணமாக புதுச்சேரி பகுதியில் கடந்த சில நாள்களாக மழை பெய்தது. நேற்றுமுன்தினம் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. அதன்போது இடி தாக்கி மூவர் உயிரிழந்தனர்.

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் அருகே வசவன்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் இடிதாக்கியதில் இறந்தார். படுகாயமடைந்த 3 பேர் மரக்காணம் அரச வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர்.

இதேபோல், திண்டிவனம், புதுச்சேரியிலும் நேற்றுமுன்தினம் இருவர் இடிதாக்கி உயிரிழந்தனர்.

# எடியூரப்பா அரசைக் காப்பாற்ற அத்வானி இறுதிக் கட்ட முயற்சி

டில்லி, நவ. 03

கர்நாடகாவில் எடியூரப்பா அரசைக் காப்பாற்றும் இறுதி முயற்சியில் பா.ஜ.க வின் மூத்த தலைவர் அத்வானி ஈடுபட்டுள்ளார். அதிருப்தித் தலைவர்களை அவர் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசினார்.

கர்நாடகாவில் முதல்வர் எடியூரப்பாவுக்கு எதிராக பெல்லாரி சகோதரர்கள் என்று அழைக்கப்படும் வருவாய் துறை அமைச்சர் கருணாகர ரெட்டியும் அவரது சகோதரர் சுற்றுலாத்துறை அமைச்சர் ஜனார்த்தன ரெட்டியும் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

எடியூரப்பாவை முதல்வர் பதவியில் இருந்து நீக்கும்படி இவர்கள் வலியுறுத்தி வருகின்றனர். இவர்களுக்கு 45 எம்.எல். ஏக்களின் ஆதரவுள்ளது.

சபாநாயகர் ஜெகதீஷ் ஷெட்டரும் தனது ஆதரவு எம்.எல்.ஏக்கள் 22 பேருடன் எடியூரப்பாவுக்கு எதிராக குரல் கொடுக்கிறார்.

இதனால், கர்நாடக ஆளும் கட்சியில் பெரும் பிளவு ஏற்பட்டுள்ளது. உட்பூசலைத் தீர்க்க, டில்லியில் இருந்த வந்த கர்நாடகா மாநில பா.ஜ.க. பொறுப்பாளர் அருண் ஜெட்லி, அதிருப்தி கோஷ்டிகளுடன் நடத்திய பேச்சு தோல்வி அடைந்ததால் டில்லி திரும்பினார்.

இந்த நிலையில், பிரச்சினையைப் பேசித் தீர்ப்பதற்காக ரெட்டி சகோதரர்களையும், அவரது ஆதரவு அமைச்சர்கள் மற்றும் எம்.எல்.ஏக்களையும் டில்லி வருமாறு பா.ஜ.க. தலைமை உத்தரவிட்டது.

டில்லி சென்ற பெல்லாரி சகோதரர்களின் ஆதரவாளர்களான கர்நாடக உள்துறை அமைச்சர் ஆச்சார்யா, சட்ட அமைச்சர் சுரேஷ்குமார், முன்னாள் மத்திய அமைச்சர் தனஞ்செயகுமார் ஆகியோர் டில்லியில் கட்சியின் மூத்த தலைவர் அத்வானியை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினர்.

முதல்வராக எடியூரப்பாவே நீடிப்பார் அவருக்கு நீங்கள் எல்லோரும் ஆதரவு தரவேண்டும். கட்சி கட்டுப்பாட்டை மீறாமல் ஒற்றுமையாக இருந்து ஆட்சி தொடர்ந்து நடக்க ஒத்துழைப்புத்தரவேண்டும். பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக்கொள்ளலாம் என்று அவர்களிடம் அத்வானி வலியுறுத்தினார். ஆனால் இதை அதிருப்தி குழுவினர் ஏற்றுக் கொள்ளவில்லை.

இதன்பின், அதிருப்திக் குழுவினர், கட்சித் தலைவர் ராஜ்நாத் சிங்,சுஷ்மா சுவராஜ் ஆகியோரை சந்தித்துப் பேசினர். அவர்களிடமும் தங்கள் கோரிக்கையை தெரிவித்தனர்.

ஆனால், அவர்களும் அதை நிராகரித்தனர். எடியூரப்பாவை முதல்வர் பதவியில் இருந்து நீக்கும் பேச்சுக்கே இடமில்லை. அதிருப்தியாளர்களின் பிரச்சினைகளைப் பேச்சு மூலம் தீர்த்துக் கொள்ளலாம் என்று அத்வானியும் மற்றத் தலைவர்களும் கூறிவிட்டனர் என்று தலைவர்களைச் சந்தித்த பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த தனஞ்செயகுமார், தெரிவித்தார். அதிருப்தித் தலைவர்களுடன் அத்வானி மீண்டும் பேசுவார் என்று தெரிகிறது.

# இராமேஸ்வரம் கோயிலில் அநாதையாக கிடந்த அழகிய ஆண் குழந்தை!

## வீசியவர் யார் எனப் பொலிஸார் தேடுதல்

இராமேஸ்வரம், நவ. 03

குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்கள் இராமேஸ்வரப் பெருமானுக்கு நேர்த்தி வைத்து அங்கு சென்று வழிபடுவதுண்டு. ஆனால் அதே ஆலயத்தில் அழகிய ஆண் குழந்தை ஒன்று அநாதரவாக விடப்பட்டு கோயில் பெண் பணியாளர் ஒருவரால் கண்டெடுக்கப்பட்ட சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இராமேஸ்வரம் கோயிலில் நடை சாத்திய பின்பு சன்னதிக்குள் ஓர் ஆண் குழந்தை அனாதையாகக் கிடந்தது. அதனை வீசிச் சென்ற தாய் யார் என்று பொலிஸார் தேடி வருகிறார்கள்.

நேற்றுமுன்தினம் மதியம் பக்தர்கள் தரிசனத்திற்குப் பின்பு கோயிலில் நடை சாத்தப்பட்டது. வழக்கமாக கோயில் நடை சாத்தப்பட்ட பின்னர் பாதுகாப்புப் பணிக்காக கோயில் பணியாளர்கள் பிரகாரங்களில் சுற்றி வருவது வழக்கம். அதே போல நேற்றுமுன்தினமும் ஊழியர் மகாலட் சுமி ஆலயப் பிரகாரம் ஒன்றைச் சுற்றி வந்த போது, காசிவிஸ்வநாதர் சன்னதி அருகே ஒரு பெரிய தோல் பை இருப்பதைக் கண்டார்.

அருகே சென்று அந்த பையை எடுத்து பார்த்தபோது திடுக்கிட்டுப் போனார். அந்தப் பையில் பிறந்து பல நாள்களானதாகக் கருதப்படும் அழகான ஆண் குழந்தை ஒன்று மயங்கிக் கிடந்தது. அதன் தொப்புழ் கொடிகூட அறுக்கப்படவில்லை. குழந்தைப் பாக்கியம் வேண்டி வரும் அந்த கோயிலுக்குள் ஒரு ஆண் குழந்தையை அனாதையாக விட்டுச் சென்ற தாய் யார் என்று தெரிய வில்லை. அந்தக் குழந்தையை குறித்த ஊழியர் சக ஊழியர்களுடன் சேர்ந்து இராமேஸ் வரத்திலுள்ள ஒரு தனியார் வைத்திய சாலையில் சேர்த்தார். டாக்டர்கள் குழந்தைக்கு தீவிர சிகிச்சை அளித்து மயக்கம் தெளியவைத்தனர். பின்னர் அதை மகாலட்சுமியிடம் ஒப்படைத்தனர்.

# உணவுப்பொருளில் 'ஈஸ்ட்ரோஜென்' பத்து வயதில் பூப்பெய்தும் பெண்கள்!

## டாக்டர் முரளிதரன் கூறுகிறார்

மதுரை, நவ. 03

உணவுப்பொருள்களிலிலுள்ள ஈஸ்ட்ரோஜென் ஓமோன், பெண்களின் உடலில் தேவையை விட அதிகரிக்கும் போது 10 முதல் 12 வயதுக்குள்ளேயே சிறுமிகள் பூப்பெய்துவிடுகின்றனர் - என்று மதுரை அரச மருத்துவக்கல்லூரி மருத்துவத்துறை உதவிப்பேராசிரியர் டாக்டர் முரளிதரன் கூறினார். மக்கள் தொகைப் பெருக்கத்திற்கேற்ப உணவுத்தேவையும் அதிகரித்து வருகிறது. இதைச் சமாளிக்க விஞ்ஞானத்தின் பெயரால், இயற்கையை மீறி பல்வேறு வழிமுறைகளில் உணவு உற்பத்தி செய்யப்படுகின்றது. அவற்றில் ஒன்றுதான் கறிக்கோழி.

இந்த கோழிகள் கறிக்காக மட்டுமே வளர்க்கப்படுகின்றன. வேகமாக வளர கோழிகளுக்கு ஈஸ்ட்ரோஜென் எனப்படும் ஓமோன் ஊசி போடப்படுகிறது. இந்த ஈஸ்ட்ரோஜென் ஊசி செல்களை வேகமாக வளரவைத்து கோழியின் எடையை அதிகமாக்குகிறது. கோழி வளர்ப்போர் சிலர் குறுகிய லாபநோக்கத்தோடு ஈஸ்ட்ரோஜென் மருந்துகளை கோழிகளுக்கு அதிகளவில் கொடுத்துவிடுகின்றனர். இத்தகைய கோழிக் கறி அதிகம் சாப்பிடுபவர்களுக்கு உடலில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுகுறித்து பேராசிரியர் டாக்டர் முரளிதரன் கூறியவை வருமாறு -

உணவுப்பொருள்களில் உள்ள ஈஸ்ட்ரோஜென் சமைத்த பின்னரும் உணவில் கலந்தே இருக்கும் என ஆய்வுக்கட்டுரைகள் கூறுகின்றன. ஈஸ்ட்ரோஜென் பெண்களின் உடலில் தேவையை விட அதிகரிக்கும் போது 10முதல் 12 வயதுக்குள்ளேயே சிறுமிகள் பூப்பெய்துவிடுகின்றனர். மேலும் கர்ப்பப் பை புற்றுநோய், உடல் பருத்தல் போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

ஆண்களுக்கு ஈஸ்ட்ரோஜென் ஹார்மோன்கள் அதிகரிக்கும்போது மார்பக வீக்க நோய் ஏற்படுகிறது. ஆண்களுக்கு மார்பில் வீக்கம் ஏற்பட்டு வலி ஏற்படும். அதேபோல் ஆண்களிடம் பெண் தன்மை, சிறுவர்களுக்கு ஆண்குறியில் வளர்ச்சியின்மை போன்ற பிரச்சனைகள் ஏற்படுகின்றன. எனவே ஈஸ்ட்ரோஜென் பயன்படுத்தப்படும் உணவுப் பொருள்களை குறைத்துக்கொள்வது நல்லது - என்றார்.

# 6 மாநில எல்லைகளில் அதிரடிப் பாய்ச்சல்; நக்ஸல்களை அழிக்க மும்முனைத் தாக்கு!

டில்லி, நவ. 03

ஒரே நேரத்தில் 6 மாநில எல்லைகளிலும் மும்முனை அதிரடித் தாக்குதலை மத்திய படையினர் விரைவில் தொடங்கவுள்ளனர்.

இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் மாவோயிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்த நக்ஸலைட்டுகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். குறிப்பாக, ஆந்திரா, மகாராஷ்டிரா, சட்டீஸ்கர், ஒரிசா, ஜார்க்கண்ட், மேற்கு வங்கம் ஆகிய 6 மாநிலங்களில் நக்ஸல்களின் வன்முறை அதிகமாக நடக்கிறது.

இந்த மாநிலங்களில் உள்ள 40 ஆயிரம் சதுர கிலோமீற்றர் பகுதிகளில் நக்ஸல்களின் வன்முறை செயல்கள் அதிகம். நடக்கின்றன. நக்ஸல் வேட்டையில் பெரும்பாலும் அந்தந்த மாநில பொலிஸாரே ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். நக்ஸலைட்களை ஒடுக்குவதில் மாநிலங்களுக்கு இடையே தகவல் பரிமாற்றம் இல்லாததால், ஒரு மாநிலப் பொலிஸார் தாக்குதல் நடத்தினால், எல்லை தாண்டி அடுத்த மாநிலத்துக்கு நக்ஸலைட்கள் தப்பிச் செல்கின்றனர்.

இதனால், நக்ஸல் வேட்டையில் மாநில பொலிஸாருக்கு உதவியாக மத்திய படையினரையும் ஈடுபடுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி, ஒரே நேரத்தில் 6 மாநிலங்களிலும் விரைவில் நக்ஸல் வேட்டையைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. குறிப்பாக ஆந்திரா, மகாராஷ்டிரா, சட்டீஸ்கர் ஆகிய 3 மாநிலங்களின் எல்லைகளும் ஒன்று சேரும் பகுதி, அதேபோல் ஒரிசா, ஜார்க்கண்ட், சட்டீஸ்கர் மற்றும் மேற்கு வங்கம், ஜார்க்கண்ட், ஒரிசாவின் பொது எல்லைப்பகுதிகளில் மும்முனை தாக்குதல் நடத்த திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

நக்ஸல்கள் மீது நடத்தப்பட உள்ள மும்முனைத் தாக்குதலில் 40 ஆயிரம் மத்திய படையினர் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

# 36 ஆவது பிறந்தநாளில் 'ஸ்மைல்' அமைப்பின் தூதரானார் ஐஸ்வர்யா!

டில்லி, நவ. 03

முன்னாள் உலக அழகியும், பொலிவுட் நடிகையுமான ஐஸ்வர்யா ராய் 'ஸ்மைல்' அமைப்பின் கௌரவ விளம்பரத் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.

'ஸ்மைல் டிரைன்' என்ற தொண்டு நிறுவனம், சர்வதேச அளவில் உதட்டுப் பிளவுடன் பிறந்த குழந்தைகளுக்கு இலவச சிகிச்சை அளித்து வருகிறது. இந்நிறுவனத்தின் சார்பில் தயாரிக்கப்பட்ட 'ஸ்மைல் பிங்கி' என்ற குறும்படம் இந்த ஆண்டுக்கான ஒஸ்கர் விருதை வென்றது.

இந்நிலையில், முன்னாள் உலக அழகியும், பொலிவுட் நடிகையுமான ஐஸ்வர்யா ராய் தனது 36ஆவது பிறந்த நாளை நேற்று முன்தினம் கொண்டாடினார். இந்நாளிலேயே அவர் 'ஸ்மைல்' அமைப்பின் கௌரவ விளம்பரத் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த அமைப்பின் செயற்பாடுகள் குறித்து இந்தியா உட்பட உலகின் 76 வளரும் நாடுகளில் ஐஸ்வர்யா விழிப்புணர்வை ஏற்படுத்துவார். பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கு இலவச சிகிச்சை கிடைப்பதற்கு இவர் உதவுவார்.

இந்தியாவில் மட்டும் 10 லட்சம் குழந்தைகள் உதட்டுப் பிளவு சிகிச்சைக்காக காத்திருக்கின்றனர் என புள்ளி விவரம் கூறுகிறது. இதில் 50 சதவீத குழந்தைகளுக்கு மட்டுமே மருத்துவ உதவி கிடைக்கிறது. ஏழ்மை காரணமாக மற்றவர்கள் சிகிச்சை பெற முடியாத நிலையில் இருக்கின்றனர் எனவும் இந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாக்கடலில் இழுவைப் படகு மூலம் தொழில் செய்வது தற்காலிகமாக இடைநிறுத்தம்

## கடற்றொழிலாளர்களுடன் அமைச்சர் டக்ளஸ் ஆராய்வு

வண்ணை, நவ.03

குருநகர் இறங்கு துறை ஊடாகச் செல்லும் இழுவைப் (ரோலர்) படகுகள் தற்காலிகமாக தொழிலுக்குச் செல்வதற்கு சங்கத்தால் தடுக்கப்பட்டிருப்பதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

இழுவைப்படகுகள் குடாக்கடல் நீரேரியில் தொழிலில் ஈடுபடுவதால் சிறு தொழில்கள் பாதிக்கப்படுவதாகவும் அதே வேளை ஆழ்கடல்களில் இழுவைப் படகுகளுக்குத் தகுந்த தொழில் வாய்ப்புக்கள் இல்லையென்றும் இரு தரப்பினராலும் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

வாரத்தில் ஞாயிறுதவிர மூன்று நாள்கள் சிறு தொழில்களும், மூன்று நாள்கள் இழுவைப்படகுகளும் தொழில் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த கட்டத்தில் வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய கதையாக இழுவைப்படகுகளை தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருப்பது அமைந்துள்ளதாக அத்தொழிலில் ஈடுபடும் நூற்றுக்கணக்கான மீனவத் தொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந் நிலை நேற்று திங்கட்கிழமை தொடக்கம் நடைமுறையில் இருப்பதாக மீனவர்கள் கூறினர்.

இதேவேளை-

இழுவைப் படகில் சென்று கடலில் தொழில் செய்வதை மட்டுப்படுத்துவது தொடர்பாக குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத்தினால் ஞாயிற்றுக்கிழமை குருநகர் சென்.ஜோன் மகா வித்தியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடலில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு கடற்றொழிலாளர்களின் பலதரப்பட்ட அபிப்பிராயங்களைக் கேட்டறிந்தார்.

இழுவைப் படகுகளை தொழிலுக்காக மட்டுப்படுத்தவென மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் பற்றி இழுவைப் படகில் தொழில்செய்யும் கடற்றொழிலாளர்களின் அபிப்பிராயங்களைத் திரட்டி பெரும்பான்மையோரின் முடிவுக்கிணங்க நடைமுறைச் சாத்தியமான தீர்மானம் ஒன்றை மேற்கொள்வதற்கு வசதியாக இக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சுமார் 300க்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் அப் பகுதிக்கான ஜே/68 மற்றும் ஜே/69 கிராம சேவகர் பிரிவுக்குப் பொறுப்பான கிராம உத்தியோகத்தர்கள், யாழ்.மாநகரசபை உறுப்பினர்கள் மற்றும் அப் பகுதிக்குப் பொறுப்பான படைத்தரப்பின் அதிகாரிகள், கடற்றொழிலாளர்கள் அபிவிருத்தி சங்கத்தின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.

கரையூர் , குருநகர், நாவாந்துறை, கொழும்புத்துறைப் பகுதிகளைப் பொறுத்த வரை இழுவைப்படகின் மூலமான கடற்றொழில் மட்டுப்படுத்தப்படுமாயின் அத் தொழிலை தற்சமயம் மேற் கொண்டு வரும் 500 க்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்களின் குடும்பங்கள் பாதிப்பை எதிர்நோக்க வேண்டி வரும் என்று அங்கு கருத்து தெரிவித்த கடற்றொழிலாளர் ஒருவர் தெரிவித்தார்.

இது பற்றி குறிப்பிட்ட மற்றொரு கடற்றொழிலாளர், சிறுபடகில் தொழில் செய்வோருக்கு பாதிப்பு ஏற்படாத வகையில், அத் தொழிலாளர்கள் தொழிலில் ஈடுபடாத தினமான சனிக்கிழமை அன்று குடாக்கடலிலும், வாரத்தில் ஏனைய இரு தினங்களில் குடாக் கடலுக்கு அப்பாலுள்ள கடற்பகுதிகளிலும் இழுவைப் படகில் தொழில் செய்வதற்கு அனுமதி வழங்கப்படுமாயின் அது அத் தொழிலை மேற்கொள்வோருக்கு சாதகமாக அமையும் என்ற கருத்தை முன்வைத்தார்.

அனைத்துத் தொழிலாளர்களின் கருத்துக்களையும் செவிமடுத்த அமைச்சர் அனைவருக்கும் பாதிப்பில்லாத வகையில் தொழிலை முன்னெடுப்பதற்கு வசதியாக கடற்றொழில் தொடர்பான வரையறைகளை கொண்ட முடிவொன்றை விரைவில் வெளியிடவுள்ளதாகத் தெரிவித்தார்.

அத்துடன் குருநகர் மீன் சந்தைக்கு இறங்கு துறையில் இருந்து மீனைக் கொண்டு வருவதில் தடையாகவுள்ள பாதுகாப்புக் கம்பி வேலியால் கடற்றொழிலாளர்கள் சிரமங்களை எதிர் கொள்வதாகத் தெரிவித்த முறைப்பாட்டை அடுத்து அப் பகுதிக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரி சகிதம் அங்கு சென்ற அமைச்சர் அக் கம்பி வேலியால் படகில் உள்ள மீன்களை கரையேற்றுவதிலுள்ள சிரமங்களை பாதுகாப்பு அதிகாரிக்கு விளக்கியதை அடுத்து அக் கம்பி வேலியை சற்று விலக்கிக் கொள்வதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது. (1-160)

# நாச்சிமார் கோயிலடி உப தபால்நிலையம் இடம்மாறியது

வண்ணை, நவ.03

யாழ்.நாச்சிமார் கோயிலடி உப தபால் நிலையம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில வருடங்களாக கே.கே. எஸ். வீதியில் மதகடிக்குச் சமீபமாக மேற்படி உபதபால் நிலையம் இயங்கி வந்தது.

கடந்த வாரம் முதல் நாச்சிமார் கோவில் அரசடிச் சந்தியால் மேற்கே சென்று தெற்காக செல்லும் சிவப்பிரகாசம் வீதியில் இருந்து வடமேற்காக கிளைவிடும் கேசாவில் வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் உபதபால் நிலையம் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (1 - 160)

# விதை உருளைக்கிழங்கு விநியோகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.03

யாழ்.மாவட்ட உருளைக் கிழங்கு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு முதற் கட்டமாக விதை உருளைக் கிழங்கு வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளன தலைவர் சி.பொ.வ.மா.க. முதலியார் தலைமையில் இந் நிகழ்வு இடம் பெற்றது.

முதற்கட்டமாக 46 விவசாயிகளுக்கு 89 உருளைக்கிழங்குப் பெட்டிகள் யாழ். 'சீட்கோ' நிறுவனத்தில் வைத்து வழங்கப் பட்டன.

அடுத்த வாரத்தில் 620 பெட்டிகள் குடாநாட்டில் உள்ள சகல விவசாயிகளுக்கும் வழங்கப்படவுள்ளன. (1-302)

# புதிய பொலிஸ்மா அதிபராக மஹிந்த பாலசூரிய நியமனம்



கொழும்பு, நவ.03

புதிய பொலிஸ் மா அதிபராக மஹிந்த பாலசூரிய நியமிக் கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முற்பகல் வழங்கினார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் மா அதிபராக நியமனம் பெறுவதற்கு முன் மஹிந்த பாலசூரிய இது வரை பொலிஸ் தலைமையகத்தின் நிர்வாக நடவடிக்கைக்குப் பொறுப்பான பொலிஸ் மா அதிபராகக் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதுவரை காலமும் பொலிஸ்மா அதிபராக இருந்த ஜயந்த விக்கிரமரட்ண கடந்த 31ஆம் திகதியுடன் ஓய்வுபெற்றமை குறிப்பிடத்தக்கது.

(அ-சி)

# சீனப் படைகளுடன் ரோந்து; இலங்கை கடற்படை மறுப்பு!

இலங்கைகடற்படையினருடன்இணைந்து சீனக் கடற்படையைச் சேர்ந்தவர்கள் இந்து சமுத்திரக் கடல் பகுதியில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுவதை இலங்கைக் கடற்படை மறுத்துள்ளது.

இலங்கைக் கடற்படைக் கப்பல்களில் சீனப் பிரஜைகள் எவரும் இல்லையெனக் குறிப்பிட்டுள்ள கடற்படைப் பேச்சாளர் டி.பி.கே. தஸநாயக்க், அங்கு சீனப் பிரஜைகள் இருக்கவேண்டிய அவசியமும் இல்லையென்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்பரப்பிற்குள் நுழையும் இந்திய மீனவர்கள் தாக்கப்படுகின்றனர் என வெளியான குற்றச்சாட்டுகளையும் அவர் நிராகரித்துள்ளார். ''நாங்கள் அவர்களை மனிதாபிமான முறையில் நடத்துகிறோம்'' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# குடாநாட்டு மின் விநியோகத்தை சீராக்குவது குறித்து மின்சாரசபை அதிகாரிகளுடன் அமைச்சர் டக்ளஸ் ஆராய்வு

யாழ்ப்பாணம், நவ.03

குடாநாட்டு மின் விநியோகத்தை சீராக மேற்கொள்ள வசதியாக மேலும் நான்கு மின் பிறப்பாக்கிகள் கொழும்பில் இருந்து எடுத்து வரப்படவிருக்கின்றன.

அந்த இயந்திரங்களை உரிய இடத்தில் நிறுவுவது தொடர்பாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மின்சார சபையின் தலைவர் மற்றும் யாழ். அலுவலக அதிகாரிகளுடன் நேரில் ஆராய்ந்தார்.

குடாநாட்டிற்கான மின்விநியோக நடவடிக்கைகளைப் பார்வையிடும் பொருட்டு இலங்கை மின்சாரசபையின் கீழ் இயங்கும் சுன்னாகம் மின் விநியோக நிலையத்திற்கு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் விஜயம் செய்தார்.

கடந்த கால யுத்தம் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டு வெளிமாவட்டத்தில் தங்கியிருந்த குடாநாட்டு மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிக்கொண்டிருக்கும் நிலையில் அதிகரித்துள்ள மின் தேவையை ஈடுசெய்யும் விதத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மின்சார சபை அதிகாரிகளுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடினார்.

மின்சார சபையின் தலைவர் மற்றும் மின்சார சபையின் யாழ்.அலுவலகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் பலரும் சுன்னாகம் மின் விநியோக நிலையத்திற்கு வருகை தந்து அமைச்சருடன் கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

ஏற்கனவே எரிபொருள் மூலம் இயங்கி வந்த மின் உற்பத்தி இயந்திரங்கள் செயலிழந்துள்ள நிலையில் அவற்றை இடம்மாற்றுவதுடன் அவற்றுக்குப் பதிலாக் புதிய இயந்திரங்களைப் பொருத்தி மேலதிக மின்விநியோகத்தை மேற்கொள்வது குறித்தும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மின்சார சபையின் தலைவர் மற்றும் யாழ். அலுவலக உயரதிகாரிகள் ஆகியோருடன் கலந்துரையாடினார்.

கொழும்பில் இருந்து புதிதாக கொண்டுவரப்பட்டுள்ள 3 மின்பிறப்பாக்கி இயந்திரங்களுடன் மேலதிகமாக இன்னும் 4 இயந்திரங்கள் கொண்டு வரப்படவுள்ளதினால் அவற்றை உரிய இடத்தில் செயற்படுத்தி மின் விநியோகத்தை விரைவில் ஆரம்பிப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய ஏற்பாடுகள் குறித்தும் அமைச்சர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார் (1)

# ஐ.தே. கட்சி பொதுச் செயலாளருக்கு தொடர்ச்சியாக கொலை மிரட்டல்!

கொழும்பு, நவ. 03

ஐ.தே.க. பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தமக்குத் தொடர்ச்சியான படுகொலை அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்ட வண்ணம் உள்ளன என்று தெரிவித்துள்ளார்.

ஆயினும் தாம் இப்படுகொலை அச்சுறுத்தல்கள் குறித்து பொலிஸ் திணைக்களத்துக்கோ, பொலிஸ் மா அதிபருக்கோ முறைப்பாடு எதனையும் மேற்கொள்ளப் போவதில்லை என்றும் அவர் கூறினார்.

ஏன் நீங்கள் பொலிஸில் முறைப்பாடு மேற்கொள்ளப் போவதில்லை என்று ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர் ''முறைப்பாடு செய்து தான் என்ன பயன்? பொலிஸ் திணைக்களமோ, பொலிஸ் மா அதிபரோ இவ்விடயத்தில் பக்கச்சார்பற்ற சுதந்திரமான விசாரணைகளை ஒருபோதும் நடத்தப் போவதில்லையே'' என்றார். அவர் மேலும் தெரிவிக்கையில், தேர்தல்கள் அண்மித்து வரும் இந்நாள்களில் அரசு தம்மைத் தொடர்ச்சியாகக் கண்காணித்து வருகின்றது என்றும் கூறினார்.

(அ-சி)

# அரசியல் பிரமுகர்களின் தொலைபேசி உரையாடல்கள் நவீன தொடர்பு முறைகளால் ஒற்றுக் கேட்கப்படுகின்றனவாம்

கொழும்பு, நவ.03

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முக்கிய அமைச்சர்கள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள், ஐ.தே.க. பிரமுகர்கள், எதிர்க்கட்சிப் பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோரின் தொலைபேசி உரையாடல்களை நவீன தொலைத்தொடர்பு முறைகளைப்பயன்படுத்தி அரசுத் தலைமை ஒற்றுக்கேட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் ஆகியன வெகு விரைவில் இடம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையிலேயே அரச உயர்பீடம் இந்த ஒற்றுக் கேட்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, மைத்திரிபால சிறிசேன, ஏ.எச்.எம்.பௌஸி, ஜோன் செனவிரத்ன, அனுர பிரியதர்ஷன யாப்பா, ராஜித சேனாரட்ன, மனோ விஜேரட்ன மற்றும் ஐ.தே.க. பிரமுகர்களான ரணில் விக்கிரமசிங்க, திஸ்ஸ அத்தநாயக்க, தயாசிறி விஜேசேகர, எஸ்.பி. திஸநாயக்க, பாலித ரங்க பண்டார மற்றும் ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன் ஆகியோரின் தொலைபேசி உரையாடல்கள் இவ்வாறு ஒற்றுக்கேட்கப்படுகின்றன என்று தெரிய வருகிறது.

சில எதிர்க்கட்சியினரின் தொலைபேசி உரையாடல்கள் ஒவ்வொருநாளும் 24 மணித்தியாலங்களும் இடைவிடாமல் ஒட்டுக் கேட்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது. அரசில் அதிருப்தி அடைந்திருக்கும் அமைச்சர்கள் கட்சித் தாவல்களை மேற்கொள்ளக்கூடும் என்பதாலேயே அமைச்சர்களும் இவ்வாறு கண்காணிக்கப்படுகின்றனர் என்று சொல்லப் படுகின்றது.

ஐ.தே.க. செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தமது தொலைபேசி உரையாடல்கள் அரசினால் ஒற்றுக் கேட்கப்படுகின்றது என்று ஊடகங்களுக்கு உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

(அ-சி)

# நெதர்லாந்தில் தஞ்சம் மறுக்கப்பட்ட இலங்கையர்களை அனுப்பவேண்டாம்

## அந்நாட்டிலுள்ள தமிழ் அமைப்புகள் கோரிக்கை

கொழும்பு, நவ.03

நெதர்லாந்தில் தற்போது அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்டு முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்பக் கூடாது என்று வலியுறுத்துவதற்காக நெதர்லாந்திலுள்ள பல தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள் கடந்த சனியன்று உத்ரெக் நகரில் அவசரமாகச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

தமிழ் மக்களுக்கெதிராக மனித உரிமை மீறல்களிலும் போர்க் குற்றங்களிலும் தொடர்ச்சியாக ஈடுபடும் இலங்கை அரசினால், அங்கிருந்து திருப்பி அனுப்பப்படும் தமிழர்களுக்கு ஏற்படவிருக்கும் உயிர் ஆபத்துகள் பற்றி நெதர்லாந்தின் வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதிகளைச் சந்தித்து எடுத்துரைப்பது என்று அதில் முடிவு செய்யப்பட்டது.

இவர்களைத் திருப்பி அனுப்பினால் ஏற்படும் ஆபத்துகளை உறுதிப்படுத்தி, நெதர்லாந்து வாழ் தமிழர்களிடம் கையெழுத்து சேகரிப்பதுடன் டென்மார்க் நகரிலுள்ள வெளிவிவகார அமைச்சை நோக்கித் தமிழ் மக்கள் அமைதியாக ஊர்வலமாகச் சென்று இக்கையெழுத்துகளையும் மகஜரையும் கையளிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்திலுள்ள ஈழ அகதிகளுக்காக தமிழக அரசு ரூபா 12 கோடி ஒதுக்கீடு!

சென்னை, நவ. 03

தமிழகத்திலுள்ள ஈழ அகதிகளின் முகாம் வசதிகளை மேம்படுத்த தமிழக அரசு 12 கோடி ரூபா ஒதுக்கீடு செய்துள்ளது. சென்னையில் முதல்வர் கருணாநிதி தலைமையில் நேற்று நடந்த கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

தமிழகத்தில் பல்வேறு முகாம்களில் இலங்கை அகதிகள் தங்க வைக்கப்பட்டு உள்ளனர். அவர்களுக்கு தமிழக அரசு வசதிகளை செய்து கொடுத்து பல்வேறு உதவிகளையும் செய்து வருகிறது. ஆனாலும் இலங்கை அகதிகள் போதுமான வசதிகள் கிடைக்காமல் அவதிப்படுகின்றனர் என பத்திரிகை ஒன்றில் செய்தி வெளி வந்தது.

இதையடுத்து முதல்வர் கருணாநிதி இலங்கை அகதிகளுக்கு மேலும் கூடுதல் வசதிகள் செய்து கொடுப்பது குறித்து அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் உடனடி ஆலோசனை நடத்த முடிவு செய் தார்.

இந்த ஆலோசனை கூட்டம் நேற்றுக் காலை கோட்டையில் முதல்வர் கருணாநிதி தலைமையில் நடைபெற்றது.

2009 - 2010ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் தமிழக அரசின் சார்பில் ஐந்து கோடி ரூபா ஈழ அகதிகளின் நலன்களைக் கவனிக்கவென ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது அமைச்சர்கள் முகாம்களைப் பார்வையிட்டு நவம்பர் 10 ஆம் திகதிக்குள் அறிக்கை அளித்த பின்னர், அதன் அடிப்படையில் மேலும் இந்த முகாம்களில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு உதவிடும் வகையில் அடிப்படை வசதிகள் மேம்பாட்டிற்காக 12 கோடி ரூபாவை தமிழக அரசின் சார்பில் உடனடியாகச் செலவிடுவது என்றும், அந்தத் தொகையை எவ்வாறு செலவழிப்பது என்பது பற்றி நவம்பர் 10 ஆம் திகதிக்கு பின்னர் அமைச்சர்களின் அறிக்கையின் அடிப்படையில் மேல் நடவடிக்கைகளை எடுப்பது என்று நேற்றைய இக்கூட்டத்தில் முடிவெ டுக்கப்பட்டது.

# அமெரிக்க விஜயத்தின்போது கோத்தபாயவிடம் விசாரணை

## நடந்தது என்கிறார் விமல்வீரவன்ஸ

கொழும்பு, நவ.03

கடந்த ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் பங்குபற்ற அமெரிக்கா சென்றிருந்த கோத்தபாய ராஜபக்ஷ அங்கு குடிவரவு அதிகாரிகளினால் இலங்கையின் யுத்தக் குற்றங்கள் தொடர்பாக விசாரிக்கப்பட்டார். - என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாடொன்றிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

அவர் அங்கு கூறியவை வருமாறு:-

கோத்தபாய ராஜபக்ஷ சுமார் ஒரு மணித்தியாலங்கள் வரை அமெரிக்க அதிகாரிகளால் விசாரிக்கப்பட்டார். ஆனால் மனித உரிமைகள் குறித்து அவரை விசாரிக்க அமெரிக்கர்களுக்கு எந்த உரிமையும் இல்லை. புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் வெற்றியீட்டி தந்த இராணுவ தலைவர்கள், அரசியல் தலைவர்களை அமெரிக்கா வேண்டுமென்றே சீண்டுகின்றது. அந்த வகையிலேயே தற்போது ஜெனரல் சரத் பொன்சேகாவை விசாரணைக்கு உட்படுத்தப் போவதாக அறிவித்துள்ளது.

பாதுகாப்புச் செயலாளருக்கு எதிரான குற்றங்களை திரட்டுவதற்காக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிடம் தகவல்களை பெற முயற்சிக்கின்றது. சரத் பொன்சேகாவின் கருத்துக்கள் எதனையாவது பெற்றுக்கொண்டு அதனைப் பாதுகாப்பு செயலாளருக்கு எதிராக பயன்படுத்த அவர்கள் முனைகிறார்கள். அவ்வாறு பெற்றுக் கொண்டால் அதன்மூலம் ஏதாவது நடவடிக்கைக்கு செல்ல முடியும் என அவர்கள் நம்புகின்றனர்.

ஐக்கிய அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகச் சக்திகள் இலங்கையில் பிரிவினைவாத பயங்கரவாதத்தை தோற்கடிக்க காரணமாக இருந்த, பாதுகாப்பு அதிகாரிகள் உட்பட தளபதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் திட்டமிடுகின்றன என்பது தெளிவாகின்றது.

யுத்த காலத்தின் போது சரத் பொன்சேகா ஆற்றிய கடமைகள் தொடர்பில் அவர்கள் கேள்விகேட்கவில்லை. பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆற்றிய கடமைகள் தொடர்பாகவே அவர்கள் சரத் பொன்சேகாவிடம் கேள்வி கேட்பதற்கு தயாராகி வருகின்றனர்.

பாதுகாப்புச் செயலாளருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான சூழலை சரத் பொன்சேகாவிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்றே அவர்கள் அதன் மூலம் முயற்சி செய்கின்றனர் என் பதை அறியக்கூடியதாக உள்ளது - என்றார்.

## புலிகளின் முக்கிய உறுப்பினர் மூவர் கிராண்ட்பாஸில் கைது

கொழும்பு, நவ. 03

கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியில் புலிகள் அமைப்பின் முக்கிய உறுப்பினர்கள் எனக் கூறப்படும் 3 பேரை விசேட பொலிஸ் பிரிவு நேற்றுக்காலை கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமால் மெதிவக்க தெரிவித்தார்.

ஏற்கனவே கைது செய்யப்பட்ட புலிச் சந்தேக நபர்களிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையிலேயே இந்த மூவரும் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் தடுப்புகாவலில் வைக்கப்பட்டு அவர்களிடம் பயங்கரவாதத் தடுப்பு பிரிவினர் விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-சி)

### குடாநாட்டில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றிரவு தெரிவித்தார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த 289 குடும்பங்களைச் சேர்ந்த 894 பேர் நேற்று அழைத்துவரப்பட்டிருந்தனர்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் வைத்து அவர்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

சமூக சேவைகள் மற்றும் சமூகநலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், செயலக திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் ஆகியோர் பிரசன்னமாகி மீள்க்குடியமர்வோரை அனுப்பும் பணிகளை மேற்கொண் டனர்.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

சில பிரதேச செயலகங்களைச் சேர்ந்த குறைந்த எண்ணிக்கையானவர்களே இன்று வரவுள்ளதால், அவர்கள் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் வைத்து உறவினர்களுடன் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று அரச அதிபர் தெரிவித்தார்.

### எதற்காகவும்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நன்மைகளுக்காக எவரையும் காட்டிக் கொடுக்கமாட்டேன் - என்றார்.

இதேவேளை அமைச்சர் சம்பிக் கரணவக்கவின் ஏற்பாட்டில் அமெரிக்காவில் வாழும் ஹெல உறுமயவின் ஆதரவாளர்கள் அமெரிக்காவில் சரத் பொன்சேகாவை விசாரிக்கும் முடிவுக்கு எதிர்ப்பு ஆர்பாட்டம் ஒன்றையும் நடத்தியுள்ளனர்.

அதேவேளை அமெரிக்காவிலுள்ள ஜே.வி.பியினதும், ஜாதிக ஹெல உறுமயவினதும் பிரமுகர்கள் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு உதவும் வகையில் சட்ட நிபுணர் குழுவொன்றை ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர். (அ-சி)

### முப்படைகளின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுடன் கலந்துரையாடலை நடத்தியுள்ளார்.

இதன்போது யுத்தக்குற்றம் தொடர்பாக எவராவது, குறிப்பாக அமெரிக்கா, எதனையும் தெரிந்துகொள்ள வேண்டுமானால் அதனை தம்மிடம் கேட்குமாறு ஜனாதிபதி கூறியுள்ளார்.

முப்படைகளினதும் தளபதி என்ற அடிப்படையில் தாமே அதற்குப் பதில் சொல்ல முடியும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தக் கலந்துரையாடலின்போது, சரத் பொன்சேகாவை அமெரிக்க விசாரணைகளுக்கு உட்படுத்த விடாமல் இலங்கைக்கு வரவழைப்பது தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இராஜதந்திரி மட்டத்தில் இது தொடர்பான முனைப்புகளை மேற்கொள்வதற்கும் அதன்போது கருத்துகள் முன் வைக்கப்பட்டுள்ளன. (அ-சி)

### கே.பி யின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணை நடத்த வேண்டும் என இந் தியா இலங்கையை பலகாலமாக கேட்டு வந்த போதிலும் அதனை அனுமதிக்காத இலங்கை தற்போது கொழும்பு வந்திருக்கும் பாகிஸ்தான் புலனாய்வுக் குழுவிற்கு அனுமதி வழங்கியிருப்பது இந்தியாவை பார்க்கிலும் பாகிஸ்தானுக்கு இலங்கை முக்கியத்துவம் கொடுக்கின்றதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது எனவும் கூறப்படுகிறது. (அ-சி)

### அவுஸ்திரேலிய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமானங்களைப் பயன்படுத்தி தேடுதல் நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்றது எனவும் கவிழ்ந்த படகில் மொத்தம் 40 பேர் பயணம் செய்ததாக அறியவந்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மோசமான காலநிலை காரணமாக மீட்புப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.(அ-1)

### எதிர்க்கட்சிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(மங்கள பிரிவு), ஜனநாயக மக்கள் முன்னணி உட் பட 20 கட்சிகளும் சிவில் அமைப்புக்களும் இந்த உடன்படிக்கையில் கைச்சாத் திட விருக்கின்றன என்று ஐ.தே. கட்சிப் பிர முகர் ஒருவர் நேற்றிரவு தெரிவித்தார்.

ஜனநாயகத்தைப் பாதுகாத்து நாட்டு மக்களுக்கு நீதி வழங்குவதற்கு 10 அம்ச கொள்கைத் திட்டம் ஒன்றை முன்னணி முன்வைத்துச் செயற்படும் என்று ஐ.தே. கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையொப்பம் இடுவோர் எதிர்வரும் 14 ஆம் திகதி கண்டிக்குச் சென்று மகாசங்கத்தினரிடம் ஆசிபெறவுள்ளதாகவும், புரிந்துணர்வு உடன்படிக்கையையும் மகாசங்கத்தினரிடம் சமர்ப்பிக்கவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

### பொன்சேகாவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெனரல் பொன்சேகாவை விசாரணை செய்யும் எந்தவித முயற்சியையும் அமெரிக்காவின் உள்நாட்டு பாதுகாப்புத் திணைக்களம் உடனடியாக நிறுத்த வேண்டும் என்று ரோஹித அமெரிக்கத் தூதரிடம் வற்புறுத்தினார்.

அமைச்சரின் இந்த வேண்டுகோளை, நிலைப்பாட்டை தாம் அமெரிக்க அரசின் கவனத்துக்குக் கொண்டு வருவதாக தூதுவர் பற்றீசியா உறுதி அளித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை,

சரத்பொன்சேகாவை அமெரிக்க அரசு விசாரிக்குமானால் அது சட்டவிரோத மானது என்று அமைச்சர் ரோஹித வெளிவிவகார அமைச்சில் நேற்று பிற்பகல் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் வைத்துக் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை அரசின் முன் அனுமதியையோ, ஆலோசனைகளையோ பெறாமல் நாட்டின் பாதுகாப்பு தொடர்பான தகவல்களை மூன்றாம் தரப்பினரிடம் வெளியிடுவதற்கான எவ்வித அதிகாரமும் முப்படைகளின் தலைமை அதிகாரியான ஜெனரல் சரத் பொன்சேகாவிற்குக் கிடையாது

அவர் அவ்வாறு தெரிவிப்பாரேயானால் நாட்டுக்கும், மக்களுக்கும் பாரிய குந்தகத்தை ஏற்படுத்தும் செயலாகவே கருதப்படும். இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது.

இதேவேளை அமெரிக்கா விசாரணைகளை நடத்தமுடியாது. அப்படி நடத்துமானால் அது சட்டவிரோதமானது

சரத்பொன்சேகாவை ஒரு துரும்புச் சீட்டாகப் பயன்படுத்தி கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராகவோ அல்லது நாட்டுக்கு எதிராகவோ விசாரணை நடத்துவதை ஏற்கமுடியாது.

இலங்கையில் யுத்தக்குற்றம் தொடர்பாக அமெரிக்கா தயாரித்த அறிக்கை குறித்து விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமித்துள்ளார். இந்த விடயத்தில் அவர் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார். அந்த விசாரணைக்குழு விசாரணைகளை மேற்கொள்கின்றது. இந்த நிலையில் அமெரிக்கா எந்தவித விசாரணைகளையும் மேற்கொள்ளத் தேவையில்லை.

சரத்பொன்சேகா அரசின் மிக உயர்ந்த பதவியில் உள்ளவர். அவரிடம் இராஜதந்திர கடவுச் சீட்டு உள்ளது. இராஜதந்திரக் கடவுச் சீட்டு உள்ள ஒருவரை இவ்வாறு விசாரணைக்கு உட்படுத்தமுடியாது - என்றார். (அ-சி)


**புதிய பிரிவுகள்**

04.11.2009 முன் பதிபவர்களுக்கு விசேட கட்டணசலுகை

**Diploma Courses...**

*Microsoft / Open Office, Tally
*Computerised Accounting
*DTP *Hardware*ICT *GIT
* Web Development *English
* Video Editing *AutoCAD
* Visual Basic *VB.net *LINUX

**International Courses...**

MCP, MCTS, MCSA
Cisco-CCNA, CCNP
MCSE_Security
ICDL, CIMA, CIW
Sun Java (SCJP)
RED Hat Engineer

**Degree Course**

BIT 1st, 2nd, 3rd Years
University of Colombo

கற்கும் அனைவருக்கும்
Free Courses
ICDL(International Computer Driving Licence
DHT(Hardware), DTP
Sun Java 50%Off
MCP, MCTS 100% OFF

**MCS, Jaffna**
324, பலாலி வீதி, (பரமேஸ்வரா சந்தி அருகாமை) யாழ்.
Supported by UNDP/JRRP



**ஒவ்செற் பிறிண்டிங்**

சகல விதமான ஒவ்செற் பிறிண்டிங்கும் செய்து கொடுக்கப்படும்.

மலர் வெளியீடுகளுக்கு 20% விலைக் கழிவு வழங்கப்படும்.

பரீட்சைப்பேப்பர்கள், மாணவர்களுக்கு பயன் தரும் ஆக்கங்களை குறைந்த விலையில் செய்து கொள்ளலாம்.

இம்பிரசன் சார்ஜ் (அடி கூலி)
A3 - 150/=
A4 - 50/=

நினைவுமலர்கள், அழைப்பிதழ்கள், வியாபார ஸ்தாபனங்களிற்கான பில் வகைகள், கலண்டர்கள், மற்றும் சகலவிதமான அச்சுப்பதிப்புக்களையும் குறைந்த விலையில் செய்து கொள்ளலாம்.

தரத்திற்கு நாங்கள் உத்தரவாதம்

யாழில் M-கொழும்பு பிறிண்டேர்ஸ்

தலைமைக் காரியாலயம் 05, கிராண்பாஸ் நவக்கம்புர 1 கொழும்பு 13.
கிளை 2 :- 666, கே.கே.எஸ். வீதி (யாழ் இந்துக் கல்லூரி அருகாமை) யாழ்.
கிளை 3 :- மானிப்பாய்வீதி ஆலடி சந்தி, யாழ்ப்பாணம்.



**விற்பனைக்கு**

புண்ணாக்கு, தவிடு என்பன விற்பனைக்கு உண்டு.
தொடர்பு -0773807822

**நியூ மொடல் பப்ளிகேசன்**

தரம் 1,2,3,4,5 மூன்றாம் தவணைப் பரீட்சை வினாத்தாள்கள் விற்பனையாகின்றன.

Marketing by
Speed Marketing System,
Jaffna - Sri lanka
(சி-562071)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org